DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன் 647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurence; Citizenship; Permanent resident card renewal; Affidavits for Immigration purposes;
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA Mortgage Solutions Inc.
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1283 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday November 6, 2020

# கோவிட்-19 நெருக்கடி இருந்தும் 38,5 மில்லியன் துண்டு விழும் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த ஒன்றாரியோ நிதி அமைச்சர்

உலகில் உள்ள பல நாடுகள் மற்றும் கனடாவில் உள்ள ஏனைய மாகாண அரசுகள் ஆகியன நிதிப் பிரச்சனைகளால் தடுமாறிய வண்ணம் தங்கள் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் சவால்களைகளை எதிர்நோக்கியுள்ள இந்த நேரத்தில் ஒன்றாரியோவின் டக் போர்ட் அவர்களின் அரசாங்கம் நேற்று 5ம் திகதி வியாழக்கிழமை தனது ஆட்சியின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தது.



திரு ரொட் பிலிப்ஸ் மற்றும் திரு டக் போர்ட்

கடந்த 2019ம் ஆண்டு இந்த டக் போர்ட் அவர்களின் அரசினது வரவு செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையானது 7.4 மில்லியன் டாலர்களாகவே இருந்தது. ஆனால் இந்த நெருக்கடியான நேரத்தில், அதிக நிதி ஒதுக்கீடுகளை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு முகம் கொடுக்கும் ஒன்றாரியோ மாகாண அரசு சற்று அதிகமான துண்டுவிழும் தொகையை உள்ளடக்கி துணிச்சலோடும் ஆனால் எதிர்க்கட்சிகளின் கடுமையான விமர்சனங்களுக்கு மத்தியிலும் மாகாணப் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்தது

இவ்வாண்டிற்கான வரவு செலவுத்திட்டதை மாகாண அரசின் நிதி அமைச்சர் திரு ரொட் பிலிப்ஸ் அவர்கள் சமர்ப்பித்து உரையாற்றினார்

நிதி அமைச்சர் சமர்ப்பித்த வரவுசெலவுத் திட்டம்-2020 ஆனது மொத்த செலவீனமாக 187 மில்லியனைக் கொண்டதாக இருந்தது

கோவிட்-19 தொற்று ஆரம்பித்த நாட்களில் மொத்தச் செலவாக 7.7 மில்லியன் டாலர்களில் செலவாகலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தற்போது 15.2 மில்லியன் டாலர்கள் கோவிட்-19 தொடர்பான நிதித் தேவைகளை ஈடு செய்ய ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் அறிவித்தார். இந்த விடயத்தில் அங்கு சமூகமளித்திருந்த ஊடகவியலாளர்கள் பல கேள்விகளை அவரிடம் வைத்தார்கள்

அவற்றிக்குரிய பதில்களை வழங்கிய அமைச்சர் தொடர்ந்து ஊடகவியலாளர்களிம் பேசுகையில்,

"இந்த வருடத்தில் எமது அரசாங்கம் மக்களிடமிருந்த அறவிடப்படும் வரிகளில் அதிகரிப்பைச் செய்யவில்லை. மேலும் மாகாணத்தில் வாழும் முதியவர்களுக்கும் சிறிய வர்த்தகங்களில் ஈடுபட்டுள்ள ஒன்றாரியோ வாழ் மக்கள் ஆகியோருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பல சலுகைகள் கிடைக்கவுள்ளன ஒன்றாரியோ மாகாணத்தில் வாழும் மக்கள் எமது அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் செலவீனங்களையும் நன்கு அறிவார்கள். இந்த செலவீனங்கள் அனைத்தும் நிலையாகவும் அவர்களால் விரும்பப்படுகின்றவையாகவும் உள்ளன என்பதையும் அவர்கள் புரிந்து கொண்டுள்ளார்கள். எனவே இனிவரும் காலங்களில் எமது செலவீனங்களைக் குறைக்க நாம் முயற்சி செய்வோம். அடுத்த வருடத்தின் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள எமது அரசின் 2021இற்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்த விடயத்தை நாம் கவனத்தில் எடுப்போம்" என்றார்.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8
416.568.4301, 905.471.4050

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX Realtron AD Team

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905 794 4404

அறிவித்தல்களை உலகெங்கும் உடனுக்குடன் உங்கள் உறவுகளுக்கு கொண்டு செல்ல வேண்டுமா?
எமது கனடா உதயன் பத்திரிகையின் இணையத்தளமான www.uthyannews.ca இல் பிரசுரமாகும் அறிவித்தல்கள் மற்றும் அவசர விளம்பரங்கள் உதயன் பத்திரிகையிலும் அத்துடன் எமது சகோதர இணையத்தளங்களான www.nanban.ca மற்றும் www.voicefilankai.lk ஆகியவற்றில் பிரசுரம் செய்யுங்கள்.
உதயன் | நண்பன் | Voice of ilankai | World Wide Web
தொலைபேசி இலக்கங்கள்: கனடா +1 416-587-0552 கொழும்பு: +94 777 555 026 யாழ்ப்பாணம்: +94 7666143 074 சென்னை: +91 784500 6977

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

**GET APPROVED WITHIN 24 HOURS**

**416.298.2777**

**$375 Mo.**

www.mortgageSolutions.ca

**MONTHLY SAVING $2,478**

**SAVE UPTO 75% REFINANCE**



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

**GHURUS TOWING**

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



**NIRMALAN (ROGER):**
**(416) 990-7777**
**(416) 984-7777**

**COMPUTER REPAIR**

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN:**
**(416) 894-6244**

**வேலைக்கு ஆட்கள் தேவை**

ஸ்காபுறோவில்
Markham / Ellesmere
சந்திப்புக்கு அருகில்
Warehouse Workers
and Forklift Driver Needed
for Full-time for Morning Shifts

- Looking for Warehouse Workers & Forklift Driver to add to our team.
- We are looking for hard-working and dedicated people for a long term.

**Essan:**
**(647) 993-2872**

**BASEMENT வாடகைக்கு உண்டு**

Birchmount / Eglinton
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with
separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன்
வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.

**Call: (416) 821-2181**

உதயன் கதிரோட்டம்

# அயல் நாட்டு ஆட்சித் தலைமைக்கான போட்டியில் தாண்டவமாடும் அக்கிரமப் 'புயல்'

இந்தப் பக்கத்தை ஒவ்வொரு வாரமும் அலங்கரிக்கும் எமது கதிரோட்டத்தில் இவ்வாரம் கதிர் வீசவுள்ள விடயம் இவ்வாரத்தின் உலகை ஈர்த்துள்ள அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் முகமாக நடத்தப்பெற்ற தேர்தல். இந்தப் பக்கத்தில் பதிவாகவுள்ள கருத்துக்கள் எமது சொந்தக் கருத்துக்களாக இருந்தாலும் ஏனையோர் சிலரிடம் தங்கியுள்ள பார்வைகளும் இதில் காட்டப்பட்டுள்ளன.

எமது கருத்துக்கள் எழுதப்படுவது கனடாவில் என்பதால் அமெரிக்கா அதன் அயல் நாடாக இருப்பதால் எம்மை விட கனடிய ஆட்சி பீடத்திற்கும் இந்த தேர்தல் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சனைகள் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

2016 ம் ஆண்டு அமெரிக்காவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் ஒரு வர்த்தக அதிபதியாக இருந்ததனால் அவரது பதியேற்பை முதலாளித்துவத்தின் எச்சங்கள் கொண்டாடி மகிழ்ந்தன. ஆனால் டொனால் ட்ரம்ப் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக விமர்ச்சிக்கப்பட்டு வந்தவர். உள்நாட்டில் மட்டுமல்ல, உலகின் பல்வேறு நாட்டுத் தலைவர்களாலும், இதே பார்வையால் நோக்கப்பட்டவர்.

இவ்வாறு அவரது ஆட்சி அதிகாரப் பயணம் கடந்து செல்லும் போது கொடிதான 'கொரோனா' உலகை ஆட்கொண்டது. ஆனாலும் அதற்கும் அச்சப்படாதவராக இருந்த தங்கள் ஜனாதிபதியைப் பார்த்து அமெரிக்க மக்கள் ஆத்திரம் அடைந்தார்கள். மக்கள் மீது அக்கறை இல்லாதவராக தன்னை பொதுவெளியில் காட்டிக் கொள்ளவும் அவர் தயங்கவில்லை. முகக் கவசம் அணியமாட்டேன் என்று அடம்பிடித்தார் அவர்.

காலங்கள் கடந்து செல்ல ஜனாதிபதித் தேர்தலுக்கான நாள் வந்தபோது அமெரிக்காவின் உழைக்கும் நடுத்தர மக்கள் காத்திருந்திருக்க வேண்டும். அதன் விளைவாக 3ம் திகதி நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு எதிராக வாக்களித்தவர்களே அதிகம் என்று வாக்களிப்பும் அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட வாக்குகள் எண்ணும் பணிகளும் காட்டி நின்றன. ஆனால் தான் வெற்றியடையப் போவதில்லை என்று தெரிந்ததும் விரக்த்தியடைந்தவராக அவர் தன்னை அடையாளப்படுத்தத் தொடங்கியுள்ளார். ஜனநாயக விரோத கருத்துக்களை சமூக ஊடகங்கள் மூலமாக பரப்புவதில் அவரது குழு மும்முரமாக இயங்குகின்றது.

ட்ரம்ப் அவர்கள் தேர்தல் வாக்குகள் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கும் போது நியாயமற்ற கருத்துக்களை அள்ளி விசவதைக் கண்ட அமெரிக்க ஊடகங்கள், "ட்ரம்ப் அவர்கள் தான் தோல்வியடைவதைத் தாங்கிக் கொள்ள முடியாதவாறு இவ்வாறு உண்மைக்கு மாறான கருத்துக்களை எவ்வித ஆதாரங்களும் இல்லாமல் பரப்பி வருகின்றார்" என்று பகிரங்கமாகத் தெரிவித்தாலும், அதையும் அவர் கவனிப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் வெற்றிவாய்ப்பை நெருங்கியுள்ள ஜோ பைடன் அமைதியாக இருந்து தனது கருத்துக்களை ஆர்ப்பாட்டம் எதுவும் இல்லாமல் தெரிவித்து வருகின்றார். இன்று வெள்ளிக்கிழமை. இன்றைய நாள் அமெரிக்காவிற்கும் அங்கு வாழும் மக்களுக்கும் என்றுமில்லாத ஒரு அரசியல் நெருக்கடியைத் தரும் நாளாக இருக்கலாம். அல்லது, அனைத்து நெருக்கடிகளும் நீங்கி ஜனாநாயகம் அங்கு பேணப்பட்டு ஜோ பைடன் ஜனாதிபதியாகும் அறிவிப்பு வெளிவரலாம். எனவே இன்று மாலை வரை காத்திருப்போம்.

# ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குவது அரசின் பொறுப்பு என்கின்றது யாழ் ஊடக மையம்

"யார் ஆட்சியில் இருந்தாலும் ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குவது ஒவ்வொரு அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியாகும்" என யாழ். ஊடக மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த நவம்பர் 2 ஆம் திகதி ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்கை ஒழிப்பதற்கான சர்வதேச தினமாகும். அதனை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் ஊடக மையம் மேலும் தெரிவித்திருப்பதாவது

"நடந்து முடிந்த ஊடகப்படுகொலைகள்,காணாமல் ஆக்கப்படுதல் உள்ளிட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்க தயாரில்லாத ஒரு நாடாக இவ்வாண்டினையும் இலங்கை கடந்து செல்கின்றது.

இலங்கையின் ஊடகப்பரப்பில் கூடிய நெருக்கடிகளையும் மரணங்களையும் எதிர்கொண்ட தரப்பாக தமிழ் ஊடகத்தரப்பே இருந்துவருகின்றது.

ஆனாலும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்காத அரசாக இலங்கை இருந்து வருவதால் பொறுப்பு கூறல் என்பதும் கண்டுகொள்ளப்படாதேயிருந்து வருகின்றது.

2000ம் ஆண்ல் பிபிசி ஊடகவியலாளன் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையுடன் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழ் ஊடகப்பரப்பின் மீதான ஊடகப்படுகொலை கலாச்சாரம் 39 இற்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்களை காவு கொண்டு நிற்கின்றது.

அதேவேளை நூற்றுக்கணக்கிலா ஊடகவியலாளர்கள் ஊடகப்பணியிலிருந்து விலகவும் நாட்டை விட்டு வெளியேறவும் இத்தகைய சூழலே காரணமாகியிருந்தது.

ஆனாலும் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான ஒரு குற்றத்திற்கு கூட நீதி வழங்கப்படாத வரலாற்றைக் இலங்கை கொண்டிருப்பதை யாழ்.ஊடக அமையம் பதிவு செய்ய விரும்புகின்றது.

இலங்கை சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது போன்று ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்போம் என்ற வாக்குறுதியுடன் ஆட்சிக்கு வந்த அரசு கடந்த ஆட்சியின் போது பல சம்பவங்கள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்திருந்தாலும், அவை மந்த கதியிலேயே நகர்கின்றன. முன்னாள் பிரதமர் ஒருவரோ விசாரணை செய்ய அதிகாரிகள் இல்லாதிருப்பதாக விளக்கமளித்திருந்தார்.

ஜனாதிபதி,பிரதமர் மற்றும் ஊடக அமைச்சரை சந்தித்து ஊடகப்படுகொலைகள் தொடர்பில் விசாரணைகளை வடக்கு கிழக்கு ஊடகவியலாளர்கள் கோரியிருந்த போதும் அதிசயங்கள் ஏதும் நடந்திருக்கவில்லை.

நாட்டின் வரலாற்றில், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் ஒரு சிலவே.அவற்றிள் கிடப்பில் போடப்பட்டுள்ள தர்மரத்னம் சிவராம் கொலை தொடர்பான வழக்கு ஒன்றாகும். நிமலராஜன் கொலை தொடர்பிலான வழக்கிற்கும் என்ன நடந்ததென்பது தெரியாது.

மற்றையது பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பான உயர் நீதிமன்ற வழக்கு.

பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவத்தில் முக்கிய சந்தேக நபர் ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜராகி, தான் இதற்கு முன் வழங்கிய சாட்சியம் நிர்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்று கூறியுள்ளார். இவ்வாறு கூறியுள்ளதானது, வழக்கில் ஒரு பாதகமான திருப்பத்தை ஏற்படுத்தும் என்பதையே தெளிவாகக் காட்டுகிறது.

மறுபுறம் இப்போதிருப்பது ஊடகவியலாளர்களுக்கு எதிராக அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள் இடம்பெற்ற காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கம் ஆகும். இந்த நிலையில் நீதியான விசாரணைகள் இடம்பெறுமா என்ற கவலையை நீதிக்காக குரல் எழுப்பும் ஊடக சமூகத்தினரிடையே ஏற்படுத்தியுள்ளது.

அக்டோபர் 22 ம் தேதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 20வது திருத்தம், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் சுயாதீனமாக நடத்தப்படுமா என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

20 வது திருத்தத்தின்படி, இலங்கையின் அனைத்து உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உயர் காவல்துறை அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு நியமிக்கப்படும் காவல்துறை அதிகாரிகள் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து இதற்கு முன் செய்யப்படாத வகையில் விசாரணைகளை மேற்கொள்வார்களா?, அத்தகைய நீதிபதிகள் சுயாதீனமாக இருப்பார்களா? என்ற கேள்விகள் இந்த துறையில் எழுந்துள்ளன.

ஏற்கனவே புதிய அரசின் ஊடக அமைச்சர் காணாமல் போனவர்கள் நாட்டை விட்டு தப்பி சென்று புலம்பெயர் தேசங்களில் இருக்கலாமென்ற வியாக்கியானத்தை செய்துள்ளார்.

இந்தப் பின்னணியில்தான், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் நவம்பர் 2 ஆம் தேதி இலங்கையில் அனுஸ்டிக்கப்படுகிறது.

யார் ஆட்சியில் இருந்தாலும் ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குவது ஒவ்வொரு அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியாகும்.

மாறி மாறி யார் ஆட்சியிலிருந்தாலும் நடந்தேறிய ஊடகப்படுகொலைகள் உள்ளிட்ட ஊடக அடக்குமுறைகளிற்கு எதிராக சர்வதேச ஊடக அமைப்புக்கள் முன்னிலையிலான விசாரணை என்பது முக்கிய கோரிக்கையாக யாழ்.ஊடக அமையத்தால் முன்வைக்கப்பட்டுவருகின்றது.

இது தொடர்பாக புதிய அரசாங்கத்தையும் சர்வதேச ஊடக மைப்புக்களையும் யாழ். ஊடக அமையம் நவம்பர் 2: ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்கை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தில் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றது.

## இலங்கை செய்திகள்




# மட்டக்களப்பு மக்களின் நன்மை கருதி மருந்துகளை வீடுகளுக்கு கொண்டு சென்று வழங்க நடவடிக்கை!

தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் நிலைமை காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தொடர்ச்சியாக மருந்துகளைப் பெற்றுக் கொள்ளும் கிளினிக் நோயாளர்களுக்குரிய மருந்துகளை நோயாளர்களின் வீட்டிற்கே கொண்டு சேர்ப்பிப்பதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நிருவாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவைக்காக திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் கிளினிக் இலக்கம் சிகிச்சையளிக்கும் வைத்திய நிபுணரது பெயர் நோயாளர்கள் வசிக்கும் கிராம சேவையாளர் பிரிவு பிரதேச செயலாளர் பிரிவு என்பனவற்றைத் தெளிவாகத் தெரிவித்து மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நோயாளர்கள் தமக்கான மருந்துகள் முடிவடைந்ததும் வைத்தியசாலையின் 065 3133330 அல்லது 065 3133331 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு இந்த விவரங்களை வைத்தியசாலை நிருவாகத்திற்குத் தெரிவித்து தமக்கான மருந்துகளை வீடுகளிலிருந்தவாறே பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மல்லாவியிலிருந்து கொடிகாமம் திரும்பிய இளம் குடும்பஸ்தர் யானை தாக்கி பரிதாப மரணம்!

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் நகரிற்கு அண்மையாக யானைதாக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலே பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இச்சம்பவம் கடந்த செவ்வாயன்று இரவு 10.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மல்லாவியில் தொழில் நிமித்தமாக தங்கியிருந்த நிலையில் கடந்த இரவு மல்லாவி - மாங்குளம் வீதி ஊடாக கொடிகாமத்தில் இருக்கும் தனது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் மாங்குளம் நகரிற்கு அண்மையாக உள்ள முனியப்பர் கோவிலுக்கு அருகே பயணிக்கும் போது வீதியைக் கடந்த யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்கு சென்ற மாங்குளம் பொலிசார் சடலத்தை பொதுமக்களின் உதவியுடன் மீட்டு மாங்குளம் ஆதார வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இச்சம்பவத்தின் போது கற்கோவளம் பருத்தித்துறை யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த ஆணந்தராஜா - விஜயானந்தன் வயது - 35, என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இச்சம்பவத்தில் உயிரிழந் துள்ளார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவது கோவிட் – 19 நோயாளி அடையாளம் காணப்பட்டுள்ளார்



கிளிநொச்சி கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தரும்புரம் மூன்றாம் யுனிட்டைச் சேர்ந்த ஒருவருக்கு கோரோனா வைரஸ் உள்ளமை இன்று இரவு கண்டறியப்பட்டுள்ளது. கொழும்பு கொட்டாஞ்சேனையில் இயங்கும் மயூரா உணவகத்தில் பணியாற்றும் பணியாளருக்கே கோரோனா தோற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவரது உணவகத்தின் உரிமையாளருக்கு கோரோனா தோற்று உள்ளமை கடந்த வெள்ளிக்கிழமை கண்டறியப்பட்ட நிலையில் அங்கு பணியாற்றி ஊழியருக்கு நடத்தப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே கோவிட்-19 தொற்று நோய் உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 28ஆம் திகதி கிளிநொச்சி திரும்பிய அவர், சுய தனிமைப்படுத்தப்பட்டு பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டார்.

கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரியின் சாதூரியமான செயற்பாட்டால் கோரோனா தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரது உறவினர் ஒருவர் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் நிலையில் அவர் கடந்த மூன்று தினங்களாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# "கொரோனாவில்" மூழ்கப்போகின்றதா இலங்கை? மேலும் ஐவர் உயிரிழப்பு! மொத்த எண்ணிக்கை 29

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் மேலும் ஐவர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் இருவர் ஆண்கள் எனவும் மூவர் பெண்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் கொழும்பு 02, 12, 14, 15 மற்றும் வெல்லம்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது

# மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் படுகொலை செய்யப்பட்டார்



மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் இடம் பெற்று வரும் சட்ட விரோத மண் அகழ்வு உள்ளிட்ட சட்ட விரோத செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுத்த உத்தியோகத்தர் ஒருவர் மர்ம நபர்களில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தரே இவ்வாறு வீதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றும் கிராம அலுவலரான விஜி என அழைக்கப்படும் எஸ். விஜியேந்திரன் என்பவர் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். இவர் கடமை முடிந்து தனது வீடு நோக்கி சென்று கொண்டிருந்த போது கள்ளியடி ஆத்திமோட்டை பகுதியில் வைத்து மர்ம கும்பலால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். இவரது தலை மற்றும் உடல் பாகங்களில் பாரிய காயம் காணப்படுகின்றமை அவர் இனம் தெரியாத நபர்களினால் கூறிய ஆயுதத்தினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளதாக தெரிவிக்கபடுகிறது.

தற்போது சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இலுப்பைக்கடவை பொலிஸார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரை விடுவிக்க தமிழக ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்



பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேர் முப்பது ஆண்டுகளாக சிறையில் உள்ளனர். இவர்களின் தண்டனையை ஏற்கனவே உச்சநீதிமன்றம் ஆயுள் தண்டனையாக குறைத்தது. அவர்கள் முப்பது ஆண்டுகளாக சிறையில் உள்ளனர். பல்வேறு அரசியல் கட்சியினரும், அமைப்புகளும் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தியும் இன்று வரையிலும் இவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தமிழக அமைச்சரவையும் பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆனால் இரண்டு ஆண்டுகளாக அந்த பரிந்துரையின் பேரில் ஆளுநர் எவ்வித முடிவையும் எடுக்காமல் கிடப்பில் போட்டுள்ளார். அண்மையில் உச்சநீதிமன்றத்தில் இவர்களின் விடுதலை தொடர்பான மனு விசாரணைக்கு வந்த போது மத்திய அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் எம்.டி.எம்.ஏ., (பல்முனை கண்காணிப்பு முகமை) ராஜீவ் காந்தி கொலை வழக்கு குறித்த இறுதி அறிக்கையை இன்னமும் சமர்ப்பிக்காததால் தான் ஆளுநர் முடிவு எடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் ஒரு காரணத்தையும் தெரிவித்துள்ளார்.



இதற்கு அதிருப்தி தெரிவித்த உச்சநீதிமன்றம் பேரறிவாளன் உள்ளிட்டவர்களை விடுதலை செய்வதற்காக அனுப்பப்பட்ட அமைச்சரவையின் பரிந்துரையின் மீது ஆளுநர் விரைந்து முடிவெடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டதோடு, வழக்கின் விசாரணையை வரும் நவம்பர் 23ந் தேதிக்கு ஒத்தி வைத்துள்ளது. எனவே, தமிழக அமைச்சரவையின் தீர்மானம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை ஏற்று பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரை காலம் தாழ்த்தாது உடனடியாக விடுவிக்க தமிழக ஆளுநர் முடிவெடுக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வலியுறுத்துகிறது. என மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# Toronto Tamil Community Centre Project Launches Second Phase of Online Consultation

# தமிழ்ச் சமூக மைய செயற்திட்டத்துக்கான இரண்டாம் கட்ட கருத்துக்கணிப்பு இணையமூலம் ஆரம்பம்

தமிழ்ச் சமூக மையம் அமைப்பதற்கான செயற்திட்டத்துக்கான வழிப்படுத்து குழு கருத்துக்கணிப்பின் இரண்டாம் கட்டத்தை இணையமூலம் ஆரம்பித்துள்ளது.

அமையவுள்ள தழிழ்ச் சமூக மையத்தின் நிகழ்நிரலைத் தீர்மானிக்க உதவியாக, தமிழர் சமூகத்துக்கு மானிட, மனிதநேய, மற்றும் பண்பாட்டுச் சேவைகளை வழங்கிவருகின்ற அமைப்புகளீடமிருந்தும் தனிநபர்களிடமிருந்தும், tamilcentre.ca எனும் எமது இணையத்தளத்தில் உள்ள கருத்துக்கணிப்பு வினாக்களைப் பூர்த்தி செய்து உதவும்படி வழிப்படுத்து குழு வேண்டிக்கொள்கின்றது.

உசாவும் வினாக்கொத்தில் உள்ள 120க்கு மேற்பட்ட தரவுக்கூறுகளைக் கொண்டு, சேவை வழங்கும் இந்த அமைப்புகள் மேற்படி சமூக மையத்தை எவ்வாறு, எப்பொழுது பயன்படுத்தப் போகின்றன என்பதைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியும் என்று வழிப்படுத்து குழு எதிர்பார்க்கின்றது. சமூக மையத்தை வடிவமைப்பதிலும், நெடுங்காலம் நிலைபெறும் வண்ணம் அதைத் திட்டமிடுவதிலும் இத்தகைய தரவுகள் எமது குழுவுக்கு உதவும்.

அமையவுள்ள சமூக மையத்தில் எத்தகைய இடவசதிகள் முக்கியமானவை என்பதைத் தீர்மானிப்பதற்காக வழிப்படுத்து குழுவானது 2019ல் எமது சமூகத்தவர்களிடையே ஓர் ஆய்வினை மேற்கொண்டது. அந்த ஆய்வின் பெறுபேறுகளை இங்கே காணலாம். மேற்படி சமூக மையம் தமிழர் சமூகத்தின் தேவைகளை எவ்வாறு நிறைவேற்றும் என்பதை சமூக அமைப்புகளுடன் உசாவும் இந்த இரண்டாம் கட்ட ஆய்வானது திட்பமான முறையில் பகுத்தாய்ந்து வழங்கும்.

இக் கருத்துக்கணிப்பு தமிழ்ச் சமூகத்தின் சேவை வழங்கும் அமைப்புகளை அதிகூடிய அளவில் சென்றடைந்து வினாக்கொத்துக்கு இயன்றளவு விடைகள் கிடைப்பதற்கு ஏதுவாக வழிப்படுத்துகுழு நேரடியாகவும் அவர்களுடன் தொடர்புகொள்ளும்.

தமிழ்ச் சமூக மையத்தின் செயற்பாடுகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு tamilcentre.ca என்னும் எமது இணையத்தளத்தை நாடவும்.

மேலதிக ஊடக தகவல்களுக்கு:
நீதன் சண் - (416) 824-3399, neethanshan@gmail.com

# டொனால்ட் ரம்பா? ஜோ பைடனா? நல்லவர் என்று பார்க்க முடியாது என்கிறார் வி. உருத்திரகுமாரன்



இலங்கை விவகாரத்தில் இந்தியா-டெல்லியினை மீறி ஜோ பைடன் முடிவுகளை எடுக்கக்கூடியவரல்ல என கருத்து தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன், ஆட்சி மாற்றங்களை கடந்து, உலக, புவிசார் அரசியல்ரீதியாக சிந்தித்தே நமது உரிமைகளை நாம் வென்றடைய முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அதிபர் தேர்தல் தொடர்பில் தமிழக ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இக்கருத்தினை வெளியிட்ட பிரதமர் வி. உருத்திரகுமாரன் மேலும் தெரிவிக்கையில், 2009ம் ஆண்டு தமிழினப்படுகொலை நடைபெற்றிருந்தவேளை ஜோ பைடன் அவர்கள் அமெரிக்காவின் துணை அதிபராக இருந்தவர். அவருக்கு எங்களது பிரச்சனைகள் ஓரளவுக்கு தெரியும் என்று நாங்கள் எதிர்பார்கின்றோம்.





அதேசமயம் ஜோ பைடனை பொறுத்தவரை தனது நடவடிக்கைகளை தனியாக முன்னெடுப்பவரல்ல பிராந்திய நாடுகளோடு சேர்ந்து முடிவுகளை எடுப்பதுதான அவரது அரசியல் நிலைப்பாடு.

தென்னாசியா, ஐரோப்பா எதுவானாலும் அவர் தனியாக செயற்பாடுகளை செய்வதில் அவருக்கு நம்பிக்கை இல்லை. மற்ற நாடுகளுடன் சேர்ந்து கூட்டுமுடிவுகளை எடுப்பதில்தான் அவருடைய அரசியல் நிலைப்பாடு இருக்கின்றது.

எனவே எங்களுடைய பிரச்சனையினை எடுக்கும் போது, அவருக்கு எங்களுடைய பிரச்சனைகள் தெரிந்திருந்தாலும், இந்தியாவுடன் சேர்ந்துதான் முடிவுகளை எடுக்க முனைவார். இந்தியா-டெல்லியை மீறி அவர் முடிவுகளை எடுப்பார் என நாங்கள் எதிர்பார்க்க முடியாது.

எம்மைப் பொறுத்தவரையில் டொனால்ட் ரம்ப் நல்லவரா, ஜோ பைடன் நல்லவரா என்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவர்களுடைய விருப்பத்திலேயோ அல்லது அனுதாபத்திலேயே எமது உரிமைகயோ வென்றெடுக்கவோ, தனிநாட்டையோ அமைக்கப் போவதில்லை.

யார் அதிபராக வந்தாலும், (இந்தியா) டெல்லிக்கு கூட, தமிழர்களின் சுதந்திரம், இருப்பு அவர்களது நலன்களுக்கு தேவை என்ற நிலையினை நாம் உருவாக்க வேண்டும். ஆட்சி மாற்றங்களை பற்றியதல்ல நமது கவனம். புவிசார் அரசியல்ரீதியாக , உலக அரசியல்ரீதியாக சிந்தித்து அதற்க ஏற்ப எம்மை தயார்படுத்தி செயலாற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வாக்குகள் எண்ணப்படுவதில் நீண்ட தாமதம். உலகெங்கம் எதிர்பார்ப்பு அதிகரிப்பு


## "அமைதியைப் கடைப்பிடியுங்கள்" என வெற்றி வாய்ப்பை எட்டும் ஜோ பைடன் கூறுகையில் டொனால்ட் ட்ரம்ப்போ, "சட்ட நடடிவக்கை எடுத்து நான் வெற்றியை நிரூபிப்பேன்" என மிரட்டுகின்றார்



கடந்த 3ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பித்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு முடிவுற்று இந்த செய்தி எழுதப்படும் (கனடாவில்) வியாழக்கிழமை அமெரிக்காவிலும் மாலையாகின்ற வேளையிலும் வாக்குகள் தொடர்ந்து எண்ணப்படுகின்ற நிலையில் அமெரிக்காவின் அனைத்து தொலைக்காட்சி நிலையங்கள் வானொலி நிலையங்கள் மற்றும் பத்திரிகைகள் என அனைத்து ஊடகங்களும் ஜோ பைடன் அவர்களின் வெற்றியை அறிவிப்பதற்காக ஆர்வத்துடன் காத்திருக்கையில் தொடர்ந்து வாக்குகள் எண்ணப்படும் சில மையங்களில் அதிகளவு ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பணியாற்றியும் கூட நீண்ட தாமதம் ஏற்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இது இவ்வாறிருக்க ஒபாமாவின் பதவிக் காலத்தில் உப-அ ஜனாதிபதியாக பதவி வகித்தவரான தற்போதைய வேட்பாளர் ஜோ பைடன் அவர்கள் தனது ஆதரவாளர்களிடம் மற்றும் தனக்கு வாக்களித்தவர்களிடம்" அமைதியைப் கடைப்பிடியுங்கள் என வேண்டுதலாகக் கூறுகையில் மறுபக்கத்தில் தற்போதைய ஜனாதிபதியும் இரண்டு வேட்பாளர்களில் ஒருவருமான டொனால்ட் ட்ரம்ப்போ," வாக்குகள் எண்ணப்படுவதில் ஊழல் இடம்பெறுகின்றது. வெற்றிவாய்ப்பை நான் பெறும் சந்தர்ப்பம் இருக்கும் போது எல்லாம் தலைகீழா நடைபெறுகின்றன என்று அச்சுறுத்தும் பாணியில் அறிவிப்புக்களை விடுத்த வண்ணம் சட்ட நடடிவக்கை எடுக்கப்போவதாகவும் மிரட்டி வரு கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது

இதேவேளையில், பல மாநிலங்களில் அதிகளவு வாக்குகளையும் ஸ்தானங்களைப் பெற்று வெற்றிக் கனியை பறிக்கும் இடத்தில் நிற்கும் ஜோ பைடன் அவர்கள் தனது வாக்காளர்களையும் ஆதரவாளர்களையும் பார்த்து அமைதியாக இருக்கும் படி வேண்டும் போது, ட்ரம்ப் அவர்களோடு மிகவும் மூர்க்கத்தனமாக வெள்ளை மாளிகையில் இருந்து கொண்டு அதிகாரங்களைப் பயன்படுத்தவும், அமெரிக்க தபால் திணைக்களத்தையும் தேர்தலை நடத்தும் அதிகாரிகளைம் குற்றஞ்சாட்டுக் கொண்டிருப்தை பெரும்பாலான எண்ணிக்கையில் அமெரிக்கர்கள் விரும்பவில்லை என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.



மேலும் தற்போது வாக்குகள் எண்ணப்படும் பணிகள் இடம்பெறும் மையங்களில் பலத்த பொலிஸ் மற்றும் அதிரடிப்படையினர் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும், அந்த இடங்களைச் சுற்றி ட்ரம் அவர்களது ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு, குழப்பங்களை ஏற்படுத்த முனைவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த செய்தி எமது இணையத்தளங்களுக்காகவும் பத்திரிகைக்காகவும் எழுதப்பட்டுக்கொண்டிருக்கும் போது, தற்போதைய அமெரிக்க ஜனாதிபதியும், இரண்டு வேட்பாளர்களில் ஒருவருமான டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் வெள்ளை மாளிகைக்கு ஊடகவியலாளர்களை அழைத்து ஒரு அறிவித்தலை விடுத்தார். அங்கு உரையாற்றுவதற்காக ஊடகவியலாளர்களின் முன்பாக வந்தபோது, அவரது முகம் மற்றும் ஆகியன வழமைக்கு மாறாக இருந்தன. முகமும் அவரது வார்த்தைகளும் மிகவும் விரக்தியடைந்தவராக ட்ரம்ப் இருக்கின்றார் என்பதைக் காட்டியது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எவ்வித ஆதாரங்களும் இல்லாமல் தேர்தலை நடத்துகின்றவர்கள், வாக்குகளை எண்ணிக்கொண்டிருப்பவர்கள் என அனைத்து தரப்பினர் மீதும் குற்றங்களைச் சுமத்துபவராகவும், இந்த தேர்தலில் தானே வெற்றியடைகின்ற ஒருவனாக இருக்க வேண்டும் என்றும் மிகுந்த ஜனநாயக விரோதக் கருத்துக்களை பகிர்நது கொண்டிருந்தார். அப்போது ஊடகவியலாளர்கள் இடையில் கேட்ட கேள்விகளுக்கும் பதில் சொல்லாமல் அவர்களைப் பறக்கணித்தவராக அவர் அங்கு உரையாற்றினார்.

குறிப்பாக ஜோ பைடன் அவர்களும் அவரது பிரச்சாரக் குழுவினரும் திட்டமிட்டு தேர்தலுக்கு முன்னரேயே ஊழல் மிகுந்த வாக்களிப்பை நடத்த வேண்டும் என்று தீர்மானித்தே இந்த ஜனநாயக விரோத செயலைச் செய்துள்ளார்கள் என்றார். மேலும் அவர் பேசுகையில்" நான இதுவரை பல தேர்தல்களை கவனித்துள்ளேன். அவற்றில் பல இடங்களில் குழறுபடிகள் நடந்துள்ளன. ஆனால் இந்த தேர்தலில் பல குழறுபடிகள் நடைபெற்றுள்ளதை நானும் எனது குழுவினரும் நன்கு அவதானித்துள்ளோம்" என்று ஆதாரமற்ற வகையில் ஒரு குழப்பவாதியாக தனது கருத்துக்களைக் கூறிக்கொண்டிருநதார்.

இது இவ்வாறிருக்க நேற்று எமக்கு கிடைத்த செய்திகளின் அடிப்படையில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவுகளில் தற்போதைய ஜனாதிபதியான குடியரசு கட்சியின் டொனால்ட் டிரம்ப் மற்றும் ஜனநாயகக் கட்சியின் ஜோ பைடன் இடையே மிகவும் நெருங்கிய போட்டி நீடித்தது. முடிவை மாற்றக்கூடிய முக்கிய மாநிலங்களிலும் இருவருக்கும் இடையே நெருக்கமான போட்டி இருந்து வந்தது.

நேற்று பல இடங்களில் வாக்குகள் எண்ணப்பட்டுக்கொண்டிருந்த நிலையில் தற்பேதைய ஜனாதிபதி டிரம்ப் தனக்குத் தானே வெற்றி அறிவிப்பை வெளியிட்டதோடு, எவ்வித ஆதரமும் அற்ற மோசடி குற்றச்சாட்டுக்கைள பலர் மிதும் அரச நிறுவனங்கள் மீதும் சுமத்திய வண்ணம் நேற்றைய நாளைச் செலவளித்தார் உச்ச நீதிமன்றம் செல்வதாகவும் அவர் சூளுரைத்துக் கொண்டிருந்ததையும் அவதானிக்கக் கூடிய தாக இருந்தது.

இது இவ்வாறிருக்க முன்னதாக தாம் வெற்றியின் பாதையில் இருப்பதாக மிகவும் அமைதியான முறையில் ஜோ பைடன் அவர்கள் கூறிய வண்ணம் இருந்தார். மேலும், நேற்று மாலை வரை மில்லியன் கணக்கான வாக்குகள் எண்ணப்படவிருந்த நிலையில் வெற்றியாளரை தேர்வு செய்யும் முடிவு வெளியாவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. இரு வேட்பாளர்களும் வெற்றி பற்றிய அறிவிப்புகளை வெளியிட்டபோதும் அவை நம்பகமானதாக இருக்கவில்லை. எனினும் ஜோ பைடன் அவர்களே அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி என்று உலகெங்கும் வாழும் மக்கள் நம்பியவண்ணம் இருந்தார்கள். ஆனால் வாக்குகள் எண்ணப்படுவதில் தொடர்ந்து தாமதமே நிலவிய வண்ணம் இருந்தது.

இந்த தேர்தல் முடிவுகளை ஒட்டி அமெரிக்கா எங்கும் நேற்று ஓர் இழுபறிச் சூழல் ஏற்பட்டிருந்ததோடு இறுதி முடிவு பல நாட்களுக்கு பின்னரே தெரியவரும் என்ற அறிவிப்புக்களை அங்குள்ள ஊடகங்கள் பலவும் அறிவித்து வண்ணம் இருந்தன. ஆனால் சிஎன்என் போன்ற பைடன் அவர்களின் ஆதரவு ஊடகங்கள் மிகவும் விரைவாக முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியவண்ணம் இருந்தன.




இது வேளையில்,அமெரிக்காவில் 2 இலட்சத்திற்கும் அதிகமான உயிர்களைப் பலியெடுத்த கொடிதான கொரோனா வைரஸ் தொற்றினால் அச்சமடைந்திருக்கும் மக்கள், அதோடு உலகில் மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக இருக்கும் அமெரிக்காவில் 100 மில்லியனுக்கு அதிகமானவர்கள் தேர்தல் தினத்திற்கு முன்னரே முன்கூட்டிய வாக்களிப்பில் பங்கேற்றிருந்தனர். இது ஒரு நூற்றாண்டில் அதிக வாக்களிப்பு வீதத்தை கொண்ட தேர்தலாகவும் பதிவானது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் தேர்தலுக்கு முந்திய கருத்துக் கணிப்புகளை முறியடிக்கும் வகையில் டிரம்ப் இந்தத் தேர்தலில் பல இடங்களிலும் அதிக வாக்களை வென்றிருந்தார். என்பதும் அங்கு குறிப்பிடத்த்தக்கதாகும். இதன் காரணமாக தான் இந்தத் தடவையும் வெற்றிபெறுவேன் என்ற நம்பிக்கை மிகக் கொண்ட ட்ரம்ப் அவர்கள் பைடன் தொடர்ந்து போட்டியில் இருந்த நிலையில் ஒட்டுமொத்த முடிவில் எந்த மாற்றமும் நிகழக்கூடிய வாய்ப்பு இருந்து வந்தது. இதை அமெரிக்க ஊடகங்கள் மிகவும் தெளிவாக அறிவித்து வந்தன. இந்த விடயங்கள் கனடாவின் தேசிய ஆங்கில மற்றும் பிரன்சு மொழி ஊடகங்களும் இந்த விடயங்களை மக்களுக்கு தெளிவாகக அறிவித்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கத் தேர்தல் என்பது நாடு தழுவிய வாக்கு எண்ணிக்கைக்கு பதில் மாநில அளவிலான போட்டியாகவே உள்ளது என்பதும் ஒவ்வொரு மாநிலத்தில் வேட்பாளர்களுக்கு அளிக்கப்படும் வாக்குகளின் அடிப்டையிலேயே, ஜனாதிபதியாக வெற்றி பெறுவதற்கு வேட்பாளர் ஒருவர் 270 தொகுதியை ஒத்த ஸ்தானங்களின் எண்ணிக்கை வாக்குகளை வெல்லவேண்டி உள்ளது. மாநில அளவில் மக்கள் தொகை அடிப்படையில் இந்த வாக்குகள் பிரிகின்றன. நேற்று மாலை வரை வெளியான முடிவுகளின்படி பைடன் 238 எலெக்டோரல் கொலேஜ் வாக்குகளையும் டிரம்ப் 213 இடங்களையும் வென்றிருந்தனர். குறிப்பாக தீர்க்கமான புளோரிடாவில் டிரம்ப் வெற்றி பெற்றது அவர் தொடர்ந்து போட்டியில் நீடிப்பதில் முக்கியமானதாக அமைந்தது. குடியரசுக் கட்சியின் கோட்டையான டெக்சாஸில் பைடன் திருப்பத்தை எதிர்பார்த்தபோதும் டிரம்ப் அங்கு வெற்றியை உறுதி செய்துள்ளார். எனினும் மற்றோரு குடியரசுக் கட்சியின் கோட்டையான அரிசோனாவில் பைடனால் வெல்ல முடிந்திருப்பது ஆரம்பக் கட்ட தேர்தல் முடிவுகள் காட்டின.

இந்நிலையில் பென்சில்வேனியா, மிச்சிகன் மற்றும் விஸ்கொன்சின் மாநிலங்களின் முடிவுகள் வெளியாகி இருக்காத நிலையில் அதன் முடிவுகள் அடுத்த ஜனாதிபதியை தேர்வு செய்வதில் தீர்க்கமாக இருந்தது. இதன் காரணமாக ட்ரம் அவர்கள் மிகவும் சினம் கொண்டவராக தனது சட்ட ஆலோசகர்களுடன் கூட்டங்களை நடத்தி சட்ட நடவடிக்கை என்ற பெயரில் நாட்டு மக்களை குழப்பத்தில் ஆழ்த்தும் வேலைகளைச் செய்து கொண்டிருந்தார். இதில் முக்கியமாக டிரம்ப் தனது தோல்வியை தவிர்ப்பதில் அவர் பென்சில்வேனியாவில் கட்டாயம் வெற்றி பெற வேண்டிய சூழல் இருந்தது. தவிர இன்னும் முடிவுகள் வெளியாகாது இருந்து ஜோர்ஜியா மற்றும் வடக்குக் கரோலினாவின் முடிவும் செல்வாக்கு செலுத்துவதாக இருந்தன.

தேர்தல் தின இரவை சுமார் 100 விருந்தினர்களுடன் வெள்ளை மாளிகையில் டிரம்ப் கழித்து வந்தார். அங்கு அவர் அதிகாலையில் உரையாற்றியபோது, "இந்தத் தேர்தலில் நாம் வெற்றியை அறிவிக்க தயாராகி இருக்கிறோம். உண்மையிலேயே இந்தத் தேர்தலில் நாம் சாதித்துள்ளோம்" என்றார். எந்த ஆதாரமும் குறிப்பிடாது "பெரும் மோசடி இடம்பெற்றதாக" கூறிய டிரம்ப், "நாம் அமெரிக்க உச்ச நீதிமன்றம் செல்வோம்" என்றார். என்னைப் பொறுத்தவரை, நாங்கள் ஏற்கனவே வென்று விட்டோம். எங்களுக்காக உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்" என்று டிரம்ப் பேசினார். எனினும் மில்லியன் கணக்கான தபால் வாக்குகள் இன்னும் எண்ணப்படாத நிலையில் மோசடி இடம்பெற்றதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்பது பற்றி அமெரிக்கர்கள் பொதுவெளியில் பேசிக்கொண்டும் அரசியல் விமர்சகர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படையாக ஊடகங்களில் தெரிவிப்பதையும் காணக் கூடியதாக உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

முன்னதாக தனது சொந்த ஊரான விலிமிங்டோனில் பைடன் உரையாற்றியபோது, தமது வெற்றி பற்றி நம்பிக்கை வெளியிட்டிருந்தார். "நாம் சாதித்திருக்கிறோம் நாம் இருக்கும் இடம் பற்றி நல்லதாகவே உணர்கிறோம். இந்தத் தேர்தலில் நாம் வெற்றிப் பாதையில் செல்கிறோம் என்பதை இங்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்" என்று நேற்று பைடன் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி ட்ரம்ப் அவர்கள் தபால் மூலம் அனுப்பப் பெற்ற வாக்குளில் மோசடி இடம்பெற்றதாகக் கூறும் கருதுக்களுக்கு பதிலளித்த தபால் சேவைகள் அதிகாரி ஒருவர்" எத்தனையோ ஆண்டு காலம் செயற்பட்டு வரும் அமெரிக்க தபால் சேவைகள் கூட்டுத்தாபனத்தில் பணிகளை விமர்சிக்கும் ட்ரம்ப் அவர்களின் கருத்துக்களை நான் கண்டிக்கிறேன்" என்றார் என்பதும் "ட்ரம்ப் அவர்கள் 19ம் நூற்றாண்டுக்கு திரும்பிச் செல்கின்றாரா" என்று ஊடகவியலாளர்களிடம் கருத்துச் சொன்னதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சந்தேக நபர்களுக்கு மேலும் 14 நாட்கள் விளக்கமறியல்

முல்லைத்த்தீவு மாவட்ட ஊடகவியலாளர்கள் இருவர் மீது மரக்கடத்தலில் ஈடுபட்டுவரும் கும்பலால் தாக்குதல் நடத்தியமை தொடர்பிலான வழக்கு விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

பாதிக்க பட்ட ஊடகவியலாளர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்,சட்டத்தரணிகளான்,சி.தனஞ்சயன்,செல்வி ருஜிக்கா ,பார்த்தீபன்,துஸ்யந்தி ஆகிய சட்டத்தணிகள் முன்னிலையாகியுள்ளார்கள்.

குறித்த வழக்கு விசாரணையின் பின்னர் வழக்கு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன்,

ஊடகவியலாளர்கள்மீதான தாக்குதலுடன் தொடர்புடைய 5 சந்தேக நபர்கள் இருக்கின்றார்கள். நான்காம்,ஐந்தாம் சந்தேக நபர்கள்,பின்னர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கான அடையாள அணிவகுப்பு நடைபெறவேண்டும்.

இரண்டாம்,மூன்றாம் சந்தேக நபர்கள் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

முதலாவது சந்தேகநபர் அனோயன் என்பவர் பிணையில் விடப்படவேண்டும் என்று அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி இன்று மன்றில் விண்ணப்பம் செய்துள்ளார். நாங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தோம்.





இது சாதாரணமாக அடித்த ஒருவழக்கு அல்ல சமூகப்பொறுப்புடன் செயற்பட்ட ஊடகவியலாளர்கள் சமூகப்பொறுப்பினை நிறைவேற்றுகின்றபோது நிகழ்ந்த சம்பவம் சமூக விரோத செயற்பாட்டினை அவர்கள் வெளிக்கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்தபோது அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காடழித்தல் என்பது தெளிவாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றபோதும் வனபாதுகாப்பு திணைக்களம் பொலீஸ் அதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததை வெளிக்கொண்டு வருவதற்காக அங்கு சென்றபோது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை நீதிமன்றம் பாரிய சமூகவிரோத செயற்பாட்டுடன் சம்மந்தப்பட்டதாக கருதவேண்டும் என்று சமர்பணம் செய்துள்ளேன்.

முதலாவது சந்தேக நபர் சார்பில் தேவைக்கு அதிகமாக விளக்கமறியலில் வைத்திருக்ககூடாது விடுவிக்கப்படவேண்டும் என்று விண்ணப்பித்தார்கள் அவர்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு பிணை வழங்கப்படவில்லை மூன்று சந்தேக நபர்களையும் தொடர்ந்தும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கொவிட் தொற்று காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றிற்கு கொண்டுவரப்படவில்லை ஆனால் நீதிபதியுடன் உரையாடக்கூடியதாக காணொளி மூலமாக தொலைபேசியில் அவர்கள் தொடர்பு படுத்திக்கொடுத்தார்கள்.

இந்த வேளையில் முதலாவது எதிரி தான் மன்னிப்பு கேட்க தயாராக இருப்பதாகவும் ஊடகவியலாளர்கள் தன்னை மன்னிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஊடகவியலாளர்கள் சார்பில் நாங்கள் மன்றில் அதற்க்கு சம்மதம் தெரிவிக்கவில்லை சாதாரண ஒரு தனிப்பட்ட தாக்குதல் சம்பவமாக இருந்தால் நிச்சயமாக மன்னிப்பு கொடுக்கலாம் ஆனால் இது பாரிய சமூகவிரோத செயற்பாட்டுடன் சம்மந்தப்பட்ட விடையம் ஆகையால் மன்னிப்பினை கொடுத்து விடுவிக்கும் விடையமாக கருத முடியாது என்று சொல்லி உள்ளோம் இதனை ஏற்ற கௌரவ நீதிபதி எதிர்வரும் 17 ஆம் திகதி வரை 14 நாட்களுக்கு மூன்று சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்ரரவிட்டுள்ளார் என்று எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400




Scarborough
201-4433 Sheppard Ave. E
Scarborough, ON, M1S 1V3

Toronto/Downtown
800-120 Eglinton Ave. E
Toronto, ON, M4P 1E2

North York
306-1280 Finch Ave. W
North York, ON, M3J 3K6

Mississauga
110-93 Dundas Street E.
Mississauga, ON, L5A 1W7

Brampton
201-7990 Kennedy Rd. South,
Brampton, Ontario, L6W 0B3

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்:

# வைரசுக்குக் கழிப்புக் கழித்த அமைச்சர்

கடந்த பௌர்ணமி தினத்தன்று யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு ஓர் ஆசிரியர் தனது மகளோடு பயணம் செய்து கொண்டிருந்தார். தென்மராட்சியில் ராணுவ தளங்களுக்கு முன்னே பௌத்த மதக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. அதைப் பார்த்துவிட்டு மகள் தகப்பனிடம் கேட்டாள் "இந்த ராணுவத்தில் வேறு மதத்தவர்கள் இல்லையா?" என்று. "இருக்கிறார்கள் இப்போது உள்ள தளபதி ஒரு கத்தோலிக்கர் தான்" என்று அவர் கூறினார். "அப்படி என்றால் ஏனைய மதத்தவர்களின் புனித நாட்களின் போது அவர்களுடைய கொடிகளையும் சின்னங்களையும் முகாம்களின் முன் கட்டுவார்களா?" என்று மகள் கேட்டாள் "இல்லை அப்படி நான் பார்த்ததில்லை" என்று தகப்பன் சொன்னார். "அப்படி என்றால் ராணுவத்தில் வேலை செய்யும் பௌத்தர்கள் அல்லாதவர்கள் இதைப்பற்றி கேள்வி கேட்க மாட்டார்களா?" என்று மகள் கேட்டாள். இது ஒரு பத்தாம் ஆண்டு மாணவியின் கேள்வி.

இலங்கை தீவில் பௌத்த மதச் சின்னங்களும் கொடிகளும் குறியீடுகளும் மதப் பல்வகைமையின் செழிப்பான அடையாளங்களாக முன்னிறுத்தப்படுவதில்லை. மாறாக மத மேலாண்மையின் சின்னங்களாகவும் கொடிகளாகவும் அவை மாறிவிட்டன. அவை பல்லினத் தன்மைக்கும் பல்சமய பண்புக்கும் எதிரான கொடிகளும் சின்னங்களும்தான். ரவூப் ஹக்கீம் முன்பொருமுறை சொன்னார்... "புத்தர் சிலைகளை எல்லைக் கற்களாக நடுகிறார்கள்" என்று கன்னியா வென் நீரூற்றில் நீராவிப்பிட்டியில் இதுதான் நடக்கிறது.

ஆனால், இவ்வாறு முகாம் வாசல்களிலும் விகாரைகளும் தொங்க விடப்படும் கொடிகளில் பெரும்பாலானவை உள்நாட்டில் தயாரிக்கப்படுவதில்லை. அவை வெளிநாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. "நாட்டின் தேசிய கொடி மற்றும் பௌத்த கொடி ஆகியவற்றின் தேவையினை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வது பூர்த்தி செய்வதற்கு தனது அமைச்சு தயாராக உள்ளதாக பத்திக், கைத்தறி மற்றும் உள்நாட்டு சுதேச ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேககர என்னிடம் உறுதியளித்தார். தேசிய கொடி மற்றும் பௌத்த கொடிகளை வெளி நாடுகளில் உற்பத்தி செய்து இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை அந்நியச் செலாவணி செலவிடப்படுகின்றுது. அடுத்த வருடம் முதல், தேவயான கொடிகளை உயர் தரத்துடன் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு பத்திக் மற்றும் கைத்தறித் துறையில் உள்ள உற்பத்தியாளர்கள் தயாராக உள்ளனர் என்பதனை அமைச்சர் எனக்கு அறியத் தந்தார்". இவ்வாறு கோட்டாபய ராஜபக்ஷ தனது முகநூல் தளத்தில் பதிவிட்டிருந்தார். பௌத்த கொடிகள் மட்டுமல்ல இலங்கைத் தீவின் தேசியக் கொடியும் அவ்வாறு வெளிநாடுகளில்தான் தயாரிக்கப்படுகிறது. அதை நிறுத்தி உள்நாட்டிலேயே தேசியக் கொடியையும் பௌத்தமத கொடிகளையும் தயாரிக்க வேண்டும் என்று அவர் தனது அமைச்சருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

அவருடைய மற்றொரு அமைச்சரான பவித்ரா வன்னியாராச்சி அண்மையில் ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கும் ஒரு காரியத்தைச் செய்தார். கோவிட்-19ஐ அகற்றுவதற்காக பிரித் ஓதி சேகரிக்கப்பட்ட நீரை அவர் ஆறுகளில் கரைத்தார். அவரோடு வேறு சில அமைச்சர்களும் இவ்வாறு வைரசுக்கு கழிப்புக் கழித்தார்கள். இது சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் பரவலாக விமர்சிக்கப்படுகிறது. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் தெரியாமல் சில அமைச்சர்கள் இப்படிப்பட்ட காரியங்களை செய்திருக்க முடியாது.

சில மாதங்களுக்கு முன்பு கோவிட்-19 முதலாவது தொற்று அலையின் போதும் இவ்வாறு பிரித் ஓதப்பட்ட மந்திர நீர் போத்தல்களில் சேகரிக்கப்பட்டு ஹெலிகாப்டர்கள் மூலம் நாடு முழுவதும் தெளிக்கபட்டதாக தகவல்கள் வெளி வந்தன. அது தொடர்பான காணொளிகளும் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டன. கடந்த மார்ச் மாதம் சாமர சம்பத் என்ற ஒரு அரசியல்வாதி தம்பணவில் உள்ள வேடர்களின் கிராமத்தில் "கிரி கொரஹா" என்று அழைக்கப்படும் ஒரு சடங்கை ஒழுங்கு படுத்தியிருந்தார். அது கொரோனா வைரசிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு என்று கூறபட்டது. அதில் தனி ஆள் இடைவெளி பேணப்படவில்லை என்று டுவிட்டரில் விமர்சிக்கப்பட்டது.

அண்மையில் இரண்டாவது தொற்று அலை பரவத் தொடங்கிய போது எல்லா மதப் பிரிவுகளையும் சேர்ந்த தலைவர்கள் கொரோனா வைரசின் தாக்கத்திலிருந்து நாட்டைக் காக்கும் பிரார்த்தனைகளில் ஈடுபட்டார்கள். அயல் நாடாகிய இந்தியாவில் பிரதமர் மோடி வைரசை வெற்றி கொள்ள வீடுகளில் ஒளி ஏற்றும்படியும் மக்களை கைகளைத் தட்டி ஒலி எழுப்பும்படியும் கேட்டுக் கொண்டார். அதாவது கோவிட்-19க்குப் பின்னரும் உலகில் கடவுள் நம்பிக்கையும் மதங்களுக்கான தேவையும் குறையவில்லை .முதலாவது தொற்று அலையின் போது மதங்கள் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. ஆனால் இரண்டாவது தொற்று அலையின் போது வைரசிடமிருந்து பாதுகாப்பைத் தேடி மதங்களை நோக்கிப் போகிறதா சமூகம்?

இவ்வாறு வைரசுக்கு எதிராக - அதாவது வெல்லக் கடினமான ஒரு எதிரிக்கு எதிராக - கடவுளைச் சரண் அடைவது அல்லது மந்திர தந்திரங்களைச் சரணடைவது என்பது இலங்கைத் தீவில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒன்றுதான். யுத்த காலங்களில் மரண பயம் காரணமாக அரசாங்கத்தின் பிரதானிகளும் சாதாரண சிப்பாய்களும் இவ்வாறு பிரித் ஓதி நூல்களைக் கட்டுவதும் மந்திரத் தாயத்துகளை இடுப்பிலும் கைகளிலும் அணிந்து கொள்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ராஜபக்ச குடும்பத்தவர்கள் வெளிப்படையாகவே தங்கள் கைகளில் மந்திரித்த கயிறுகளை அணிந்திருக்கக் காணலாம். குறிப்பாக மூத்த ராஜபக்ச ஆகிய மகிந்த பொது வைபவங்களில் தமது கை ஒன்றில் ஏதோ ஒன்றை விரல்களால் இறுக்கிப் பிடித்திருக்க காணலாம். 2009 இற்குப் பின் யாழ் தேவி தொடரூந்தை முதன் முதலாக யாழ்பாணத்திற்கு ஓட விட்ட வைபவத்தில் அவர் அவ்வாறு ஏதோ ஒரு பொருளைக் கையில் வைத்திருந்ததைப் படங்களில் காண முடிந்தது. சோதிடத்தில் அமானுஷ்ய சக்திகளில் மந்திர தந்திரங்களில் அந்தக் குடும்பத்துக்கு அதிகம் நம்பிக்கை உண்டு என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

சில ஆண்டுகளுக்கு முன்பு ராஜபக்சக்களின் முதலாவது ஆட்சிக் காலத்தில் கிரீஸ் மனிதன் தமிழ்ப் பகுதிகளை அச்சுறுத்திய ஒரு கால கட்டத்தில் கொழும்பு டெலிகிராப் என்ற இணையத்தளத்தில் ஒரு கட்டுரை வெளி வந்தது. அதில் கிரீஸ் மனிதனை அரசினால் ஸ்பொன்சர் செய்யப்பட்ட மாந்திரீகம் என்று ஒரு விமர்சகர் வர்ணித்திருந்தார்.

இவ்வாறானதொரு அரசியல் பாரம்பரியத்தின் பின்னணியில்தான் பவித்ரா வன்னியாராச்சி மந்திரித்த நீரை ஆற்றில் கொட்டியிருக்கிறார். ஒரு சுகாதார அமைச்சரே அதைச் செய்வது நாட்டு மக்களுக்கு எப்படிப்பட்ட செய்திகளைக் கொடுக்கும்? வைரசுக்கு எதிரான நடவடிக்ககளை அதிகம் படை மயப்படுத்திய பின்னும் நாடு திணறுகிறது என்பதையா?

இதன் மூலம் "மூடநம்பிக்கைகளின் பக்கம் மக்களைத் திருப்பாதீர்கள்" என்று கலாநிதி ஓமல்பே சோபித தேரர் விமர்சித்திருக்கிறார்.

"மாய மந்திரங்கள் தெய்வ சக்திகள் உட்பட வேறு வழிபாடுகள் மூலம் கொரோனா வைரஸை அழிக்க முடியும் என்ற நம்பிக்கையை பௌத்த தர்மம் ஏற்றுக் கொள்ளாது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். "பௌத்த தர்மம் அப்படியானவற்றை செய்யுமாறு மக்கள் தூண்டாது. இவை மூடநம்பிக்கைகள். வணங்குதல் பூஜைகளைச் செய்தல் ஊர்வலங்களை நடத்துதல் என்பவை பௌத்த தர்மத்தில் உள்ளவை அல்ல". என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மைதான் இலங்கைதீவில் ஒற்றையாட்சி கட்டமைப்பை பாதுகாக்கும் பௌத்த மதக் சிந்தனை எனப்படுவது பல்லினத்தன்மைக்கும் பல்சமய பண்புக்கும் எதிரானது மட்டுமல்ல அது புத்தருடைய அடிப்படை தத்துவங்களோடு முரண்படுவது. பௌத்தத்தை வெற்றுச் சடங்காகச் சுருக்குவது.

இப்படித்தான் இறைச்சிக்காக மாட்டை வெட்டும் விடயத்திலும் புத்தரை முன் நிறுத்தினார்கள். அதன் மூலம் மாட்டிறச்சியை அதிகம் நுகரும் மதப் பிரிவினரின் பண்பாட்டு உரிமைகளை புண்படுத்த முயற்சிக்கிறார்கள். ஆனால் புத்த பகவான் எங்கேயும் புலால் உண்ணாமையை வலியுறுத்தவில்லை.

அதுபோலவே கொரோனாத் தொற்றினால் இறந்த முஸ்லிம்களின் ஜனாசாக்களை புதைக்கக் கூடாது எரிக்கத்தான் வேண்டும் என்று அரசாங்கம் கண்டிப்பாகக் கூறுகிறது. இது விடயத்தில் சுகாதாரக் காரனங்களுக்காக முஸ்லிம்களின் மத உணர்வுகளை பண்பாட்டு உணர்வுகளை மதிக்காத ஒரு அரசாங்கத்தின் ஒரு அமைச்சரே இப்படிக் கழிப்புக் கழிப்பதை எப்படிப் பார்ப்பது?

ஆனால் பௌத்த மதத்தையும் அதன் சின்னங்களையும் கொடிகளையும் குறியீடுகளையும் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குக் கவசமாகப் பயன்படுத்தும் சிங்கள அரசியல்வாதிகள் பொத்த தேவாலயங்களில் பதவிகளைப் பொறுப்பேற்கும் சிங்கள அரசியல்வாதிகள் புத்தர் போதித்த அகிம்சைக் கோட்பாட்டையோ அல்லது அறநெறிகளையோ பின்பற்றுவதில்லை. மாறாக புத்தருடைய போதனைகளை கழிப்புக் கழிக்கும் ஒரு சுகாதார செய்முறையாகக் குறுக்கி விடுகிறார்கள்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647) 619-3619

அறிவித்தல்

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர்களது பெற்றோர், சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது. கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர், தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர், புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர்களது குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம். போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம். நன்றி. வணக்கம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம். தொடர்பு இலக்கம்: 647 619 3619 ctro@tamilremembrance.com.



Preparation of Income Taxes
T1 and T2 with E/File

Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236



Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

# புல்வாமா தாக்குதல்: "அரச பயங்கரவாதத்தை" ஒப்புக்கொண்டு நெருக்கடியில் சிக்கியுள்ள பாகிஸ்தான்

**- சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்**



சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் இந்தியாவின் காஷ்மீர் பகுதியிலுள்ள புல்வாமாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற தாக்குதலுக்கு பாகிஸ்தான் பொறுப்பேற்றுள்ளது.

கடந்த 2019 பிப்ரவரி 14ஆம் திகதி ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பினரால் தற்கொலை குண்டுத் தாக்குதல் மூலம் நடத்தப்பட்ட அத்தாக்குதலில் இந்தியாவின் மத்தியப் பாதுகாப்புப் படையினர் (சிஆர்பிஎப்) 40 பேர் கொல்லப்பட்டனர். அத்தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் இருந்தது என்று இந்திய அரசு தொடர்ந்து கூறியதைப் பாகிஸ்தான் நிராகரித்து வந்துள்ளது. பாகிஸ்தானுக்கு களங்கம் ஏற்படுத்த-இது இந்தியாவே செய்த சதி என்று பாகிஸ்தான் கூறி வந்தது.

ஆனால் பாகிஸ்தானின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் அமைச்சர் ஃபவாத் சௌத்ரி இத்தாக்குதலின் பின்புலத்தில் இராணுவம் இருந்தது என்று நாடாளுமன்ற விவாதம் ஒன்றில் தெரிவித்தார்.

இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் ஆட்சி உள்நாட்டில் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் நிலையில் இந்தக் கருத்து அரசியல் ரீதியாக தமக்கு ஆதரவாகப் பார்க்கப்படும் என்று கருதி அமைச்சர் அதை நாடாளுமன்றத்தில் முழங்க "தவளை தன்வாயால் கெடும்" என்ற சூழல் ஏற்பட்டுள்ளது. புல்வாமா தாக்குதல் இருநாட்டு உறவுகளை மிகக் கடுமையாக பாதித்ததோடு மட்டுமின்றி பன்னாட்டு அரங்கில் பாகிஸ்தான் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் ஆதரவு:

சர்வதேச அளவில் இஸ்லாமிய நாடுகள் மத்தியில் கூட அண்மைக் காலமாக பாகிஸ்தான் ஆதரவை இழந்து வருகிறது. பல தசாப்தங்களாக பாகிஸ்தானின் நெருங்கிய கூட்டாளியாக இருந்த சவுதி அரேபியாவும் பாகிஸ்தானிடமிருந்து விலக ஆரம்பித்துள்ளது. ஆனால் சீனாவுடன் பாகிஸ்தானுக்கு இருக்கும் நெருக்கம் காரணமாகவும், ஐநா பாதுகாப்புச் சபையில் சீனாவுக்கு இருக்கும் வெட்டுவாக்கு அதிகாரம் காரணமாக பாகிஸ்தான் மீது கொண்டுவரப்படும் தீர்மானங்கள் பன்னாட்டரங்கில் தடுக்கப்பட்டன.



எனினும் பாகிஸ்தான் பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண்ணாக விளங்குகிறது என்று இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற பல நாடுகள் நீண்டகாலமாகக் கூறிவந்துள்ளன. தற்போது நாட்டின் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு மூத்த அமைச்சர் புல்வாமா தாக்குதலுக்கு இராணுவப் பின்புலம் இருந்தது என்று கூறியிருப்பது அங்கு அரசுக்கும் அந்த அரசையே தமது பிடியில் வைத்திருக்கும் இராணுவத்துக்கும் இடையே மோதல் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இம்ரான் கான் அரசுக்கு தைரியம் இல்லை, நாட்டின் தேசியப் பாதுகாப்பில் அரசு சமாதானம் செய்கிறது என்று எதிர்கட்சிகள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க அரசு இரகசியம் வெளிவந்தது.

"இந்திய நிலப்பரப்புக்குள் நுழைந்து புல்வாமாவில் பாகிஸ்தான் பதிலடி கொடுத்தது - இது பிரதமர் இம்ரான் கானின் தலைமையிலான பாகிஸ்தான் அரசுக்கும் அதன் மக்களுக்கும் கிடைத்த வெற்றியாகும்" என்று ஃபவாத் சௌத்திரி நாடாளுமன்றத்தின் கூறியதை பின்னர் மறுதலித்தார்.



தனது கருத்து தவறாகக் கற்பிதம் செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினாலும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவர் நாடாளுமன்றத்தில் பேசிய உரையின் காணொளி உலகுக்கு உண்மையை உரைத்தது.

இந்தியாவில் அரசியல் எனினும் இது குறித்து இந்திய அரசு உடனடியாக கண்டனம் தெரிவிக்கும் என்று எதிர்பார்த்த நிலையில், அரசின் கருத்து 24 மணி நேரங்களுக்கு பிறகே வந்தது. பாகிஸ்தான் உண்மையை ஒப்புக் கொண்டுள்ளது, உலகம் இனி விழித்துக் கொள்ள வேண்டும் என்று பட்டும் படாமலும் இந்தியத் தரப்பில் வெளியுறவு அமைச்சக பேச்சாளரால் கூறப்பட்டது. ஆனால் ஒரு நாளுக்குப் பிறகு இந்த விஷயம் உள்நாட்டில் சூடுபிடித்தது. புல்வாமா தாக்குதல் நடைபெற்ற போது காங்கிரஸ் கட்சி தெரிவித்த கருத்துக்கள், இப்போது பாகிஸ்தானின் ஒப்புதலை அடுத்து பொய் என்று தெரிந்துவிட்டது என்று ஆளும் பாரதிய ஜனதா கட்சி விமர்சனம் செய்துள்ளது.


அதாவது அச்சமயத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி இந்தியப் பாதுகாப்புப் படையினரைச் சிறுமைப்படுத்தும் விதமாக கூறிய கருத்தை விமர்சனம் செய்ய பாஜக பாகிஸ்தானின் ஒப்புதலை ஒரு ஆயுதமாக முன்னெடுத்துள்ளது.

"இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் காரணமில்லை, ஆளும் கட்சியான பாஜக மக்களை ஏமாற்றும் வகையில் இதற்கு பாகிஸ்தான் காரணம் என்று கூறுகிறது" என்று ராகுல் காந்தி அப்போது கூறியிருந்தார் என்று பாஜக மீண்டும் சுட்டிக்காட்டுகிறது.

அடுத்து என்ன?

இந்திய பாகிஸ்தான் உறவுகள் மிகவும் பின்னடைந்துள்ள நிலையில், பாகிஸ்தானின் கருத்து சர்வதேச அரங்கில் தமக்கு வலு சேர்க்கும் என்று இந்தியா கருதுகிறது. ஆனால் சில அரசியல் அவதானிகளோ, ஒரு அரசியல்வாதி கூறிய கருத்தை பாகிஸ்தான் அரசின் கருத்தாகக் கருத முடியாது உள்நாட்டு அரசியலுக்காக அவர் அந்தக் கருத்தைக் கூறியுள்ளார் என்கிறார்கள்.

இம்ரான் கானின் அரசு பல்துறைகளில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. குறிப்பாக சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பில் பாகிஸ்தான் பெரும் நெருக்கடியில் உள்ளது.




பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதச் செயல்பாடுகளுக்குத் துணை போகும் வகையில் ஒரு அரசு சட்டவிரோதமான பண பரிவர்த்தனையில் ஈடுபடும் போது அந்த நாட்டை பன்னாட்டு அமைப்பான பினான்சியல் ஆக்ஷன் டாஸ்க் ஃபோர்ஸ் (FATF) கண்காணிப்பில் வைக்கும்.

சர்வதேச அளவில் பன்னாட்டு அரசுகள் இணைந்து உருவாக்கிய இந்த அமைப்பானது பயங்கரவாதத்துக்கு நிதியுதவிகள் வழங்கப்படுவதைக் கண்காணித்து அதற்கு எதிரான நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யும். பல நாடுகள் அதன் உருவாக்கத்தில் கையெழுத்திட்டுள்ளதால், அந்தப் பரிந்துரைகள் சட்ட வலிமை கொண்டது.

பிரான்ஸைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பு பாகிஸ்தானின் நடவடிக்கைகள் காரணமாக அதைக் கருப்புப் பட்டியலில் சேர்க்க முன்னெடுப்புகளைச் செய்தது எனினும் சீனாவின் தலையீடு மற்றும் சில வாக்குறுதிகள் அளித்ததை அடுத்து நூலிழையில் தப்பித்த பாகிஸ்தான் இப்போது சாம்பல் நிறப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் சேர்க்கப்படுவதைத் தவிர்க்க இம்ரான் கான் அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது அவரது அரசு மீது வைக்கப்படும் குற்றச்சாட்டு. ஆனால் பாகிஸ்தான் இராணுவம் ஜெய்ஷ்-இ-முகமது, லக்க்ஷர்-இ-தயிபா போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்குப் பின்புலமாக இருந்து நிதி மற்றும் இராணுவ உதவிகளை வழங்கி வருகிறது என்று இந்தியா, பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகள் ஐநா மற்றும் இந்த குயுவுகு அமைப்பிடம் முறையிட்டிருந்தன.

ஒரு நாடு அந்த அமைப்பின் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டால் அதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும். பன்னாட்டு அரங்கில் குறிப்பிட்ட நாடு சட்டவிரோத பணப் பரிமாற்றம் மூலம் பயங்கரவாத நடவடிக்கைக்குத் துணை போகிறது என்று மோசமாகச் சித்தரிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படும் நிலை ஏற்படும். அதுமட்டுமின்றி உலகில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் குறிப்பிட்ட நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க முடியும்.

தற்போது பாகிஸ்தானின் ஒப்புதலை அடுத்து அந்நாடு இந்தக் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. இந்திய அரசின் வெளியுறவு துறை துணை அமைச்சரும் இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதியுமான ஜெனரல் வி.கே.சிங் இதற்கான குரலைக் கொடுத்துள்ளார். அவரது கருத்து இந்திய அரசின் கருத்தாகவே தோன்றுகிறது. எனினும் தற்போது சாம்பல்நிறப் பட்டியலில் இருக்கும் பாகிஸ்தான் அடுத்து நடைபெறவுள்ள கூட்டத்தில் தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டிய நிலையிலுள்ளது. பிரதமர் இம்ரான் கான் எப்படியான நிலைப்பாட்டை எடுப்பார் என்று சர்வதேசம் உற்று நோக்க ஆரம்பித்துள்ளது.

தனது அமைச்சர் நாடாளுமன்றத்தில் கூறிய கருத்து பிழையானது என்றால் அவர் ஏன் பதவியிலிருந்து நீக்கப்படவில்லை எனும் கேள்விக்கு இம்ரான் கான் உள்நாட்டில் பதிலளிக்க வேண்டியிருக்கும். அப்படி அவர் ஃபவாத் சௌத்ரியை நீக்கினால் அது கட்சி மற்றும் ஆட்சியில் எதிரொலிக்கும். அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் அவர் கூறியது அரசின் கருத்தாகப் பார்க்கப்பட்டு, பாகிஸ்தான் கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் எனும் கோரிக்கை வலுப்பெறக் கூடும். தற்போது அந்தக் கருப்புப் பட்டியலில் வட கொரியா மற்றும் இரான் ஆகிய நாடுகள் உள்ளன.

அப்படியொரு சூழல் ஏற்பட்டால் பாகிஸ்தானின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குச் சென்றுவிடும். பாகிஸ்தானுக்கு பன்னாட்டு அரங்கில் இப்போது சீனா மற்றும் துருக்கி ஆகிய இரு நாடுகள் மட்டுமே வெளிப்படையாகப் பக்கபலமாக உள்ளன. இஸ்லாமிய நாடுகள் கூட்டமைப்பில் கூட பாகிஸ்தானுக்குப் பெரியளவில் ஆதரவில்லை. சவுதி அரேபியா அண்மையில் பல விஷயங்களில் பாகிஸ்தானைப் புறந்தள்ளி வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.



பாகிஸ்தானின் அரசையே தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இராணுவம் கூறும் தகவலோ வேறு மாதிரியாகவுள்ளது. அமைச்சரின் கருத்து சரியானது அல்ல என்று கூறும் இராணுவம், அவர் கூறியது போல் இந்தியாவின் புல்வாமாவில் நடைபெற்ற


## முக்கிய அறிவித்தல்

## பிரம்டன் தமிழ் முதியோர் கழக அங்கத்தவர்களுக்கு

COVID-19 தொற்று நோய் பரவல் காரணமாக மேற்படி கழகத்தினால் நடாத்தப்படும் அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டங்கள், வைத்திய கருத்தரங்குகள், ஆலோசனைகள், யோகாப் பயிற்சிகள், ஆங்கில வகுப்புகள், KEY BOARD வகுப்புகள் என்பன ZOOM மூலம் நடாத்த கழக நிர்வாகம் தீர்மானித்து நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

ZOOM LINK I.D, PASSWORD என்பன அங்கத்தவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. கிடைகாதவர்கள், தவறவிட்டவர்கள் நிர்வாகத்தினரைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும். தவறவிட்டவர்கள், கிடைக்காதவர்கள் நிர்வாகத்தினரைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

**விபரங்கள்:**

1) யோகாப்பயிற்சி பிரதிதிங்கள்/வியாழன் தோறும் காலை 10:00 மணி முதல் 11:00 மணி வரை.
2) பொதுக் கூட்டம்: பிரதி திங்கள் தோறும் இரவு 8:00 மணி முதல் 10:00 மணி வரை.
3) ஆங்கில வகுப்புகள்: பிரதி திங்கள்/வெள்ளி தோறும் மாலை 4 மணி முதல் 5 மணி வரை.
4) KEY BOARD வகுப்புகள்: பிரதி செவ்வாய் தோறும் காலை 10 மணி முதல் மாலை 1:30 வரை நான்கு குழுக்களாக நடைபெறும்.
5) கருத்தரங்குகள். பிரதி வியாழன் மாலை 8:00 - 10:00 வரை.
6) வானொலியில் பங்குபெறல்பிரதி செவ்வாய், சனி மாலை 8-10 மணி வரை யுகம் வானொலியில் எங்கள் சங்கத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது..அனைவரும் இதில் பங்குபற்றி உங்கள் ஆற்றல்கள், திறமைகளை வெளிப்படுத்தி இன்புறுங்கள். தொலைபேசி (416) 455-4343

கார்த்திகை 5ந் திகதி Dr. Varakunan அவர்களால் "பொது உடல் நலம் - COVID-19" இன் தற்போதைய நிலை பற்றிய கருத்தரங்கு மாலை 8மணி முதல் 10மணிவரை நடைபெறும்.
கார்த்திகை 12ந் திகதி ஆயசல Cury Paul BDSMA on Oral Health (வாய் நலம் பேணுவோம்) என்னும் கருத்தரங்கு மாலை 8-10 மணி வரை நடைபெறும்.
அனைவரும் பங்குபற்றி பயனடைவீர்,

நன்றி!

தலைவர்: திரு. டேவிட் ராஜரட்ணம்
(416) 458-3270

# இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!









# 20 ஆவது திருத்தத்தை வரமாகப் பெற்றிருக்கும் ஜனாதிபதி அதைத் தமிழ் மக்களின் சாபமாக்கினால் கடைசியில் அது நாட்டுக்கே சாபமாகி விடும்

**– தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் – பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை**



நிறைவேற்று அதிகாரங்களைத் தனக்கு மீட்டெடுக்கும் முயற்சியில் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச வெற்றி பெற்றுள்ளார். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் ராஜபக்ச குடும்பத்தின் கைகளில் அதிகாரங்கள் போய்விடக்கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட 19ஆவது திருத்தத்தில் ராஜபக்ச சகோதரர்கள் தங்களுக்குச் சாதகமான திருத்தங்களைக் கொண்டுவந்து 20ஆவது திருத்தச்சட்டத்தை ஒரு தவமாகவே இருந்து நிறைவேற்றியுள்ளனர். இது ஜனாதிபதி கோதாபய ராஜபக்சவுக்கு அசுரப் பலத்தைப் பெற்றுக்கொடுத்திருக்கும் ஒரு வரம் ஆகும். ஜனாதிபதி அதை ஒருபோதும் தமிழ் மக்களின் சாபமாக்கி விடக்கூடாது. அவ்வாறு நேரின் கடைசியில் அது முழு நாட்டுக்குமே பெரும் சாபமாகி விடும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாகப் பொ. ஐங்கரநேசன் இன்று வெள்ளிக்கிழமை (06.11.2020) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிரதமர் மகிந்த ராஜபக்ச அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உள்ள குறை-பாடுகளே இஸ்லாமியப் பயங்கரவாதத்தைக் கடந்த அரசாங்கத்தால் ஒடுக்க முடியா-மல் போனது என்றும், நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியாகத் தான் இருந்தமையாலேயே விடுதலைப் புலிகளை அழிக்க முடிந்தது என்றும் தெரிவித்திருக்கிறார். ஆனால், இஸ்லாமியத் தீவிரவாதத்தை ஒடுக்க முடியாமற் போனதற்கும், மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடிந்தமைக்கும் அரசியலமைப்புக் காரணம் அல்ல. இஸ்லாமியத் தீவிரவாதம் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டமைக்குப் பாதுகாப்புத்தரப்பில் இருந்த குறைபாடுகளும், விடுதலைப் புலி-களை அழிப்பதற்கு அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின்னர் மாறிய சர்வதேச அரசியல் நிலவரங்களுமே காரணங்களாகும். இக்காரணங்களைத் தவிர்த்து பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களை வேண்டி நிற்பது அரசாங்கத்தால் பயங்கரவாத கண்கொண்டு நோக்கப்படும் சிறுபான்மையின மக்கள் மன-தில் சந்தேகங்களையே விதைத்திருக்கிறது.

ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் மிக்கவராக மாறியவுடனேயே அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ மேற்கொண்ட இலங்கை விஜயமும், இதன்போது அவர் சீனாவை இலங்கையைச் சூறையாடும் ஒரு வேட்டைக்காரனாக உருவகித்து ஆற்றிய உரையும், தொடர்ந்து அவசரம் அவசரமாகத் தமிழ்த் தேசியத் திட்டமைப்பின் தலை-வர் இரா. சம்பந்தனுக்கும் இலங்கைக்கான இந்தியகத் தூதுவருக்கும் இடையில் நிகழ்ந்த சந்திப்பும் இலங்கை இந்நாடுகளுக்கிடையேயான இந்தோ பசுபிக் போட்டியின் மோதுகளமாகியுள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளது. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்தபோது அவர் எடுத்திருந்த அமெரிக்க சார்பு நிலைப்பாடு ஈழத்தமிழர் பிரச்சினையைக் காரணங்காட்டி இந்தியா இலங்கையில் தலையிடக் காரணமாக அமைந்தது. இந்தியாவுக்கு எதிராக ராஜபக்ச சகோதரர்கள் எடுத்த சீனச் சார்பு இப்போது அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கைக்கு இராஜ தந்திர நெருக்குதல்களைக் கொடுக்கக் காரணமாக அமைந்துள்ளது.

ஈழத் தமிழர்கள் தமிழ் நாட்டுடன் கொண்டிருக்கும் உறவு காரணமாக இலங்கை ஒருபோதும் இந்தியாவை நேசநாடாகக் கருதியதில்லை. இனிமேலும் கருதப்போவதுமில்லை. இதனா-லேயே எதிரிக்கு எதிரி நண்பன் என்ற ரீதியில் இலங்கையில் சீனாவை அதிகம் காலூ ன்ற அனுமதித்திருக்கிறது. அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தக யுத்தம் இப்போது பனிப்போராக மாறியிருக்கிறது. அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகளினதும் குவாட் அணி வெளிப்படையாகவே சீனாவை எதிர்த்து வருகிறது. இந்நிலையில், சீனச்சார்பு நிலை எடுத்திருக்கும் இலங்கையின் நடுநிலையற்ற வெளி உறவுக்கொள்கை காரணமாக இந்நாடுகளின் அழுத்தங்களுக்கு இலங்கை அடிப-ணிய வேண்டிய இக்கட்டுக்கு ஆளாகியுள்ளது.

வல்லரசுகளின் போட்டிக்களமாக இலங்கை சிக்கியுள்ளமைக்கு தீர்க்கப்படாது நீண்டு செல்லும் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையே அடிப்படைக் காரணமாகும். நிறைவேற்று அதிகாரப் பலத்தாலேயே விடுதலைப் புலிகளைத் தங்களால் தோற்கடிக்க முடிந்தது என்று கூறிய ராஜபக்ச குடும்பமே இன்று ஆட்சியில் இருப்பதால், அதே நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வினையும் புதிய அரசியல் யாப்புக்கு ஊடாகப் பெற்றுத்தர முடியும். தவறினால் இலங்கையின் இறைமையையே பாதிக்கக்கூடிய அளவிற்கு தமிழ் மக்களை ஒரு துருப்புச் சீட்டாக வைத்து வல்லரசு நாடுகள் ஆடும் இந்தப் பூகோள அரசியல் போட்டியில் இலங்கை பலிக்கடாவாவது தவிர்க்க முடியாததாக ஆகிவிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

# சிறந்த நடிகராக விருது பெற்ற இலங்கைத் தமிழ் நடிகர் ஜெய் ஆகாஸ் ( சதீஸ் நாகேஸ்வரன்)

ஏலையா க.முருகதாசன்



சீ (Zee Tamil) தமிழ்த் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நாடகங்களில் நடித்த நடிக நடிகைகளுக்கு, கதாபாத்திரங்களில் அவர்கள் நடித்த சிறப்பான நடிப்புக்கேற்ப குடும்ப விருதுகள் என்ற பரிசளிப்பு நிகழ்வு இவ்வாண்டும் (2020) இடம்பெற்றுள்ளது.

இப்பரிசளிப்பு நிகழ்வு முன்னோடியாக நாடகங்களில் நடித்த நடிகர்,நடிகைகளை மூன்று நாட்கள் ,பலவறைகள் கொண்ட ஒரு வீட்டில் தங்க வைக்கப்பட்டு,அவர்கள் மத்தியில் பல போட்டிகளை நடத்தி இறுதி விழாவாக விருது வழங்கல் விழாவினைச் செய்துள்ளனர்.

விருது பெற்ற நாடகங்களில் ,,நீதானே எந்தன் பொன் வசந்தம்' என்ற நாடகத்தில் நடித்த இலங்கைத் தமிழரான ஜெய் ஆகாஸ் சிறந்த நடிகராக பொதுமக்களாலும் தேர்வு செய்யப்பட்டு சிறந்த நடிகர் என்ற விருதளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் பெற்றோருடன் இலண்டனில் வாழ்ந்தவர்.பல ஆண்டுகளுக்கு முன்பு திரைப்படங்களில் நடிக்கவென தமிழகம் சென்ற இவர் பல திரைப்படங்களில் கதாநாயகனாகவும் ,துணைக் கதாபாத்திரங்களில் நடித்த போதும் இவரால் தமிழ்த்திரைப்படத்துறையில் பலமாக காலூ ண்ற முடியவில்லை.

பின்னர் சில தெலுங்குப் படங்களில் நடித்த போதும், இவரால் பெரும் திரை வெளிச்சத்தைப் பெற முடியவில்லை.

இலண்டனில் பெற்றோருடன் வாழ்ந்த ஆகாஸ் என்ற இலங்கைத் தமிழ் இளைஞன் தமிழகத்தில் நடிகராக இருக்கிறார் என்பது பற்றி அவ்வப்போது குறுஞ் செய்திகளாக ஊடகங்களில் வெளிவந்ததை நான் வாசித்திருக்கிறேன்.

இதைவிட நாங்கள் இலண்டனிலிருக்கும் எமது உறவினர்களிடம் சென்று வருகையில் ஒரு தருணத்தில் எனது சகலன் முறையானவருடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது, ஆகாஸ் என்ற இலங்கைத் தமிழ் நடிகரைப் பற்றிச் சொல்லியவர், அவர் தெலுங்குப் படங்களில் நடித்ததையும் அந்த நடிகர் சொந்த வாழ்க்கையில் காதலியால் காதல் ரீதியாக ஏமாற்றப்பட்டதையும் கதையோடு கதையாகச் சொன்னார்.என்னைப் போல ஊடகங்களை நோட்டம் விடுபவர்கள் பலர் இதனை அறிந்திருக்கலாம்.

விருது வழங்கல் விழாவின் போது, அவரின் பெற்றோர் உறவினர்கள் இலண்டனிலிருந்து வாழ்த்தியமையை நேரடியாக திரையில் காட்சியப்படுத்திய போது நான் அறிந்து கொண்ட போது இலங்கைத் தமிழ் நடிகர் இவர்தான் என்பதையும் அதுசார்ந்த தகவல்களையும் உறுதிப்படுத்த முடிந்தது.

எனது சகலன் முறையானவர் சொன்ன விடயங்களை பொதுவெளியில் பகிர்ந்து கொள்ள இயலாது என்பதால் அதனைக் குறிப்பிடவில்லை.

தமிழகத் திரைப்படத்துறையில் ஆகாஸ் என்ற பெயரில் இன்னொரு நடிகரும் இருப்பதால்தான் இவர் தனது பெயரை ஜெய் ஆகாஸ் என்று மாற்றிக் கொண்டாரோ தெரியவில்லை.

சிறந்த நடிகராக சீ தமிழ் குடும்ப விருது பெற்ற இலங்கைத் தமிழரான ஜெய் ஆகாஸை வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.

தமிழகத் திரைப்படத்துறையாகட்டும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளாகட்டும் இலங்கைத் தமிழர்களிடம் திறமையிருந்த போதும்,அவற்றில் தம்மை வெளிப்படுத்துவது என்பது சாதாரண காரியமல்ல.ஒன்று அங்கு கலை ஈடுபாடுடையவர்கள் பல்கிப் பெருகியிருக்கிறார்கள்.

அத்துடன், திரைப்படத்துறையாகட்டும் தொலைக்காட்சி சம்பந்தப்பட்ட துறையாகட்டும் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாத நிலையும் அங்குள்ளது. தரகர் மூலமாகவே தொடர்பு கொள்ளும் முறையுடன் பணமும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது.

நாங்கள் குடும்பமாக 2008ஆம் ஆண்டு தமிழகம் சென்ற போது ஒரிரவு ஏவிஎம் ஸ்ரூடியோவுக்கு முன்னால் உள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்த போது, அவ்விடுதியில் தங்கியிருந்த இளம் ஆண் பெண் எனப் பலர் திரைப்படத்தில் நடிக்கும்
ஆசையில் அங்கு தங்கியிருப்பதாக அந்த விடுதி உரிமையாளர் மூலம் அறிந்தேன். கேரளத்திலிருந்தும் சிலர் திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கேட்பதற்காக வந்திருந்ததை அறிந்து கொண்டேன்.

பேச்சோடு பேச்சாக திரைப்படத்தில் நடிக்கும் நோக்கோடு இலண்டனிலிருந்து வந்த ஒரு இளைஞர் அதில் தோற்றுப் போய் இருபத்தைந்து இலட்சம் ரூபாய்களை விரையமாக்கிவிட்டுச் சென்றதையும் உரிமையாளர் சொன்னார்.

இப்படியான சுழிகளுக்குள் சிக்கிய ஜெய் ஆகாஸ் தொலைக்காட்சி நாடகத்தில,திரைப்படங்களில் நடித்தமையும், தொடர்நாடகமொன்றில் நடித்து சிறந்த நடி-கராக விருது பெற்றுள்ளமை ஒரு சாதனையே.

இலங்கையில் கொழும்பில் 18.03.1981இல் பிறந்த இவருடைய இயற்பெயர் சதீஸ் நாகேஸ்வரன்.இலண்டன் பல்கலைக்கழகமொன்றில் படித்த இவர், திரைப்படங்களில் நடிக்க வேண்டும் என்ற ஆசையில் தமிழகம் சென்று, 1999 ஆம் ஆண்டிலிருந்து தனது நடிப்புப் பயணத்தை ஆரம்பித்தார்.

நடிக, நடிகைகளுக்காக படம் பார்க்கின்ற போக்கு தமிழத் திரைப்படத்துறையில் இருக்கவேதான் செய்கிறது.யார் நடித்தாலும் நல்ல படம் என்றால் பார்ப்போம் என்ற மன வளர்ச்சி தமிழ் இரசிகர்கள் மத்தியில் அரிதாகவே இருக்கின்றது.

அதனை இவருடைய படங்களும் நிரூபித்திருக்கின்றனவோ என்று எண்ணத் தோன்றுகின்றது. ஒவ்வொரு மொழிப் படங்களிலும் நடிக நடிகைனளின் முகத் தோற்றம் அந்தந்த மொழிப் படங்களுக்கு ஏற்றவை என்ற பரிச்சயத்தை இரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்துவதுண்டு.ஜெய் ஆகாசின் முகத் தோற்றம் ஒரு தெலுங்கு நடிகருக்குரியதாக இருப்பதாலோ என்னவோ தமிழ் இரசிகர்கள் அவரைக் கொண்டாடவில்லையோ என்னவோ.

அவர் எல்லாமாக 43 படங்களில் நடித்த போதும், திரைப்படங்களுச் சமமாக இன்றைய காலத்தில்,வரவேற்பைப் பெற்று வரும் தொடர்நாடகங்களில் சீ தமிழின் நீதானே எந்தன் பொன் வசந்தம் நாடகத்தில் நடித்தமைக்காக சிறந்த நடிகருக்கான விருதினைப் பெற்றதன் மூலம் அத்தொடர் நாடகத்தை பார்த்துவருகின்ற இலங்கையில் உள்ள தமிழர்களாகட்டும், புலம்பெயர் தமிழர்களாகட்டும் ,,ஓ ..நம்முடைய ஆளா' என கவனிக்கத் தொடங்கியிருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

இவருடைய திரைப்பட வாழ்க்கையில், தெலுங்கிலிருந்து தனது மதன் என்ற படத்தில் நடிப்பதற்காக இவரால் கொண்டுவரப்பட்ட சுனைனா என்ற நடிகை, அதிக பணம் கேட்டு, பாதி நடிக்காமல் போனது ஒரு சறுக்கலாகவே பார்க்க முடிகின்றது.

இவருடைய திரைப்படத்துறை வாழ்க்கையைப் பார்க்கும் போது, இவரைத் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டதையும் ஊகிக்க முடிகின்றது.

எது எப்படி இருந்த போதிலும் எமது நடிகரைக் கொண்டாடுவோம்.



# இலங்கையில் இடம்பெறும் கொரோனா அஞ்சல் ஓட்டமும் அரசியல் கஞ்சல் தனமும்



**- யாழ்ப்பாணத்திலிருந்து விசாகன் எழுதுகின்றார்**

சில பேச்சாளர்கள் மேடையில் தங்கள் உரையைத் தொடங்கும் முன்னர் "எல்லோருக்கும் பொதுவான இறைவனை வணங்கி எனது பேச்சைத் தொடங்குகின்றேன்" என்பார்கள். இறைவன் ஒருவனே உலக மக்களுக்கு பொதுவானவன் என்ற கருத்து பொதுவெளியில் முன்வைக்கப்படுகின்ற வழக்கம் உள்ள எமது தற்போதைய வாழ்நாட்களில் கொரோனா என்னும் கொடிய நோயோடு போட்டி போடுவதா அல்லது சமரசம் செய்து வாழ்வதா என்று தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மேலும் சொல்லப்போனால் தற்போது கொரோனாவும் இறைவனைப் போலவே, உலக மக்களுக்கு "பொதுவான" ஒரு அச்சுறுத்தலாக விளங்குகின்றது.

இவ்வாறான ஒரு இக்கட்டான வேளையில் இலங்கையில் உள்ள சமூக மற்றும் அரசியல் தொடர்பான தேவைகள் அல்லது அவசியம் என்பதை நாம் ஆராய வேண்யவர்களாக நாம் எம்மை தயார் செய்து கொள்ளவேண்டும். இலங்கையில் அதிகளவு பிரதேசங்களில் கொரோனா வைரஸ் தொற்று பரவியிருக்கும் இன்றைய நிலையில், மக்கள் அனைவரும் பூரணமான ஒத்துழைப்பு வழங்கினால் மாத்திரமே நோய்த் தொற்றை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியுமென இலங்கையின் சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது. இதற்குக் காரணம் இலங்கையின் வடக்கிலும் தெற்கிலும் கொரோனாவின் தாக்கம் மிகவும் அதிகமாகவே உள்ளது. இலங்கையில் உள்ள மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், அந்தந்த மாவட்டங்களின் செயலாளர்கள் என்று அழைக்கப்படுகின்ற அரசாங்க அதிபர்களின் நாளாந்தப் பணிகள் இந்த "கொரோனாவோடே கழிந்து விடுகின்றதை நாம் நேரடியாகவே இங்கு பார்க்கின்றோம்.

இலங்கையில் ஏற்கனவே இரு தடவை தலைதூக்கிய அலைகளைப் போலன்றி, மூன்றாவது தடவை உருவெடுத்துள்ள கொரோனா அலை பாரதூரமாக உள்ளதனாலேயே மக்களுக்கு இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையில் முதன் முதலில் தோன்றிய அலையின் போது, நாட்டின் ஒரு சில இடங்களில் மாத்திரமே கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். இருந்த போதிலும், தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு முழு நாடுமே முடக்கப்பட்டதனாலும், அதிகாரிகள் மேற்கொண்ட துரிதமான நடவடிக்கைகளாலும், மக்களின் விழிப்புணர்வு காரணமாகவும் முதலாவது அலை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்தக் கொரோனாவின் தாக்கம் ஆரம்பத்தில் இலங்கையில் மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, மற்றைய நாடுகளில் கடைப்பிடிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளைப் போன்று இல்லாமல் ஆட்சியில் உள்ளவர்கள் தங்கள் தங்கள் நலனையும் எதிர்காலத்தையும் பற்றி அக்கறை கொள்வதிலேயே கவனஞ் செலுத்துகின்றார்கள் என்பதை கவனிக்கத் தவறியிருக்க மாட்டோம்.

இலங்கையில் வாழும் மூன்று இனங்களைச் சேர்ந்த மக்களுக்கும் தங்கள் வாழ்க்கை தொடர்பாகவும் தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பாகவும் பாதுகாப்பு தொடர்பாகவும் பல பிரச்சனைகள் உள்ளன. இவை அனைத்திற்கும் அரசியல் தான் காரணம் என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் இங்கு அரசியல் என்பது அரசியல் பதவிகளைப் பெற்றுக்கொள்வதிலும், அவற்றைத் தக்கவைத்துக் கொள்வதிலும், பின்னர் அந்தப் பதவிகளின் மூலம் தங்கள் வழித்தோன்றல்களையும் எதிர்காலத்தில் தாங்கள் அனுபவிக்கும் அனைத்து சலுகைகளையும் பெற்றுக்கொள்ளும் வகையில் தங்களைத் தயார் படுத்துவதே அவர்கள் நோக்கமாக உள்ளது.

இதன் காரணமாகத் தான் அவர்கள் தேர்தல்களை நடத்துகின்றார். தங்கள் வேட்பாளர்கள் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக அரச வளங்களைப் பயன்படுகின்றார்கள். ஆட்சியாளர்களுக்கும் அவர்களுக்கு ஆலோசனை வழங்கும் மற்றும் பாதுகாப்பு வழங்கும் அனைத்து தரப்பினருக்கும் தேவையான சலுகைகளை வழங்குவதற்காக அரசின் பொருளாதாரம் பெருமளவு வீணடிக்கப்படுகின்றது. ஆனால் சிங்கள மக்கள் மற்றும் இஸ்லாமிய மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. போராட்ட உணர்வுகொண்ட இடதுசாரி அரசியல்வாதிகள் சோரம் போனவர்களாக மாறிவிட்டார்கள். இதனால் போர்க்குணம் என்பது மழுங்கடிக்கப்பட்டுவிட்டது. இதே போன்று தான் தமிழ் மக்களின் எநதப் பிரச்சனைகளும் தீர்க்கப்படவில்லை அல்லது கவனிக்கப்படவில்லை என்றே கூற வேண்டும். தமிழ் பேசும் அரசியல் வாதிகள் தங்கள் தங்கள் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார்கள். உதாரணமாக தமிழரசுக் கட்சியின் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஆகிவிட்டார். மற்றவர்கள் அவரை தேர்ந்தெடுத்தாலும் அவரும் அந்தப் பதவியை விரும்பியே ஏற்றுள்ளனர். ஆனால் எவ்வாறு இந்த இரண்டு பதவிகளின் பொறுப்பான கடமைகளை அவர் நிறைவேற்றுவார் என்று அவரை தமிழ் அரசியல்வாதிகளில் ஒருவராக ஏற்றுக் கொண்ட தமிழ் மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

எமது தமிழ் பேசும் அரசியலி கைதிகளைப்பற்றி ஒருவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. ஆண்டுகள் பல கடந்து தொடர்ச்சியாகப் போராடிவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கூக்குரல் எவருக்குமே கேட்பதாகத் தெரியவில்லை. தமிழ்பேசும் அரசியல் தலைவர்களோ அன்றி ஆட்சியில் உள்ள பெரும்பான்மை சிங்கள அரசியல்வாதிகள் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் அனைவரும் திறந்த மனதுடன் செயலாற்றுவதற்கு முன்வருகின்றார்கள் இல்லை. அவர்களிடம் திறந்த மனது இல்லை. இன்னொரு வகையில் அவர்கள் அனைவரிடமும் "கஞ்சல் தனம்" அதிகமாகவே உள்ளதையே நாம் நீண்ட காலமாகப் பார்க்கின்றோம். உண்மையாக கொலைகளைச் செய்த குற்றவாளிகளுக்கு இலங்கையின் ஜனாதிபதி மன்னிப்பு வழங்குகின்றார். ஆனால் குற்றங்கள் எதுவும் செய்யாமல் சிறைகளில் பல ஆ ண்டுகளைக் கழித்து வரும் தமிழ் பேசும் அரசியல் கைதிகளை விடுவிக்க தமிழ் அரசியல்வாதிகளுக்கே அக்கறை இல்லாமல் "கஞ்சல்தனம்" புரிகின்றார்கள்.

இலங்கையில் சமூக மட்டத்திலும் அரசியலிலும் ஆட்சியிலும் இவ்வாறான நிலையே காரணமாக விளங்குகின்றது. இன்னொரு பக்கத்தில் கொரோனா என்னும் கடிதான நோய் இலங்கை எங்கும் அஞ்சல் ஓட்டத்தில் ஈடுபட்டுள்ளது. ஆனால் மக்களை கைது செய்து சிறையில் அடைக்கின்றது இலங்கையின் இராணுவ அரச இயந்திரம். இது மிகவும் ஒரு அநியாயமான செயல்.

இது இவ்வாறிருக்க, இன்னொரு பக்கத்தில், உண்மையில் இப்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று சாதாரணமானது அல்ல. நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஓரிரு தினங்களுக்குள்ளேயே ஆயிரக்கணக்கான கொரோனா தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றுக்குள்ளான ஒருவரிடமிருந்து வைரஸ் தொற்றைப் பெற்றுக் கொண்ட மற்றையவர்கள் சமூகத்தில் எங்கெங்கு உள்ளனரென்று தேடிக் கண்டுபிடிப்பதென்பது இலகுவான காரியமல்ல.

இவ்வாறு கொரோனா தொற்று பரவுதலின் "வழித்தடம்" அறிந்து தொற்றாளர்களைக் கண்டுபிடித்து தனிமைப்படுத்தி, சிகிச்சை வழங்கும் கடினமான பணி தற்போது நடைபெற்று வருகின்றது. இப்பணியில் ஈடுபடுகின்ற அனைவருமே உண்மையில் அர்ப்பணிப்பு மிகுந்தவர்களாவர். கொரோனா நோய்த் தொற்று ஆபத்தை தாங்களும் எதிர்கொண்டபடியே அவர்கள் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பணியாளர்கள் மதிக்கப்பட வேண்டியவர்களாவர். கொரோனா தொற்றைத் தவிர்ப்பதற்காக அரசாங்கம் கூறுகின்ற அறிவுரைகளை உரியபடி பின்பற்றி நடந்து கொள்வதே மேற்படி பணியாளர்களுக்கு மக்கள் அளிக்கின்ற கௌரவமாக அமையும். அவர்கள் தங்களது உயிரையே பணயம் வைத்து கொரோனா ஒழிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்ற போது, பொதுமக்கள் அலட்சியப் போக்குடன் நடந்து கொள்வார்களானால் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதென்பது இயலாத காரியமாகவே போய் விடலாம்.

பொதுச் சந்தைகள், விற்பனை நிலையங்கள், ஆலயங்கள் போன்ற பொது இடங்களில் அன்றாடம் நாம் காணுகின்ற காட்சிகள் உண்மையிலேயே ஒருவித அச்சத்தைத் தருவதாக உள்ளன. சமூக இடைவெளியென்பதை முற்றாகவே மறந்த நிலையில் மக்கள் நெருக்கமாக முண்டியடித்தபடி நிற்பதைக் காண முடிகின்றது. கொரோனா முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல்களையெல்லாம் முற்றாக மறந்தவர்களாகவே பெருமளவான மக்கள் நடந்து கொள்வதைக் காண முடிகின்றது.

கொரோனா வைரஸ் ஒருவரில் இருந்து மற்றவருக்கு எவ்வாறு தொற்றிக் கொள்கின்றதென்பது குறித்து இனிமேலும் புதிதாக மக்களுக்கு விளக்கம் கூற வேண்டிய அவசியம் கிடையாது. தொற்றாளர் சுவாசிக்கும் போது அல்லது இருமல், தும்முதலின் போது காற்றின் ஊடாகவும், நேரடித் தொடுகையின் மூலமாகவும் ஒருவரில் இருந்து மற்றையோருக்கு மிக இலகுவாகவே தொற்றிக் கொள்ளக் கூடிய விசேட இயல்பை கொரோனா வைரஸ் கொண்டிருக்கின்றது. அத்துடன் எமது வெளிச்சூழலில் நீண்ட நேரம் உயிர் வாழும் தன்மையும் கொவிட் 19 வைரஸுக்கு உள்ளது. எனவேதான் இந்த வைரஸ் உலகெங்கும் குறுகிய காலத்துக்குள் பல மில்லியன் கணக்கிலான மக்களுக்கு இலகுவாக தொற்றிக் கொண்டுள்ளதுடன் மாத்திரமன்றி, ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்களின் உயிரை காவு கொண்டும் விட்டது.

முகக்கவசம் அணிவதும், சமூக இடைவெளியையும் சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் பேணுவதும் கொரோனா வைரஸ் பரவுதலை பெருமளவில் கட்டுப்படுத்துமென்று உலக சுகாதார நிறுவனமே பல தடவை கூறியுள்ளது. சர்வதேச மருத்துவ அறிவியலாளர்களும் இவற்றையே பரிந்துரைக்கின்றனர். எனினும், இந்த அறிவுறுத்தல்களை குறித்த ஒரு பகுதியினர் மாத்திரம் கடைப்பிடிப்பதனாலும், ஏனையோர் அலட்சியப்படுத்துவதாலும் பயன் ஏற்பட்டு விடப் போவதில்லை. இங்கு ஒரு உண்மையை நாம் அனைவரும் புரிந்து கொள்வது அவசியம்.கொரோனா வைரஸை இலகுவில் தங்களுக்குள் உள்வாங்கிக் கொள்பவர்களும், இந்த வைரஸை மிக இலகுவாக ஏனையோருக்கு பரப்பி விடுபவர்களும் வேறு யாருமல்ல!

பொதுவாகவே அரசியல் நிலைப்பாடுகளை கவனிப்பதிலோ அன்றி கொரோனா போன்ற சமூகத்திற்கு முக்கியமான அவசரகால செயற்பாடுகளின் போதோ, எமக்கு கிடைக்கின்ற ஆலோசனைகளை அலட்சியம் செய்தோமானால் அது இலங்கை என்னும் தேசத்திற்கும் இங்கு வாழும் மக்களுக்கும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்றே நாம் இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது.

---

## வீணாவின் கிறுக்கல்

**யாரோ எங்கோ கொன்று தின்றதற்கு**
**நீ உலகையே ஏப்பம் விட்டு**
**திரிவதும் ஏனோ?**
**ஓடி ஒளிய இடமும் இல்லை,**
**எல்லையை கடக்க அனுமதியுமில்லை,**
**பறந்து செல்வதற்கோ சிறகும் இல்லை,**
**பணம் படைத்தவனுக்கும் பயணமில்லை,**
**தினக்கூலி செய்பவனுக்கு வேலையில்லை,**
**அதனால் அவன் வீட்டில்**
**உணவில்லை, நிம்மதியுமில்லை.**
**இறகை வெட்டி கூண்டில் அடைத்த**
**கிளி போல், அடங்கி போய்**
**நிற்கின்றோம் நிர்க்கதியாய்,**
**எங்களை விட்டு என்று செல்வாய் ?**
**நாங்கள் இயல்பு வாழ்விற்கு திரும்பிட!!!**

# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# SKN FINANCIAL

www.sknfinancial.com




**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனை வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

**உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..**

**குறைந்த வட்டி!..[2% முதல்]**

**நிறைந்த பெறுமதி!...**

www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# 9ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
12-02-1952

இறைவன் அடியில்
15-11-2011

# சிறிதரன் தியாகராஜா

ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தது அண்ணா!
கலங்கிய இதயத்தை எங்களுக்கு தந்து விட்டு
காணாமல் போனீர்க்ள கண் இமைக்கும் இடைவெளியில்
என்றும் எங்களுடன் வாழ்வீர்கள் வழிகாட்டியாக இருப்பீர்கள்
என்று நெஞ்சு நிமிர்ந்து நின்றோம்!
பொறுக்கவில்லை அந்த காலனுக்கு
எங்களை ஏமாற்றி உங்களைக் கொண்டு சென்றான்
நம்பமுடியவில்லை, நம்பித்தானே ஆகவேண்டும்
நடுக்கடலில் நாதியற்ற படகுபோல
நாங்கள் தத்தளித்தோம். தத்தளிக்கின்றோம்
இன்றுவரை எங்கள் இதயம் துன்பத்தில்!
எங்கிருந்தாலும் உங்கள் ஆத்ம சாந்திதான்
எங்கள் நிம்மதி!
உங்கள் பிரிவால் வாடும் உங்கள்
அன்புத் தங்கையின் அழுகுரல் இது!!!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்
அம்மா, அன்பு மனைவி, அருமைச் செல்வங்கள்.
சகோதர, சகோதரிகள் மற்றும் உங்களை நேசிக்கும்
அத்தனை உறவுகளும்...

தகவல்: குடும்பத்தினர்

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).




5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**


# மரண அறிவித்தல்



## திரு முத்து சுந்தரமூர்த்தி (JP)

பைனல் ரேணிங் வேக்ஸ், M.S.M இன்டஸ்ட்ரியல், M.S.R காட்வெயர்ஸ், வெஸ்லி சினிமா மானிப்பாய், ஈஸ்வரி யுவலர்ஸ் உரிமையாளர், மானிப்பாய், கிராம சபை உறுப்பினர், முன்னாள் உபதலைவர், முன்னாள் தலைவர் - மானிப்பாய் பனம்பொருள் அபிவிருந்தி சபை, அரசாங்கத்தால் தொழில் அதிபர் சான்றிதழ் பெற்றவர்.

**பிறப்பு: 04-10-1933** **இறப்பு: 02-11-2020**

யாழ். சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய், லண்டன், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து சுந்தரமூர்த்தி அவர்கள் 02-11-2020 திங்கட்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற முத்து, தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தவசி, காமாட்சி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், புவனேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும், ஜெயந்திரன், தர்மகுலேந்திரன், ஜெயந்தினி, சுகந்தினி, புவனேந்தினி, முரளிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராசேந்திரம் அவர்களின் அன்புச் சகோதரரும், தவராஜா, புஸ்பராகவன், விக்கிரமசேகரம், பிலோமீனா, அலிஸ், அனித்தா, துஷிந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், உஷாந்தன், யோசுவா-குளோடியா, ஜொய், தர்ஷிக்கா, சுனிக்கா, திலக்ஷன், கோபிக்கா, றொஷான், தனுஷிக்கா, டிக்ஷன்-நிகிதா, சோபிகன், சாருகா, ஆர்த்திகா, யதுர்ஷிக்கா, அனோஜி, ஆருஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு**
ஜெயந்திரன்–மகன்: +15148653466
தவராஜா ஜெயந்தினி–மருமகன்/மகள்: +15148875981
ராகவன், சுகந்தினி–மருமகன்/மகள்: +15145668683
தர்மகுலேந்திரன் – மகன்: +447727660914
பொன்ஸா விக்கிரமசேகரம்–மகள்/மருமகன்: +94775438494
முரளிதரன் – மகன்: +447490186116

## எம்மை விட்டுப்பிரிந்த தெய்வத்தின்

# 13ம் ஆண்டு நினைவஞ்சலி

**மண்ணில்:** 26-01-1929



**விண்ணில்:** 04-11- 2007

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், சுருவிலை வசிப்பிடமாகவும் கொண்டு கனடாவில் வசித்து வந்தவருமான

# அமரர் சத்தியசீலன் செல்லத்துரை

அவர்களின் 13ம் ஆண்டு நினைவாஞ்சலி.

(முன்னாள் முறைமுக அதிகாரசபை ஊழியர் கொழும்பு)

**திதி: 09-11-2020**

பதின்மூன்று ஆண்டு காலம் எப்படியோ ஓடியது
எதுவும் பேசாமல் எமைவிட்டுப் பிரிந்து
காலனோடு கைகோர்த்துச் சென்றீர்கள்
கலங்கிய இதயங்களை எமக்கு தந்துவிட்டு..

என்றும் நீங்கள் எம்மோடு வாழ்வீர்கள் என்று
எப்போதும் எண்ணியிருந்தோம் இறுதியில் ஏமாந்தோம்
நீங்கள் மறைந்ததனால் நாங்கள் கருகிய புற்களானோம்
கலங்கிய நீரோடையானோம். இயங்காத இயந்திரமானோம்
இலைகள் உதிர்ந்த மரங்கள் ஆனோம்
எமக்காய் வாழ்ந்தவரே உம் வாழ்வைத் தொலைத்தீரோ
எத்தனையோ ஆசைகளை இடையில் துறந்தவர் நீர்
அர்ப்பணிப்பு என்பதற்கு அடையாளம் நீங்கள் தான்
உங்கள் அன்பு எமக்குத் தேவை
அருகில் இருத்தலும் எமக்கும் ஆறுதலைத் தரும்
நம்பியிருந்தோம் அது நிறைவேறவில்லை
நற்றாற்றில் கவிழ்ந்த படகு போல் எங்கள்
இதயங்கள் துன்பத்தில் ஆழ்ந்து ஆழ்ந்து வெடிக்கின்றன.
உங்கள் வாருசுகளையும் கைகோர்த்து அழைத்துவிட்டீர்கள்
நாமிங்கு துடிக்கின்றோம் அங்கிருந்து இருக்கும் செல்வங்களை
வாழ வைப்பீர்கள் என்ற நம்பிக்கையில் வாழுகின்றோம்



**உங்கள் பிரிவால் துயருறும்**

**அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்கைள், பெறாமக்கள் மற்றும் உற்றார், உறவினர்**

# மரங்களுடனான பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும்

**- மரநடுகை மாதச் செய்தியில் பொ. ஐங்கரநேசன்**



மரங்கள் மனிதர்கள் உயிர் வாழுவதற்குத் தேவையான பிராண வாயுவைத் தரும் கரிப்பிடிக்கும் காற்றைச் சுத்திகரிக்கும் வெம்மை தணிவிக்க மழையைத் தரும் என்று கற்றுத்தருகின்ற அறிவியலும், வெட்டு மரங்களாகக் கைநிறையக் காசு தரும் என்று போதிக்கும் பொருளாியலும் மரங்களுக்கும் எங்களுக்கும் இடையே காலங்காலமாக நிலவி வந்த பண்பாட்டு உறவைத் துண்டித்துவிட்டன. மரங்களுடனான பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும். இழந்துவிட்ட இந்தப் பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கும் ஓர் தமிழ்த்தேசியச் செயற்பாடே கார்த்திகை மாத மரநடுகை ஆகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு மாகாண சபையால் 2014ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகக் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடகச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த ஊடகச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழர்களுக்கும் மரங்களுக்கும் இடையேயிருந்த பண்பாட்டுப் பந்தம் மிகவும் உணர்வு பூர்வமானது. மூதாதித் தமிழர்கள் மரங்களை இறையாக வழிபட்டார்கள். உருவ வழிபாடு ஆரம்பித்ததும் மரங்களை இறைக்கு நிழற் குடைகளாக்கி வலம் வந்தார்கள். மரங்களைக் குலக் குறிகளாக்கிக் கொண்டாடினார்கள். போர்க்களத்தில் பூமாலைகள் அணிந்தே எதிரிகளுடன் பொருதினார்கள். மங்கையர்கள் மரங்களைக் காதலர்களாக உருவகித்து நாணி நின்றார்கள். மறைந்த உறவினர்களின் நினைவுகளை மரங்களில் ஏற்றிக் கைதொழுதார்கள்.



“ஒரு மரத்தை அழித்துத்தான் என் உயிரைக் காப்பாற்ற வேண்டுமெனில் மரம் வாழட்டும் நான் சாகிறேன்” என்ற சங்கப் புலவனின் வாரிசுகளான நாமோ, இன்று எவ்விதக் கருணையும் இன்றி மரக் கொலைகளைச் செய்து வருகிறோம். அறிவியல் வளர்ச்சி மரங்களுடன் நாம் கொண்டிருந்த பண்பாட்டு உறவைப் புறமொதுக்கியுள்ளது. அறிவியல் எப்போதும் அபிவிருத்தியின் பக்கம் சார்ந்ததாகவே இயங்கும். அபிவிருத்தி தன் பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும், அது மனிதர்களாக இருந்தாலும் அழிப்பதற்குத் தயங்காது. இதனாலேயே வீதி அகலிப்பின்போதும், தொலைத்தொடர்பு வழித்தடங்கள், மின்வழித்தடங்களை அமைக்கும் போதும் மாற்றுவழி பற்றிச் சிந்திக்காது மரங்களைக் குற்றுயிரும் குலையுயிருமாகச் சாய்த்து வருகிறோம்.



உலகம் பூமி சூடேறிக் கொண்டிருப்பதால் படுபாதகமான காலநிலை மாற்றங்களை இன்று எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது. இன்னொரு புறம் காட்டு வைரசுக்கள் விகாரிகளாகித் தாக்குவதால் கொரோனா, சார்ஸ் போன்ற கொடிய நோய்களின் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளது. இப்பேரிடர்கள் யாவும் காடுகளை அழித்ததால், இயற்கையைச் சிதைத்ததால் ஏற்பட்டதன் விளைவுகளே என அறிவியல் மெய்ப்பித்ததன் பின்னர், இப்போது காடு வளர்ப்பும் மரங்களின் நடுகையும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆனால், இம் முயற்சிகள் தனியே அறிவியல் அணுகுமுறையுடன் மாத்திரம் அமையாது பண்பாட்டுப் பிரக்ஞையுடனும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மரநடுகையை மேற்கொள்வதற்குக் கார் என்ற மழையின் பெயரைத் தன்பெயராகக் கொண்ட கார்த்திகை மிகப் பொருத்தமான மாதம். அறிவியல்ரீதியான காரணத்துக்கும் அப்பால், ஈழத்தமிழர் வாழ்வியலில் கார்த்திகை பண்பாட்டு முக்கியத்துவம் பெற்ற ஓர் மாதமுமாகும். வீடுகளில் விளக்கேற்றி வழிபடும் தீபத்திருநாளையும், இறந்த மறவர்களின் நினைவுகளைப் நெஞ்சிருத்தி நெக்குருகும் நாட்களையும் இம்மாதம் தன்னகத்தே கொண்டுள்ளது. தேசியம் என்பது ஒரு இனத்தின் வாழ்புலம், மொழி, வரலாறு, பண்பாடு, நம்பிக்கைகள் ஆகியன பின்னிப்பிணைந்த ஒரு வாழ்க்கை முறையாகும். அந்த வகையில் கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச் செய்யும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0% வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS CRP PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புகள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# அனைத்து வித ஆன்லைன் சூதாட்டங்களும் தடை செய்யப்படும்: கோவையில் முதல்வர் அறிவிப்பு



அனைத்து விதமான ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளும் தடை செய்யப்படும் என்று கோவையில் முதல்வர் கே.பழனிசாமி அறிவித்தார்.

நீலகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்தும், அரசு அறிவித்த திட்டங்களின் தற்போதைய நிலை குறித்தும் ஆய்வு செய்ய தமிழக முதல்வர் கே.பழனிசாமி இன்று (நவ.5ம் தேதி) மாலை சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவைக்கு வந்தார். கோவை வந்த அவரை உள்ளாட்சித்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன், சட்டப்பேரவை உறுப்பினர்கள், ஆட்சியர் கு.ராசாமணி உள்ளிட்டோர் வரவேற்றனர். அதைத் தொடர்ந்து முதல்வர் கே.பழனிசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கோவை மாவட்டத்தில் அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறது. பல ஆண்டுகளாக மக்கள் வைத்த கோரிக்கைகளை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. ரூ.214 கோடி மதிப்பில் 2 கிலோ மீட்டர் தூரத்துக்கு காந்திபுரத்தில் 2 அடுக்கு மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. ரூ.120 கோடி மதிப்பில் 2 கிலோ மீட்டர் தூரத்துக்கு உக்கடத்திலும், ரூ.253 கோடி மதிப்பில் 3 கிலோ மீட்டர் தூரத்துக்கு தேசிய நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சுங்கத்திலும், ரூ.66 கோடி மதிப்பில் ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்கு கவுண்டம்பாளையத்திலும், ரூ.42 கோடி மதிப்பில் 670 மீட்டர் தூரத்துக்கு கவுண்டர் மில் சந்திப்புப் பகுதியிலும், ரூ.16 கோடி மதிப்பில் கணபதி கண்ணப்பன் நகர் ரயில்வே மேம்பாலம், ரூ.55 கோடி மதிப்பில் 580 மீட்டர் தூரத்துக்கு ஆவாரம்பாளையத்தில் ரயில்வே மேம்பாலம் ஆகியவை கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவிநாசி சாலையில் உப்பிலிபாளையம் முதல் சின்னியம்பாளையம் வரை 9 கிலோ மீட்டர் தூரத்துக்கு ரூ.1,100 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும்.சிட்ரா குரும்பபாளையம் சாலை 9 கிலோ மீட்டர் தூரத்துக்கு விரிவுபடுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆன்லைன் ரம்மிக்குத் தடைஆன்லைன் ரம்மியைத் தடை செய்யப் பல தரப்பில் இருந்தும் அரசுக்கு கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த இணையவழி ரம்மி சூதாட்ட விளையாட்டினால் பலர் தற்கொலை செய்யும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆன்லைன் ரம்மி விளையாட்டைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும். இதுதொடர்பான வழக்கும் மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் நடந்து வருகிறது. அங்கே அரசு சார்பில் இந்த விளையாட்டைத் தடை செய்யப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்ற பதிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல தரப்பட்ட மக்களின் கருத்துகளின் அடிப்படையில் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.இணையப் பயன்பாடு அசுர வேகத்தில் வளர்ந்து வருகிறது. இளைஞர்கள் நேரத்தையும், பணத்தையும் வீணடிக்கும் வகையில் ஆன்லைன் ரம்மி போன்ற இணையவழி விளையாட்டுகள் அவர்களது வாழ்க்கையைச் சீரழித்து வருகின்றன.

பொதுமக்களின் நன்மை கருதி இவ்வாறு பணம் வைத்து நடத்தப்படும் அனைத்து வகையான ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளைத் தடை செய்வதோடு, சூதாட்ட விளையாட்டுகளை நடத்துபவர்கள், அதில் ஈடுபடுபவர்களைக் குற்றவாளிகளாகக் கருதி கைது செய்யும் வகையில் உரிய சட்ட திருத்தத்தை அரசு மேற்கொள்ளும்.

திரைப்பட நடிகர் விஜய் கட்சி தொடங்குவது அவரது உரிமை. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட வழக்கில் கைதான 7 பேரின் விடுதலை ஆளுநரின் அதிகாரத்துக்கு உட்பட்டது. அவர்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். 7 பேரின் விடுதலை குறித்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து பேசி வருகிறார். 2000ம் ஆண்டில் திமுக ஆட்சியின் போது, 7 பேர் விடுதலை தொடர்பான கோரிக்கை வந்தபோது, அவர்களது அமைச்சரவையில் நளினியைத் தவிர்த்து மற்றவர்களின் கோரிக்கையை நிராகரித்தனர். இவர்களுக்கு தண்டனை கொடுக்கலாம் என அமைச்சரவையில் திமுகவினர் முடிவு எடுத்தனர்.

இந்த நிலையில் அதிமுக ஆட்சியின் போது, 7 பேரையும் விடுதலை செய்ய அதிமுக அரசு நடவடிக்கை எடுத்தது. தீர்மானம் நிறைவேற்றியது. 7 பேரின் விடுதலையில் அதிமுக அரசு அக்கறையுடன் செயல்படுகிறது.வேல் யாத்திரைதமிழகத்தில் வேல் யாத்திரைக்குச் சட்ட ரீதியில் அனுமதி அளிக்க முடியாது. ஊரடங்கு காலத்தில் ஊர்வலம் நடத்தக்கூடாது என மத்திய, மாநில அரசுகள் சட்டம் இயற்றியுள்ளன. அந்தச் சட்டத்தின்படி வேல் யாத்திரைக்கு அனுமதி அளிக்க முடியாது.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை விமர்சித்து போஸ்டர் ஒட்டப்பட்டது தொடர்பாக நாங்கள் பதில் கூற முடியாது. யாரோ ஒட்டும் போஸ்டருக்கு நாங்கள் என்ன செய்ய முடியும்.பள்ளி, கல்லூரி நிர்வாகங்கள், பெற்றோர்களின் கோரிக்கையை ஏற்று தமிழகத்தில் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. தற்போது பள்ளி, கல்லூரிகள் திறந்தால் பாதிப்பு ஏற்படும் என பத்திரிகைகள் வாயிலாகப் பலர் கருத்து தெரிவித்துள்ளனர். எனவே, அனைத்துப் பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தை நடத்தி, அதில் எடுக்கும் முடிவு செயல்படுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# பேரறிவாளனின் பரோலை நீட்டிக்கக் கோரி அற்புதம்மாள் மனு: உயர் நீதிமன்றத்தில் நாளை விசாரணை

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதியாக சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள பேரறிவாளனுக்கு 30 நாட்கள் பரோல் வழங்கப்பட்ட நிலையில், அது முடிவடைய உள்ளதால் மேலும் 30 நாட்களுக்குப் பரோலை நீட்டித்துத் தரக் கோரி அவரது தாயார் அற்புதம்மாள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதியாக சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள பேரறிவாளன், உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதால், அவருக்கு 90 நாட்கள் விடுப்பு (பரோல்) வழங்கக் கோரி அவரது தாயார் அற்புதம்மாள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கின் விசாரணை நீதிபதிகள் என்.கிருபாகரன், வி.எம்.வேலுமணி அமர்வில் நடைபெற்று வந்தது. அப்போது, விடுப்பு (பரோல்)



மனுவை ஏற்கெனவே நிராகரித்துவிட்டதாக தமிழக அரசும், சிறைத்துறையும் தெரிவித்தன.அற்புதம்மாள் தரப்பில், "விடுதலை செய்ய முடிவெடுத்த அரசு, பரோல் வழங்க எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும், விடுதலை செய்ய முடிவெடுத்ததும், விடுப்பு மறுப்பதும் ஒரே கட்சியின் தலைமையிலான அரசுதான்" என வாதிடப்பட்டது.இதையடுத்து, அமைச்சரவை மாறியிருந்தாலும், முடிவெடுத்த அரசுகள் ஒன்றுதான் என்பதைச் சுட்டிக்காட்டிய நீதிபதிகள், பேரறிவாளனுக்கு 30 நாட்கள் பரோல் வழங்கி உத்தரவிட்டிருந்தனர்.

இதையடுத்து அவருக்குப் பரோல் வழங்கப்பட்டது.இந்நிலையில், பேரறிவாளனின் விடுப்பு (பரோல்) காலம் வரும் நவ.9 ஆம் தேதியோடு முடிவடைவதால், மேலும் 30 நாட்கள் பரோல் நீட்டிப்புக் கேட்டு அற்புதம்மாள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.அதில், பேரறிவாளனுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சை தொடர வேண்டியுள்ளதால்,

கூடுதல் நாட்கள் விடுப்பு (பரோல்) வழங்க வேண்டும் எனக் கோரிக்கை வைத்துள்ளார். இந்த மனு நாளை விசாரணைக்கு வரவுள்ளது.

# ரிபப்ளிக் டிவி எடிட்டர் அர்னாப் கோஸ்வாமி கைது: மும்பை போலீஸ் அதிரடி



ரிபப்ளிக் டிவி தலைமை ஆசிரியர் அர்னாப் கோஸ்வாமியை மும்பை போலீஸார் இன்று கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.அர்னாப் கோஸ்வாமி விட்டுக்கே சென்று வலுக்கட்டாயமாக அவரை விசாரணைக்கு அழைத்துச் சென்றதாக புகார் எழுந்துள்ளது.

கட்டிட உட்புற வடிவமைப்பாளர் அன்வய் நாயக்கை 2018ம் ஆண்டு அர்னாப் தற்கொலைக்குத் தூண்டியதாக ஏற்கெனவே அவர் மீது புகார் இருந்தது. அவரது இல்லத்திலிருந்து அலிபாக் போலீஸார் அர்னாபை விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர் போலீஸ் வேனில் தன்னைப் பிடித்துத் தள்ளியதாக புகார் எழுந்துள்ளது, மேலும் தன் வீட்டில் தன்னை கைது செய்யும் முன் தன்னைபோலீஸார் தாக்கியதாகவும் அர்னாப் கேள்வி எழுப்பினார்.

2018ம் ஆண்டு கட்டிட உள்வடிவமைப்பாளரும் அவரது தாயாரும் தற்கொலை செய்துக் கொண்டனர், இது தொடர்பாக ஏற்கெனவே புகார் உள்ளது.இந்நிலையில் கடந்த மே மாதம் மகாராஷ்ட்ரா உள்துறை அமைச்சர் அனில் தேஷ்முக், தற்கொலை செய்து கொண்ட அன்வய் நாயக்கின் மகள் அதன்யா நாயக் எழுப்பிய புதிய புகாரின் அடிப்படையில் மறு விசாரணைக்கு உத்தரவிட்டார்.

கோஸ்வாமியின் சேனலிலிருந்து நிலுவையில் உள்ள தொகையை செலுத்தாதது குறித்து அலிபாக் போலீஸ் விசாரணை செய்யவில்லை என்று அதன்யா நாயக் புகார் தெரிவித்ததாக தேஷ்முக் தெரிவித்தார். மேலும் அதனால் தான் தன் தந்தையும் பாட்டியும் தற்கொலை செய்து கொண்டதாக மகள் அதன்யா நாயக் புகார் எழுப்பியதாக தேஷ்முக் தெரிவித்தார். சுஷாந்த் தற்கொலை வழக்கில் ரிபப்ளிக் டிவி சிறப்பு முனைப்புக் காட்டி மகாராஷ்டிரா ஆளும் சிவசேனாவுக்கு எதிராக பல செய்திகளை வெளியிட்டு பரபரப்பு காட்டியது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் டிஆர்பி ரேட்டிங்குக்காக முறைகேடாக நடந்த விவகாரம் வேறு அர்னாப் மீது உள்ளது குறிப்பிடத்தக்கது. ஊடக சுதந்திரத்துக்கு எதிரானதாக மத்திய அமைச்சர் இந்தக் கைதைக் கண்டித்துள்ளார்.

*- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#20



"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு" : திருக்குறள்

அறிவு நிறைந்த நயமான ஒரு நூலைப் படிக்கப் படிக்க அதன் சிறப்பு அதிகமாக புலப்படுவது போல நல்ல குணமுள்ளவர்களுடைய நட்பு பழகப் பழக இன்பம் அதிகரிக்கும். சிவாஜி ஐயா உயிருடன் வாழ்ந்த காலத்தில் அவருடன் உரையாடிய வேளையில் மனதில் பதிந்துள்ள சில நினைவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு எப்போதும் கற்றோர்களிடத்து விருப்பு அதிகம். முடிந்தளவு அவர்களிடத்தில் கௌரவமான நட்புணர்வை வளர்த்துக் கொள்வதில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்வேன். சிறுவயதில் அதாவது மாணவப் பருவத்தில் எனது வயதையொட்டிய தோழர்களுடன் இணைந்து விளையாடுவதிலும் வெட்டிப்பேச்சு பேசுவதிலும் எனக்கு அதிக நாட்டம் இருந்ததில்லை.பதிலாக நான் பேசிப்பழகுபவர்கள் என்னை விட அதிகம் வயது மிகுந்தவர்களாக இருப்பார்கள். பல விடயங்களை அறிந்தவர்களாகவும் புரிந்தவர்களாகவும் விளங்குவார்கள். பட்டம் பெறுவதற்காக படித்தவர்களை விட பல்வேறு சமாச்சாரங்களை நன்கு சொல்லித் தரக்கூடிய முதியவர்களுடன் எனக்கு பரிச்சயம் அதிகம். இங்கும் கூட (கனடாவில்) பெயர்களுக்குப் பின்னால் பட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ள பலருடன் புதிதாகப் பழகும் வாய்ப்பு கிட்டியது. சில சமயம் அவர்களுடைய மேதாவிலாசம் எனக்கு நகைப்பை தான் வரவழைக்கிறது. எல்லோரும் எல்லாமும் அறிந்தவர்கள் போல காட்டிக்கொள்ள முண்டி அடிக்கிறார்கள். விபரமாக நான் சொல்வதற்கில்லை. ஆனால் சில பல வருடங்களுக்கு முன் அந்தப் பட்டம் பெறாத் "படிக்காத மேதை", என்ற பெயர் எடுத்த பெரியவருடன் இரண்டு நாட்கள் பேசி மகிழ்வதற்கு நல்ல சந்தர்ப்பம் கிட்டியது.

யார் அந்தப் படிக்காத மேதை! அவர் தான் நமது மதிப்பிற்குரிய நடிகர் திலகம்! அவருடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில் என் உள்ளத்தில் ஒரு புதிய வாக்கியம் உருவாகியது. அதாவது "கற்றது கையளவு கல்லாதது சிவாஜி அளவு" என்பதாகும். தமிழகத்தில் பல பெரியார்களும், தலைவர்களும் திண்ணைப் பள்ளியில் இரண்டொரு வகுப்புகளை முடித்துக் கொண்டே பொது வாழ்வில் தங்களை இணைத்துக் கொண்டவர்களாவார்கள். பெருந்தலைவர் காமராஜர் தனது சிறு வயதில் அதிக நாட்களைப் பள்ளியில் செலவிட முடியாமல் வளர்ந்தவராவார். இந்திய அரசியலில் நேருஜி போன்ற மாபெரும் மேதைகள் மதிக்கத் தக்க அளவில் கிங் மேக்கராக உயர்ந்தவர். "ஆகட்டும் பார்க்கலாம்" என்ற இரு சொல் வாக்கியத்தை பதிலாக கூறிக்கொண்டு தமிழக முதலமைச்சராக ஒன்பது ஆண்டுகள் பணிபுரிந்து புகழ் பெற்ற பல்வேறு சாதனைகளைச் செய்து வெற்றி கண்டவர். அப்படிப்பட்ட பெருந்தலைவரின் அன்புக்குக் கட்டுப்பட்ட மாணவனாக, தொண்டனாக, கலைஞனாக, படிக்காத மேதையாக பரிணமித்த சிவாஜி அவர்களின் விசாலமான அறிவைப் பார்த்து பெருமிதம் கொண்டு பூரிப்படைந்தவன் நான்! சிவாஜி ஐயா வாழ்ந்த காலத்தில் எழுதியது போன்றே எழுதுகிறேன். இப்போதெல்லாம் அவருக்கு நிரம்பவும் நேரம் கிடைக்கிறது. அதிகம் வாசிக்கிறார். வாசிப்பு அவரை மேலும் பூரணமாக்குகிறது. இது இன்று நேற்றுப் பழகியதல்ல! நாடகக் கம்பெனிகளில் குருகுல வாசத்தை மேற்கொண்ட போது அவருக்குக் கிடைத்த பெரும்பேறு. சிவாஜி அவர்கள் பல்வேறு கம்பெனிகளின் நாடகங்களில் நடித்திருக்கிறார். அவர் அப்படி நடித்த குழுக்களில் ஒன்று இராம சுப்பையா என்பவரது குழு.



இவர் நாடக நிர்வாகியாகவிருந்து தனி கம்பெனி துவங்கியவர். தொழிலில் மிகவும் கண்டிப்பானவர். ஒத்திகையின்போது சரியாக பாடத்தை சொல்லாவிடில் பிரம்படி தான் பரிசு. முதலில் பாடம் சொல்லித் தருவார்கள், பின் இரண்டு நாள் லீவு விடுவார்கள். இந்த இரு நாள் இடைவெளியில் சொல்லித்தந்த பாடத்தை வசனத்தை பாடலை நன்றாக மனப்பாடம் செய்தல் வேண்டும். மூன்றாம் நாள் பாடம் கேட்பார்கள். ஒரு வார்த்தை தடுமாறாமல், பிசகாமல், தங்குதடையின்றி ஒப்புவிக்க வேண்டும். வார்த்தையை தவறவிட்டால் போதும் அந்த இடத்திலேயே படுக்க வைத்து பிரம்பால் சாத்துவார்கள். இதுபோல் பிரம்படியை சிவாஜி ஐயா சிறுவயதில் வாங்கியதால் தான் இன்று ஒப்பாரும் மிக்காரும் இன்றி நடிப்புலகில் யாவருக்கும் ஆசானாக விளங்குகிறார்!

நாடகக் கம்பெனியே அவரது பள்ளிக்கூடம், பல்கலா சாலை. அன்று தொடங்கிய வாசிப்பு பழக்கம் இன்றும் தொடர்கிறது. புத்தகங்களை மாத்திரமல்ல தான் சந்திக்கும் மனிதர்களையும் படிக்கிறார். மனித மனங்களை ஆழமாக ஊடுருவுகிறார். அவ்வப்போது தினசரி வாழ்க்கையில் சந்திப்போரை, வணங்கியவர்களை அப்பர் சுவாமியாகவும், டாக்டராகவும், வக்கீலாகவும், இன்ஸ்பெக்டர் சவுத்ரிகளாகவும் (சுமார் 20 படங்களில் போலீஸ் அதிகாரி வேடம்) எம்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். அதனால்தான் அவருக்கு "கௌரவ டாக்டர்" பட்டம் வழங்கி, அவரது புலமைக்கு, திறமைக்கு மதிப்பு அளித்திருக்கிறார்கள். நான் அவருடைய விருந்தாளியாக போயிருந்த வேளையில் கூட பிரஞ்சுக்காரர் இந்தியாவில் நுழைந்து ஆட்சி புரிந்த வரலாறு பற்றிய புதினத்தை வாசித்துப் பிரமிப்படைந்தது பற்றி குறிப்பிட்டார்!

"சின்ன வயதிலிருந்தே எனக்கு வாசிப்பதில் அலாதியான பிரியம். அது என்னுடைய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாகவிருந்தது. அலெக்சாண்டர், யூலியஸ் சீசர், சோக்கிரற்றீஸ், அசோகச்சக்கரவர்த்தி, திப்புசுல்தான் என பலரதும் வரலாறுகளைப் பயமின்றிச் செய்யமுடிந்தது. அதுபோல நமது ராமாயணம், மகாபாரதம், சேர, சோழ, பாண்டியர்களுடைய கதைகளில் வரக்கூடிய அனைத்து பாத்திரங்களையும் நன்கு படித்திருந்து வைத்திருப்பதனால் தான் அந்தஅந்தப் பாத்திரங்களுடைய குணாதிசயத்திற்கேற்றாப்போல் நம்மால் நல்ல peforming develop ஐ செய்து காட்ட முடிகிறது.

வாசிப்புப் பழக்கம் தன்னுடைய நடிப்புத் தொழிலில் இன்றுவரை நிலைத்திருப்பதற்கு எவ்வளவு உதவியாகவும், உத்திரவாதமும் உள்ளது என்பதை தெளிவாகக் கூறினார். உலகின் பல பாகங்களுக்கும் அழைப்பின்பேரில் விருந்தினராகவும், கலைத்தூதுவராகவும் பயணம் செய்தவர் நடிகர் திலகம் அவர்களே ஆகும். அந்தந்த நாட்டின் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், கலைஞர்கள் என பல்வேறு தகுதியுடையவர்களுடனும் பழகிப் பேசும் வாய்ப்பை பெற்றிருந்தார். ஒரு சமயம் ஏதோவொரு அரபு நாட்டின் விருந்தினராக கலந்து கொண்டிருந்த வேளையில் தன் எதிரில் உட்கார்ந்திருந்த பிரமுகர் யார் என அறிய வந்தபோது அவர் ஒரு சர்வதேச கடத்தல்காரத் தலைவர் என அறிமுகமானார் எனச் சிரிப்புக்கிடையே கூறினார். இவ்விதம் மனித சமூகத்தில் பல்வேறு முகங்களையும் பார்த்தவர், படித்தவர், பழகிப் பார்த்தவர், தேவையானவற்றை தன் மனதில் போட்டு வைத்தவர். "படிக்காத மேதை" திரைப்படத்தில் நடித்ததினால் மட்டுமன்று இயல்பாகவே தனது விடாமுயற்சியினால் "படிக்காத மேதை"யானவர்!



நமது சிவாஜி ஐயா. அவரது "அன்னை இல்லம்" வீட்டு முகப்பில் ஒரு குழந்தை வாசிப்பது போல் ஒரு சிறிய பொம்மை வைக்கப்பட்டிருக்கும். தனக்குக் கிடைக்காத பள்ளி வாழ்வு எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் எல்லோரும் கல்வியறிவு பெற வேண்டும் என விரும்பியவர். பலதரப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு வாரிக் கொடுத்து விளம்பரம் தேடாத வள்ளல் நமது கர்ணன் சிவாஜி ஐயா அவர்களாகும். நம்மில் பலருக்கும் தெரியாத விடயம் ஒன்றையும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

அட! அப்படியா! நமக்கெல்லாம் இந்த சமாச்சாரம் எப்படி தெரியாமல் போயிற்று! சிவாஜி ஐயா உயிருடன் வாழ்ந்த காலத்தில் அவருக்கு நாம் நமது நன்றியறிதலை பெரிய அளவில் அறியாமல் விட்டுவிட்டோமேயென நிச்சயம் நீங்கள் சஞ்சலப்படுவீர்கள் என்பது எனக்குத் தெரிகிறது.

அதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை இக்காலத்தில் அறியத் தருவது பொருத்தமானது தான், என எனக்கென்னவோ யாழ்ப்பாண தமிழர்கள் மனதில் நன்றி உணர்வு என்பது இல்லாமல் போய் விட்டதோ என நினைக்கத் தோன்றுகிறது. 2017இல் மக்கள் திலகம், எம்ஜிஆர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாள் தமிழகத்திலும், தமிழகத்திற்கு வெளியாலும் ஓராண்டு காலம் கொண்டாடப்பட்ட போது, நம்மவர்கள் சார்பில் அதாவது இலங்கை தமிழர்கள் சார்பாக மொன்றியலில் எடுக்கப்பட்ட விழாவில் கனடிய தமிழ் சமூகம் குறிப்பாக எம்ஜிஆர் அவர்களால் காப்பாற்றப்பட்ட ஒரு விடுதலை இயக்கம் தங்களது நன்றியுணர்வை காட்டாது மௌனம் காத்தனர். ஒட்டுமொத்தமாக ஈழத்தமிழர்கள் நன்றி மறந்தவர்கள் இல்லை என்பதை நாளைய வரலாறு சொல்ல வேண்டும் என்பதற்காக மொன்றியால் நகரில் மக்கள் திலகம் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

அதே போன்றது தான் நடிகர் திலகம் தமிழீழத்தில் வைத்தியசாலை ஒன்றில் விரிவாக்கத்திற்கு செய்த பேருதவியை யாழ். தமிழர்கள் சமுதாயம் நினைவு கொள்ளாது வாழ்வது? யாழ்ப்பாணக் குடாநாட்டில் பிரசித்திபெற்ற சுழிபுரம் மூளாய் ஆஸ்பத்திரிக் கட்டிட நிதிக்காக 1953இல் காரை நகரைச் சேர்ந்த (யாழ்) பிரபல வர்த்தக பிரமுகர் (P.M சங்கரப்பிள்ளை) ப.மு சங்கரப்பிள்ளை அவர்களின் அழைப்பின் பேரில் "என் தங்கை" நாடகத்தை நிதியுதவி காட்சியாக நடத்தி அக்காலத்திலேயே ரூபாய் 25,000 என சேர்ந்த தொகை முழுவதையும் நன்கொடையாக வழங்கிய வள்ளல் பிரபு சிவாஜி கணேசன் அவர்கள் என்பது உங்களில் எத்தனை பேருக்கு தெரியும்? எனவே தான் ஈழத்தமிழர்களே! உங்கள் சார்பாக அமரர் சிவாஜி கணேசன் ஒட்டுமொத்த ஈழத் தமிழ் சமூகத்தின் மாபெரும் கலைஞன் - மாமனிதன் - உலகில் தலைசிறந்த முதல் நடிகன் சிறந்த தமிழன் என நன்றியுடன் ஆவணப்படுத்துவதே எனது கடமையாகக் கொண்டு இத்தொடரை எழுதி வருகிறேன்.

இதோ "பாவேந்தர்" பாரதிதாசனாரின் வாழ்த்துக் கவிதையுடன் இவ்வார கட்டுரையை நிறைவு செய்கிறேன். வாழ்க சிவாஜி புகழ்!

இக்கவிதை பாவேந்தனாரின் "குயில்" ஏட்டில் 12.04.1960 ல் பிரசுரமானது.

"அலரி நறுமுல்லை ஆம்பல்
குருக்கத்தி அல்லி எனும்
மலரி லுயர்ந்த மலர்தா
மரை எனல் போலுலகில்
சிலரின் ஒருவர் சிறந்த
நடிகர் சிவாஜி எனப்
பலரில் ஒருவர் பக்ர்ந்தேன்
தமிழ்த் தாய் மகிழ்ந்தனளே!

எகுபதி யர்க்கு விருந்தாய்
நடிப்பின் இலக்கணத்தை
மிகுபதியாரும் வியக்க
வியக்க விளக்கியவர்
தகுபதியான சிவாஜி!
கணேசர் தமிழகத்தில்
பகுபதினாயிரம் ஆண்டுக்
கொருத்தர் பகர்ந்திடிலே!

படிப்பென்று சென்றால் இலக்கம்
பத்தாயிரம் பார்த்தளிப்பார்
துடிப்பென்று சென்றால் தூய்பசி
நீக்கி உவப்புறுவார்.
நடிப்பென்று சென்றால் அதற்குமே
நற்புகழ் நம்மதென்பார்
மடிபொன்றிலாது சிவாஜி
கணேசனார் வாழியவே!

- நினைவுகளும் - காட்சிகளும் வளரும்.




# எல்லாளன் மீது துட்டகைமுனு போர் தொடுத்த காரணம் தனது மூதாதையரின் அரசுரிமையை மீளக் கைப்பற்றவே ஆகும்

கனடா - நக்கீரன்

இலங்கையின் சுதந்திரத்துக்கு பிந்திய அரசியலை மகாவம்ச சிந்தனையே தீர்மானிக்கிறது. எல்லாளன் மற்றும் துட்டகைமுனுவுக்கு இடையிலான போர் தமிழர்களுக்கும் பவுத்த சிங்களவர்களுக்கும் இடையில் நடந்த போர் என்று சொல்லப்படுகிறது. சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் அப்படித்தான் எழுதி வைத்திருக்கிறார்கள். எழுதி வருகிறார்கள். அவர்களைப் பின்பற்றி தமிழ் வரலாற்று ஆசிரியர்களும் துட்டகைமுனு ஒரு சிங்கள இளவரசன் என்றே எழுதி வைத்திருக்கிறார்கள்.

கடந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழில் எழுதப்பட்ட பாட நூல்கள் எல்லாளன் - துட்டகைமுனு இடையிலான யுத்தத்தைத் தமிழ் - சிங்கள மன்னர்களுக்கு இடையே நடந்த போராகவே சித்திரித்திருந்தன.

நான் படித்த பாலபோதினி பாடப் புத்தகத்தில் கைமுனு, காகவண்ணதீசனினதும் விகாரைமகாதேவியினதும் மூத்தமகன் என்றும் காகவண்ணதீசனின் மனைவி விகார மகாதேவிக்கு இராசரட்டையில் இருக்கும் தமிழராட்சியை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்ற கனவு நெடுநாட்களாக இருந்தது என்றும் முதல் குழந்தை தன்னுடைய வயிற்றில் கருவான முதற்கொண்டு அந்த எண்ணம் படிப்படியாக வளர்ந்துகொண்டே சென்றது.

துட்டகைமுனு பெரியவன் ஆனபோது அவனுக்குள்ளே உருவான எண்ணங்களை அவனது தந்தை காகவண்ணதீசன் உணர்ந்தார். இராசரட்டையில் நிலவும் தமிழர் ஆட்சிக்கு எதிராக கைமுனு போர் தொடுத்தால் ஏற்படக்கூடிய எதிர்மறை விளைவுகளை நினைத்து கவலை கொண்டார். எனவே தமிழர்களுக்கு எதிராக என்றும் போர்புரிய கூடாது என கைமுனுவிடம் வாக்குப் பெறுவதற்கு முயற்சித்தார். ஆனால் கைமுனு மறுத்துவிட்டான்.

துட்டகைமுனு ஒருமுறை கட்டிலில் கால்களை முடக்கிப்படுத்திருந்தபோது தாய் ஏன் என வினாவினாள், அதற்கு 'வடக்கே தமிழரும் தெற்கே சமுத்திரமும் நெருக்கும்போது எப்படியம்மா நான் கால்களை நீட்டி படுக்கமுடியும்' என்று பதிலளித்தான்.

துட்ட கைமுனு எல்லாளன் மீது போர் தொடுக்க காகவண்ணதீசனிடம் மூன்றுமுறை அனுமதி கேட்டான். அனால் மன்னன் மறுத்துவிட்டான். எரிச்சலின் உச்சிக்கே சென்றுவிட்ட கைமுனு, தன்னுடைய தந்தை தமிழர்களைக் கண்டு அஞ்சி வாழும் பேடி என்பதைக் குறிப்பால் உணர்த்த பெண்கள் அணியும் ஆடைகளையும் நகைகளையும் காகவண்ணதீசனுக்கு பரிசாக வழங்கிவிட்டு மகாகமத்தில் இருந்து மலைநாட்டிற்கு சென்றுவிட்டான். இளவரசனின் இந்த செயலைக் கண்டு வெறுப்படைந்த மக்கள் கைமுனுவை, துட்ட (தீய) கைமுனு என்று அழைத்தார்கள். இன்று சிங்களவர்களின் தேசிய வீரன் - கதாநாயகன் - என்ற அளவுக்கு உயர்ந்த பின்னர் கூட இன்றளவும் மக்கள் அவனை දුටුගැමුණු (துட்டகைமுனு) என்றே அழைக்கப்படுகிறான்.

இவ்வாறு இளமையில் இருந்தே இனவெறியூட்டப்பட்டு வளர்த்த துட்டகைமுனு தன் தந்தையின் மறைவிற்குப் பின் பெரும்படையுடன் எல்லாளன் மீது படையெடுத்தான். இறுதி யுத்தமானது விஜிதபுரவில் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. எவ்வளவு முயன்றும் துட்டகைமுனுவால் எல்லாளனின் போர்த் தந்திரத்தை வெற்றிகொள்ள முடியவில்லை. அதனால் அகவையில் மூத்தவனான எல்லாளனைத் தனிச்சமருக்கு அழைத்தான். துட்டகைமுனு சதியினாலே எல்லாளனைக் கொன்றதாக சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

அனுராதபுரத்தை ஆண்ட அசேலனை தோற்கடித்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிய எல்லாளன் (கிமு 205 -161) சோழநாட்டில் இருந்து படையெடுத்து வந்த சோழ வம்சத்துவன் என மகாவம்சம் கூறுகிறது. அவனது 44 ஆண்டு கால ஆட்சி நீதியான, நேர்மையான ஆட்சி என மகாவம்சம் கூறுகிறது.

மகாவம்சம் மனுநீதிச் சோழன் ஒரு பசுவின் கன்று தன் மகன் சென்ற தேரின் சக்கரத்தில் அடிபட்டு இறந்துவிட்டது என்பதற்காக, தன் மகனைத் தன் தேர்க்காலில் கிடத்திக் கொன்று தாய்ப்பசுவுக்கு நீதி வழங்கியது போன்று எல்லாளன் செய்ய முற்பட்டதாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. அதாவது மகாவம்சம் மனுநீதிச் சோழனையும், எல்லாளனையும் இணைத்துக் காட்டுகிறது. இருந்தும் எல்லாளன் தனது ஆட்சியில் பவுத்த மதத்திற்கு ஆதரவு அளித்த போதிலும், அவன் வைதீகமதத்தைப் பின்பற்றியவன் ஆதலின் அவன் 'புன்னெறி' யாளன் என அதே மகாவம்சம் வருணிக்கிறது.

பெரிய புராணத்தில் திருவாரூரின் சிறப்பைச் சொல்ல முற்பட்ட சேக்கிழார் "நீதி-நெறி தவறாத மனுநீதிச் சோழன் ஆண்ட பூமி இது" என்று மனுநீதிச் சோழன் கதையைச் சொல்லிய பின்னரே பாடத் தொடங்குகிறார்.

மகாவம்சம் போரில் எல்லாள மன்னனைத் தோற்கடித்த ஆட்சியைக் கைப்பற்றிய துட்ட கைமுனுவை (கிமு 161 - 137) தமிழர்கள் ஆட்சியில் இருந்து தாய் நாட்டை விடுவித்த ஒரு தேசிய விடுதலை வீரனாகவே சித்திரிக்கிறது. அதன் கதாநாயகன் துட்டகைமுனு ஆவான்.

துட்டகைமுனுவின் 24 ஆண்டுகால ஆட்சியை 843 செய்யுட்களில் (அதிகாரம் 21 - 31) கூறும் மகாவம்சம், 44 ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி நடத்திய எல்லாளனை 21 செய்யுட்களில் மட்டுமே பாடி முடித்துவிடுகிறது. மகாவம்சத்துக்கு முந்திய தீபவம்சம் துட்டகைமுனுவின் வரலாற்றை 10 பாடல்களில் பாடி முடிக்கிறது.

மேலும் மகாவம்சம் எல்லாளனுக்கு எதிராகத் துட்டகைமுனுவின் போர் முழக்கம் "இராச்சியத்துக்கு அல்ல பவுத்தத்தின் மேன்மைக்கு" (Not for the Kingdom but for Buddhism) என நவில்கிறது. இன்றைய சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் அந்தப் போர் இந்து தமிழர் - பவுத்து சிங்களவர் இடையிலான போர் எனக் கெட்ட எண்ணத்தோடு வருணிக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. எல்லாளன் - துட்டகைமுனு யுத்தம் அரசுரிமைக்கான யுத்தம். அது பவுத்த மதத்துக்கான யுத்தம் அல்ல.

எல்லாளன் - துட்டகைமுனு போர் பற்றி வரலாற்ற ஆசிரியர்கள் மற்றும் விமர்சகர்கள் என்ன சொல்கிறார்கள்? 1956 ஆம் ஆண்டில் (தனிச் சிங்கள சட்டம் நிறைவேறிய அதே ஆண்டில்) கலாநிதி வல்பொல இராகுல தேரர் அவர்களால் எழுதி வெளியிட்ட "இலங்கையின் புத்தமத வரலாறு" என்ற நூல் இலங்கை வரலாற்றைப் பற்றி எழுதும் மாணவர்களுக்கு ஒரு முக்கிய மூல நூல்களில் (ஒரு இரண்டாம் நிலை ஆதாரம்) ஒன்றாகும். இந்தச் சிக்கல் தொடர்பாக துட்டகைமுனுவைத் தாக்க நினைப்பவர்கள் வேறு யாரையும் விட அவரை மேற்கோள் காட்டுகிறார்கள். எனவே அவர் என்ன சொல்கிறார் என்பது முக்கியமாதாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய வரலாற்றுச் சூழ்நிலையைப் பற்றிய இராகுல தேரர் அவர்களது மதிப்பீடு என்ன?

"துட்டகாமினி பவுத்த மதத்தை வெளியாரது ஆட்சியில் இருந்து விடுவிக்க ஒரு பெரிய போரை ஏற்பாடு செய்தார். அவரது போர் முழக்கம் "இராஜ்யத்துக்காக அல்ல, பவுத்தத்துக்காக" என்பதாகும். முழுச் சிங்கள இனமும் காமினியின் பதாகையின் கீழ் திரட்டப்பட்டது. இதுவே சிங்களவர்களிடையே விதைக்கப்பட்ட தேசியவாதத்தின் தொடக்கமாகும். இது பவுத்த மதத்தின் புதிய ஒருங்கமைப்பின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட ஆரோக்கியமான இளம் இரத்தத்துடன் கூடிய புதிய இனம். ஒரு வகையான மத-தேசியவாதம், இது கிட்டத்தட்ட முழு சிங்கள மக்களையும் வெறித்தனத்தனமான எழுச்சிக்கு தூண்டிவிட்டது. (பக்கம் 79)

இராகுல தேரர் வேண்டுமென்றே வரலாற்றின் உண்மைகளைத் திரித்துக் கூறுகிறார். 'இளம் காமினியின் பதாகையின் கீழ் முழு சிங்கள இனமும் ஒன்றுபட்டது" என்பது அவரது கற்பனையாகும். மகாவம்ச ஆசிரியர் மகாநாப தேரரே அப்படிச் சொல்லவில்லை.

துட்ட கைமுனுவோ அவனது மூதாதையர்களோ சிங்களவர்கள் அல்லர். அவர்கள் ஏல்லோரும் பவுத்தர்களும் அல்லர். தேவநம்கிய தீசன் (கிமு 307 - 267) பவுத்தத்துக்கு மாறும்வரை அவனும் அவனது தந்தை, பாட்டன் எல்லோரும் வைதீக மதத்தவர்கள் ஆவர். விஜயன் கூட வைதீக மதத்தவன் ஆவான்.

துட்ட கைமுனுவின் தந்தை, பாட்டன், முப்பாட்டன் எல்லோரும் நாக வம்சத்தவர் ஆவர். துட்டகைமுனு தந்தை வழியிலும் தாய் வழியிலும் நாக வம்சத்தவன் ஆவான். சிங்களவர் என்ற சொல்லோ சிங்களம் என்ற மொழியோ அவன் காலத்தில் இல்லை. சிங்கத்தைக் குறிக்கும் சிகல என்ற சொல் மகாவம்சத்தில் இரண்டு முறையே குறிக்கப்பட்டுள்ளது. தீபவம்சத்தில் ஒரு முறையே குறிக்கப்பட்டுள்ளது. எல்லாளன் மீது துட்டகைமுனு போர் தொடுத்த காரணம் தனது மூதாதையர் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த அரசுரிமையை மீளக் கைப்பற்றவே ஆகும்.

துட்ட கைமுனுவிடம் காணப்பட்ட பலமான வைதீக மரபுவழி காரணமாக அவன் கதிர்காமத்திலுள்ள முருகப் பெருமானின் பக்தனாக விளங்கினான். போருக்கு புறப்படுமுன் கதிர்காமக் கந்தனை வழிபட்டான் என மகாவம்சம் குறிப்பிடுகிறது. துட்ட கைமுனுவின் குடிவழியை அடுத்த முறை பார்ப்போம். *(தொடரும்)*

# அகழாய்வில் முதல் முறையாக தமிழ்நெடில் எழுத்துக்கள் கண்டுபிடிப்பு



தமிழகத்தில் நடந்து வரும் பல்வேறு அகழாய்வுகளில் முதல் முறையாக தமிழ்நெடில் எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடியைச் சேர்ந்த எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராஜ், நாகமலை புதுக்கோட்டையை சேர்ந்த ஆனந்தராஜ் ஆகியோர் தமிழகத்தில் கீழடி, கொடுமணல், ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நடந்து வரும் அகழாய்வுகள் தொடர்பாகவும், அவற்றை விரைவுபடுத்தி, தமிழின் தொன்மையை ஆதாரத்துடன் வெளிக்கொண்டு வரவும் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இந்த மனுக்கள் நீதிபதிகள் கிருபாகரன், புகழேந்தி ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தன.




அப்போது தொல்லியல் துறை சார்பில் ஆஜரான வக்கீல் முன்வைத்த வாதம் வருமாறு:

*356 பிராமி எழுத்துக்கள்*

"கொடுமணல் அகழாய்வில் பானை ஓடுகள், சிற்பங்கள், மண்பாண்டங்கள், சிலைகள் உள்ளிட்ட 96 பொருட்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் 356 தமிழ் பிராமி எழுத்துகள் இருந்தது தெரியவந்துள்ளது. தமிழகத்தில் இதுவரை நடந்த அகழாய்வுகளில் தமிழ் "நெடில்" எழுத்துகள் எங்கும் கிடைத்ததே இல்லை. ஆனால் கொடுமணல் அகழாய்வில் "ஆ", "ஈ" எழுத்துகள் பழங்காலத்தில் பயன்படுத்தியது தெரியவந்துள்ளது."

இந்த வாதத்தை பதிவு செய்த நீதிபதிகள், கொடுமணல் அகழாய்வில் கிடைத்துள்ள பொருட்களை பரிசோதனை செய்வதற்காக அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திற்கு 10 நாட்களில் அனுப்பவும், இதற்கான தொகையை தமிழக அரசு உடனடியாக வழங்கவும் உத்தரவிட்டனர்.



சமஸ்கிருதத்திற்கு முக்கியத்துவம் ஏன்?

அதோடு, தமிழ் கல்வெட்டுகளை படிமம் எடுப்பது தொடர்பான நிலை குறித்து நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். "இந்தியாவில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் அதிக கல்வெட்டுகள் தமிழ்மொழியிலேயே கிடைக்கின்றன. அப்படி இருக்கும்போது சமஸ்கிருதத்திற்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்கப்படுவது ஏன்?" என்றும் நீதிபதிகள்கேட்டனர்.

அதற்கு அரசு வக்கீல், "இதுவரை 11 ஆயிரம் கல்வெட்டுகள் படிமம் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ் கல்வெட்டுகளில் பெரும்பாலானவை 15 அடிக்கும் அதிக நீளமாக உள்ளன. இதனால் அவற்றை படிமம் எடுப்பதில் சிரமம் உள்ளது. அதற்கான தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களின் வயதை கார்பன் டேட்டிங் முறையில் கணித்தபோது, கி.மு.696 முதல் கி.மு.540 என்றும், கி.மு.906 முதல் கி.மு.805 என்றும் தெரிய வருகிறது" என்றார்.

அப்போது மனுதாரர் வக்கீல் ஆஜராகி, "மதுரை யானைமலை பகுதி சமண சமயத்தின் அடையாளமாக பார்க்கப்படுகிறது. ஆனால் இங்கு பல்வேறு இடங்களில் புதிய சிமெண்ட் சிலைகள் வைக்கப்பட்டு உள்ளன. இதனால் புராதன சின்னமான யானைமலை சிதைக்கப்படுகிறது" என்றார்.

அதற்கு நீதிபதிகள், உடனடியாக அவற்றை அகற்றவும், பழங்கால சின்னங்களை பாதுகாக்க முறையான நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டனர். பின்னர் இந்த வழக்கு டிசம்பர் மாதம் 7-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

***- மணிராஜ், திருநெல்வேலி.***

# இலங்கை கடலில் கடத்தல் வணிகம் “மஞ்சளுக்கு பண்டமாற்றாக தங்கம்”





மஞ்சள்... தமிழ் மக்களின் அன்றாடத்தேவையில் இடம் பிடித்த அவசியமான பொருள். அளவில் கொஞ்சமாகப்பயன்படுத்தினாலும் அதன் பயனோ பெரிது. அன்றாட சமையலில் மஞ்சள் பொடிக்கு நிச்சயம் இடம் உண்டு. மாதா மாதம் பலசரக்கு வாங்க லிஸ்ட் எழுதும்போது, முதலில் எழுதுவது மஞ்சள் பொடி தான். அந்த அளவுக்கு மங்கலகரமாகக் கருதப்படும் மஞ்சளின் மகிமை ஏராளம்.

சிறந்த கிருமிநாசினியான மஞ்சளை முன்பு மங்கையர் முகத்தில் பூசி வந்தனர். நாகரிக உலகம் அதை புறந்தள்ளி விட்டது. என்றாலும் வணிக உலகம் தரும் முகக்கிரீமானாலும், பவுடரானாலும் அதில் மஞ்சள் ஒளிந்து இருக்கத்தான் செய்கிறது.

அதுமட்டுமல்ல: மஞ்சளின் மருத்துவ குணம் அறிவியல் ரீதியாகவும் நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. மஞ்சளில் இருக்கும் “குர்குமின்” (curcumin) எனப்படும் வேதிப்பொருள். புற்றுநோய்க்கும், “இன்பிளமேஷன்” எனப்படும் எரிச்சலுக்கும் மருந்தாகப் பயன்படுகிறது.



ஆங்கிலத்தில் மஞ்சள் நிறத்தை “யெல்லோ” (yellow) என்று குறிப்பிடுகிறார்கள். தமிழில் அதையே மஞ்சள் நிறம் என்றோ, பொன்னிறம் என்றோ அழைக்கிறோம். ஆக, நிறத்தில் மஞ்சளும், தங்கமும் நிகராக இருக்கின்றன. அதோடு, தாலிக்கு ஒரு பொட்டு தங்கம் கூட வாங்க முடியாத ஏழைகள், ஒரு துண்டு மஞ்சளை அதே மஞ்சள் கயிற்றில் முடிந்து கட்டும் வழக்கமும் உண்டு.

இத்தனை சிறப்பு மிக்க மஞ்சளுக்கு பண்டமாற்றாக தங்கம் கொடுப்பதும் இப்போது ஒரு நடைமுறையாகி இருக்கிறது. எங்கே என்றால், இதோ இந்த தமிழ்நாட்டுக்கு அருகில் இருக்கும் இலங்கை கடல் பகுதியில் தான். அதுபற்றி கொஞ்சம் விளக்கமாகப் பார்ப்போம்.

## மஞ்சள் மகிமையை அறிந்த இலங்கை மக்கள்

கோவிட்-19 எனப்படும் கொரோனா பெருந்தொற்று கடந்த மார்ச் மாதம் முதல் உலகையே பதம்பார்த்து வருகிறது. எல்லா நாடுகளுமே பாதிப்பு எண்ணிக்கையில் பல லட்சங்களைத்தொட்ட நிலையில், இலங்கையில் மிதமான பாதிப்பே இருந்து வந்தது. அதனால் அந்நாட்டின் நாடாளுமன்றத்தேர்தல் கூட சிக்கலின்றி நடந்து முடிந்து விட்டது. எல்லாமே சுமுகமாகச்சென்று கொண்டு இருந்த நிலையில் கடந்த சில நாட்களாக இலங்கையில் கொரோனா பரவல் வேகம் எடுக்கத்தொடங்கி இருக்கிறது. கடந்த 6 மாதங்களுக்குமேல் சில நூறுகளில் இருந்த பாதிப்பு, இப்போது 10 ஆயிரத்தைத்தாண்டி விட்டது. இதனால் பாதிப்பு கூடுதலாக உள்ள இடங்களில் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

இதற்கு மத்தியில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்கப்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கையாக அத்தியாவசியமற்ற பொருட்கள் இறக்குமதிக்கு கடந்த ஏப்ரலில் இலங்கை அரசு தடை விதித்து விட்டது. அப்படி இறக்குமதி தடை செய்யப்பட்ட மசாலாப் பொருட்களில் மஞ்சளும் ஒன்று.

இலங்கையில் ஓராண்டுக்கு மஞ்சளின் தேவை, 7 ஆயிரம் டன். ஆனால் உள்நாட்டு விளைச்சலில் கிடைப்பது, வெறும் 2 ஆயிரம் டன் மட்டுமே. தட்டுப்பாடு 5 ஆயிரம் டன் ஆக உயர்ந்து மஞ்சளின் விலையும் கடுமையாக அதிகரித்து விட்டது.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் தான் கொரோனாவின் தாண்டவம் அதிகரிக்கத் தொடங்கியது. ஏற்கனவே மஞ்சளின் மகிமையை அறிந்து அன்றாடம் பயன்படுத்தி வரும் இலங்கை மக்கள், கொரோனா தடுப்பு நடவடிக்கையாக மஞ்சளை அதிகம் பயன்படுத்தத்தொடங்கினர். தேநீரில் சிறிது மஞ்சள் தூள் கலந்து பருகுவது, மூலிகை கசாயத்தில் மஞ்சள்பொடி சேர்ப்பது, வேப்பிலை, மஞ்சள் கலந்து நீராவி பிடிப்பதுபோன்ற பழக்க வழக்கங்கள் அதிகரித்தன. ஆனால் அவர்கள் தேவைக்கு ஏற்ப மஞ்சள் கிடைக்கவில்லை.

## கள்ளச்சந்தையினர் கையில் எடுத்த மஞ்சள் வணிகம்

இந்த தேவையை பூர்த்தி செய்யும் விதமாக இலங்கைக்கு கடல் வழியாக மஞ்சள் கடத்தும் தொழில் தொடங்கி விட்டது. பொதுவாக இலங்கைக்கு இந்தியாவில் இருந்து 5 ஆயிரம் டன் அளவுக்கு மஞ்சள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. அதிலும் தமிழ்நாட்டின் ஈரோடு மார்க்கெட்டில் இருந்து அதிக அளவில் மஞ்சள் சென்று கொண்டு இருந்தது. இந்த வணிகத்தின் பெரும்பகுதி இப்போது கடத்தல்காரர்கள் வசம்சென்று இருக்கிறது. சிறு சிறு மூடைகளில் கட்டி. வேதாரண்யம், கோடியக்கரை, சேதுபாவாசத்திரம், கன்னிராஜபுரம்,தொண்டி, மண்டபம், தனுஷ்கோடி, தூத்துக்குடி ஆகிய கடலோரப்பகுதிகளுக்குகொண்டு வரப்படும் மஞ்சள், அங்கிருந்து இலங்கையின் கடலோரப்பகுதிகளுக்கு படகுகளில் கொண்டு செல்லப்படுகிறது. ஒரு சில மீனவர்களும் இந்த கடத்தலுக்கு பயன்படுத்திக் கொள்ளப்படுகிறார்கள்.

இறக்குமதி தடைக்கு முன்பு வரை ஒரு கிலோ மஞ்சள், 427 இலங்கை ரூபாய்க்கு (இந்திய ரூபாய் மதிப்பு ரூ.167) கிடைத்து வந்தது. அது இப்போது கள்ளச்சந்தையில் 4,000-5,000 இலங்கை ரூபாயாக (இந்திய ரூபாய் மதிப்பு 1,600-2,000) உயர்ந்து விட்டது.

இந்த கள்ளச்சந்தை வணிகத்தில் தான் மஞ்சளுக்கு பண்டமாற்றாக தங்கம் பயன்படுத்தப்படுகிறது. அதாவது இலங்கை ரூபாயை இந்தியாவில் பயன்படுத்த முடியாது என்பதால் கடத்தல்காரர்கள் தாங்கள் கொடுக்கும் மஞ்சள் மதிப்புக்கு நிகராக தங்க நாணயங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள்.



இதற்கிடையே இந்த சட்ட விரோத வணிகத்தை அறிந்த இரு நாட்டு கடலோர காவல் படையினரும், சுங்கத்துறையினரும் தீவிரமாக தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த சில நாட்களாக பாம்பன், மண்டபம், தொண்டி ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான கிலோ எடையுள்ள மஞ்சள் மூடைகளை கியூ பிரிவுபோலீசார் பறிமுதல் செய்து வருகிறார்கள்.நேற்றைய தினம் கூட மண்டபத்தில் இருந்து இலங்கைக்கு கடத்தப்பட இருந்த 1825 கிலோ மஞ்சள் கைப்பற்றப்பட்டது. கடலோர காவல் படையினர், கடலில் ரோந்து செல்லும் போது, மஞ்சள் கடத்தும் கும்பலை கண்காணித்து பிடித்து வருகிறார்கள்.

**- மணிராஜ், திருநெல்வேலி.**






Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# இவ்வார ராசிபலன்

**06-11-2020 வெள்ளி தொடக்கம் 12-11-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** வீரியத்தோடு செயல்பட்டு வெற்றிகளை தெரிவித்துக் கொள்ளக்கூடிய வாரம். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப் போக்கு மாறும். சுயதொழில் வாய்ப்பு அமையும். மங்களமான திட்டமிட்ட செயல் வெற்றி பெரும். ஆபரணப் பொருள் களவு போகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல் சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விக்ன விநாயகர்
அதிர்ஷ்ட எண்: 9,7,4,0, அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எண்: I,G




**ரிஷபம்:** எடுத்த காரியத்தில் தொடுத்த வெற்றியை அடுத்தடுத்து சந்திக்கக்கூடிய வாரம். மகிழ்ச்சியான வெற்றி வரும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். செலவுகள் அதிகமாகும். திடீர் செலவு ஏற்படும். நட்பில் பிரிவு ஏற்படும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன்தரும். பேச்சில் பணிவு தேவை. காரியத்தடை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமாள்
அதிர்ஷ்ட எண்: 2,4,6,7, அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எண்: D,X




**மிதுனம்:** ஊக்கத்தோடு செயல்பட்டு உயர்வுகளை சந்திக்கக்கூடிய உன்னதமான வாரம். மனம் மகிழும் நாள். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத் தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் கூடும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு ஏற்படும். நீண்டநாள் கனவு நிறைவேறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,2,6,9
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,S




**கடகம்:** புதிய வாய்ப்புகளால் பெரிய சிறப்புக்கள் சேரக்கூடிய வாரம். நிதானத்தோடு செயல்பட வேண்டும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத் தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஐஸ்வர்யப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 1,0,3,5
அதிர்ஷ்ட நிறம்: கருமை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,B




**சிம்மம்:** நினைத்ததெல்லாம் நடக்கக்கூடிய நேர்த்தியான வாரம். மனித நேயம் மிகுதியாகும். வீண் செலவு ஏற்படும். விவேகம் வெளிப்படும். வெளியூர் பயணம் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. மன சந்தோஷம் அதிகரிக்கும். கடன் தொல்லை நீங்கும். தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு பகவான், அதிர்ஷ்ட எண்: 6,2,3,8
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,L




**கன்னி:** உள்ளத்தில் மகிழ்ச்சியும், இல்லத்தில் வளர்ச்சியும் உண்மையாகக் கிடைக்ககூடிய நன்மையான வாரம். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மங்களச் செய்தி வரும். வாகனச் செலவு ஏற்படும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத் தொழில் கவனம் தேவை. தொழிலில் லாபம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: யோக நரசிம்மர்
அதிர்ஷ்ட எண்: 9,0,9,1, அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,W




**துலாம்:** ஏற்றமும், மாற்றமும் நிறைந்த எதார்த்தமான வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத் தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கம். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. இடமாற்றம் உண்டு. தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதிதேவியார், அதிர்ஷ்ட எண்: 4,5,3,0
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,A




**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நிகழ்ச்சியும், மனம் எதிர்பார்த்த வளர்ச்சியும் கிடைக்கும் வாரம். விரக்திகள் மறையும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: துர்கா தேவி, அதிர்ஷ்ட எண்: 8,1,7,6
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,Y




**தனுசு:** பெத்தவங்களோட வாழ்த்தும், மத்தவங்களோட மரியாதையும் கிடைக்கும் வாரம். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. சிறப்புகள் சேரும். வெறுப்புக்கள் அகலும். பங்குச் சந்தை லாபம் தரும். பணவரவு உண்டு. பயணம் அனுகூலம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை கூடும். காரியங்களில் வெற்றிக் காண்பீர்கள். சுயநலம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்ம தேவர், அதிர்ஷ்ட எண்: 4,1,1,9
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,U




**மகரம்:** நண்கர்களால் பணவரவும், சொந்தங்களால் மனநிறைவும் கிடைக்கக்கூடிய வாரம். திட்டங்கள் வெற்றி பெறும். உழைப்புகள் கடுமையாக இருக்கும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வணிகத் தொழில் விரிவடையும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். நட்பு வட்டம் விரிவடையும் சுபச் செய்தி வந்து சேரும். கனவுகள் நினைவாகும். சுற்றுலா செல்லும் வாய்ப்பு உண்டு. திருஷ்டிகள் விலகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதிசேஷர், அதிர்ஷ்ட எண்: 8,3,0,2
அதிர்ஷ்ட நிறம், குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,A




**கும்பம்:** பிரயாணத்தின் மூலமாக பிரபல்யம் கிடைக்கக்கூடிய பெருமையான வாரம். சந்தோஷம் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லைகள் குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். பணத் தேவைகள் அதிகரிக்கும். தொழிலில் கவனம் தேவை. தொலைப்பேசி தகவல் தெந்தரவு ஏற்படுத்தும். புண்ணியஸ்தளங்களுக்கு செல்வீர்கள். நீண்ட நாள் முயற்சிகள் பலன் தரும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,C




**மீனம்:** நன்மையான விஷயங்களை உண்மையாக சந்திக்கக்கூடிய நல்ல வாரம். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். போதாத காலம் விலகும். தோதான எண்ணங்கள் உருவாகும். பொருளாதாரம் உயரும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். குழப்பங்கள் நீங்கும். மன நிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கொடுக்கும். வம்பு தும்புகள் தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சக்ரத்தாழ்வார், அதிர்ஷ்ட எண்: 5,1,9,2
அதிர்ஷ்ட நிறம். இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,E


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

## வீணாவின் கிறுக்கல்

பிழையின்றி எழுதி முடிக்க
நம் வாழ்க்கை ஒன்றும்
வாசித்து முடித்த
புத்தகமல்ல,
பிழையென தெரிந்து
செய்பவர் எவருமில்லை
இவ்வுலகில்,
அப்பேர்ப்பட்ட புத்தருக்கே
போதிமரம் தேவைப்படுகையில்
நமக்கொரு மாமரமாவது
தேவைப்படாதா???
தவறுகள் திருத்தப்பட
வேண்டியவையல்ல,
திருத்திக் கொள்ளப்பட வேண்டியவை!



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 920



## அளவெட்டி, ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்

"யானே தவம் செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எழ்பெருமான் - யானே
இருந்தமிழன்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது."

அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தனது பக்தர்களுக்குக் காட்டியருளிய அற்புதங்கள் பலவாகக் காணப்படுகின்றது. இறந்த சிறுவனை உயிர்ப்பித்து, சிவப்பு மந்தாரை மலரை, வெண் மந்தாரை மலராக மாற்றியது போன்ற பல அற்புதங்கள் தொடர்ந்து கொண்டே இருந்தது. ஒருநாள் இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகையின் தூபியின் பின்புறத்திலிருந்து, ஒரு வாரகாலமாகத் தீர்த்தம் ஒழுகியவாறு காணப்பட்டது. அதனை எடுத்துச் சென்றவர்கள் நோய்களிலிருந்து விடுதலை பெற்றார்கள். அத்தீர்த்தத்தின் மகிமையை எடுத்துச் சொல்ல வார்த்தையில்லை. அத்தகைய மகிமை நிறைந்ததாக அம்பிகை தூபியிலிருந்து ஒழுகிய தீர்த்தம் காணப்பட்டுள்ளது. இத்தீர்த்தம் தற்போதும் சிறிது சேமிப்பில் இருப்பதாக இவ்வாலயத்தோடு தொடர்புடையவர்கள் கூறியுள்ளார்கள்.

பல ஆண்டுகளுக்குமுன் ஒரு புரட்டாதிமாதம் சங்காபி'ேக நிகழ்ச்சி இடம்பெற்றது. இதற்குத் தேவையான பழவகைகள் பல கிடைத்தபோதிலும் பலாப்பழம் மட்டும் எங்குதேடியும் கிடைக்கவில்லை. உருப்பிராயைச் சேர்ந்த ஒரு அன்பரிடம் பலாப்பழத்தின் தேவையை அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் கூறியுள்ளார்கள். அப்பெண்மணியும் பலரிடம் கேட்டும் கிடைக்கவில்லை. அப்பொழுது அந்த அம்மையார் கோவிலுக்குரிய பழம் கிடைக்கவில்லையே என்ற கவலையோடு உறங்கிவிட்டார்.

அன்றிரவு கனவிலே ஒரு சிறுவன் தோன்றி, "உனது கொக்குவில் அக்காவளவில் இரண்டு பழம் இருக்கிறது. வாங்கி வா" என்று கூறினார். அதிகாலை தமக்கையாரிடம் சென்று கேட்டால் அங்கே பலாப்பழம் எதுவுமில்லையே என்று மரங்களை அண்ணாந்து பார்த்தார்கள். ஒரு மரத்தில் அதி உயர்ந்த கொப்பில் இரண்டு சிறு பழங்கள் பழுத்தபடி மரக்கிளைகளால் மறைக்கப்பட்டுக் காணப்பட்டன. இத்தனை நாளாக இப்பழங்கள் எமது கண்ணுக்குத் தென்படவில்லையே என அவ்வீட்டுக்காரர்கள் ஆச்சரியப்பட்டனர். நடந்ததைத் தமைக்கையாரிடம் கூறி அதைப்பறித்து நடையாகவே அப்பழத்தைக்கொண்டு வந்து கொடுத்துள்ளார். இந்த அம்மையாரின் பெயர் திருமதி சோமசுந்தரம் ஞானம்மா என்று அருட்கவி அவர்கள் தனது அருட்கவி அமுது என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான வேறுமொரு நிகழ்சிசயையும் அருட்கவி சீ. வினாசித்தம்பிப்புலவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள. திருமணமாகிப் பத்து வருடமாகியும் ஒரு பெண்ணுக்கு சந்தான பாக்கியம் கிடைக்கவில்லை. எல்லோரும் அப்பெண்ணை மலடி என்று இகழ்ச்சி செய்தார்கள். அவளது கணவனுக்கு வேறு பெண்ணைத் திருமணம் செய்துவைக்கவும் முயற்சி செய்தார்கள். கவலை பொறுக்க முடியாமல் அப்பெண் கிணற்றிலே விழுந்து தற்கொலை செய்ய முற்பட்டபோது, அயலவர்களால் காப்பாற்றப்பட்டாள்.

இச்சம்பவத்தின் பின்னர் ஒருநாள் வியாழக்கிழமை பூசை நேரம் அப்பெண் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்திற்கு வந்து தரிசித்து கண்ணீர் விட்டு அழுதாள். அருட்கவி அவர்களிடம் தனது துன்பத்தைக் கூறி வருத்தப்பட்டாள். " நீ கவலைப்படாதே கண்ணன் நிச்சயமாக உனக்கு அருள்புரிவான்" என்று அருட்கவி சீ.வினாசித்தம்பிப்புவவர் அவர்கள் ஆறுதல் கூறி அனுப்பிவைத்தார்கள். இவ்வாறாக நாட்கள் கடந்தன. கண்ணன் தனக்கு அருள்புரிவான் என்ற சரணாகதி நிலையில் குழந்தைகளற்ற அப்பெண்மணி கண்ணனையே இரவும் பகலும் வணங்கி வழிபாடு செய்து வந்தாள். அவளுடைய பக்திக்குப் பதில் கிடைத்தது. இச்சம்பவங்களின் பின் அவள் கருத்தரித்து, அழகான ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். இவ்வாறாக இவ்வாலயத்திற்கு வருகை தந்து மாங்கல்ய பாக்கியம், சந்தான பாக்கியம், நோய்பிணிகள் நீங்கி விடுதலை பெற்றமை போன்ற பல்வேறு அற்புதங்கள் பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்துள்ளன.

இவ்வாறான அற்புதங்கள் நிறைந்த ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் காலத்திற்குக் காலம் பல்வேறு திருப்பணிகள் நடைபெற்றுள்ளது. சிறு கொட்டிலாக ஆரம்பிக்கப்பட்ட இக்கோவில் தற்காலத்தில் இராஜகோபுரம், தேர் ஆகியனவற்றோடு காணப்படுகின்றது. இத்தேர் 2005 ஆம் ஆண்டு செய்யப்பட்டது. 2004 ஆம் ஆண்டும் இவ்வாலயத்திலே பல்வேறு திருப்பணிகள் செய்யப்பட்டு கும்பாபி'ேகமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

ஸ்ரீ நாகவரத நாராயணர் மீது அருட்கவி சீ. வினாசித்தம்பிப் புலவர் அவர்கள், பிள்ளைத்தமிழ் அல்லது நாராயணரந்தாதி போன்ற பலவற்றைப் பாடியுள்ளார். சுமார் 200 வருடங்களுக்கு முற்பட்ட வரலாறு கொண்ட ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயம் அளவெட்டியில் அமைந்து அருளும் புகழும் கொண்ட ஆலயமாகக் காணப்படுகின்றது.

\- *வளரும்*



மலேசிய மடல்:

# மலேசியர்களும் அமெரிக்க அதிபர் தேர்தலும்

கோலாலம்பூர், நவ.05

பாதிக்கும் மேற்பட்ட மலேசியர்கள் அமெரிக்காவின் அடுத்த அதிபராக ஜோ பைடனுக்குத்தான் ஆதரவு தெரிவித்திருந்தனர். மலேசியர்களின் அத்தகைய எண்ணம் ஈடேறுமா என்று இந்த நேரம்வரை உறுதிசெய்யப்படவில்லை.

ஆனாலும், ஜோ பைடன்தான் முன்னிலையில் இருக்கிறார். அவரின் உறுதி செய்யப்படும் என்றே தெரிகிறது.

இருந்தபோதும், முடிந்த முடிவாக இன்னார்தான் அமெரிக்காவின் அடுத்த அதிபர் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்வரை, ஒருவித தயக்கத்துடனும் பரபரப்புடனும்தான் அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவை எதிர்நோக்கி இருக்கின்றனர் மலேசியர்கள்.

காரணம், நான்கு ஆண்டுகளுக்கு கிடைத்த படிப்பினை அப்படி. எட்டு ஆண்டுகள் ஜனநாயக கட்சி சார்பில் அதிபராக இருந்த ஒபாமா விடைபெற்ற கடந்த தேர்தலில் ஹிலாரி கிளிண்டன் ஜனநாயக கட்சி சார்பில் களம் கண்டார்.

முன்னமே இரு தவணைக் காலத்திற்கு ஜனநாயகக் கட்சி நாட்டை வழிநடத்தி வந்த நிலையில், மீண்டும் அந்தக் கட்சிக்கு வாய்ப்பு கிடைக்குமா என்ற சந்தேகம் இருந்தாலும் இந்த முறை ஒரு பெண் போட்டி இடுவதால் அவருக்கு வாய்ப்பு கிடைக்கக்கூடும் என்றும் அமெரிக்க வரலாற்றில் ஒரு பெண் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு அமையப் போகிறது என்றும் பெரும்பாலான மலேசியர்கள் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், அதிரடி மனிதரும் குடியரசுக் கட்சி வேட்பாளருமான டிரம்ப்-தான் அதிபராக தேர்வு பெற்றார். அவர் வெற்றி பெற்றதாக அறிவித்த நேரத்திலேயே அவருக்கு எதிரான குரல்கள் அதுவும் வெள்ளை மாளிகைக்கு அருகிலேயே ஒலித்தன. ஏராளமான அமெரிக்கர்கள் அணிதிரண்டு டிரம்பிற்கு எதிராக முழக்கம் எழுப்பினர்.

இருந்தபோதும் அவர் நான்கு ஆண்டுகளைக் கடந்து, மீண்டும் அதிபராக இரண்டாம் தவணைக்குப் போட்டியிட குடியரசுக் கட்சி அவருக்கு வாய்ப்பு அளித்திருந்தது.

டிரம்பின் நிருவாகம், மலேசியர்களின் வாழ்வில் தனிப்பட்ட முறையில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாத நிலையில், ஜோ பைடனைப் பற்றியும் ஒன்றும் தெரியாத சூழலில் எதற்காக ஜோ பைடன்தான் அடுத்த அதிபராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று மலேசியர்கள் கருத வேண்டும்?.

டிரம்பின் தடாலடி கருத்துகளும் அதிரடி நடவடிக்கைகளும் ஒருவேளை காரணமாக இருக்கக்கூடும்.

ஒபாமா அதிபராக இருந்தபொழுது மலேசியாவிர்கு வருகை மேற்கொண்டிருக்கிறார். அப்போதைய மலேசிய பிரதமர் நஜீப்புடன் நட்பு பாராட்டி இருக்கிரார். டிரம்பைப் பொருத்தவரை அவர் மலேசியாவிற்கு அலுவல பயணம் மேற்கொள்ளாவிட்டாலும் அண்டைத் தீவு நாடான சிங்கப்பூருக்கு வந்திருக்கிறார்.

வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன்னுடனான சமரச பேச்சுக்கு சிங்கப்பூர் அரசு ஏற்பாடு செய்திருந்தது. ஆனாலும், அதற்கு முன் உலகின் பெரும் வல்லரசு நாடான அமெரிக்காவின் அதிபராக இருந்து கொண்டு சின்னஞ்சிறு நாடான வட கொரியாவுடன் அவர் மல்லுக்கு நின்றதை ஒருவரும் ரசிக்கவில்லை. குறிப்பாக, கிம் ஜோங் உன்னுடன் டிரம்ப் வாய்ச் சண்டையில் ஈடுபட்டதைக் காண சகிக்கவில்லை.

தவிர, அமெரிக்க அதிபராக பதவி ஏற்று வெள்ளை மாளிகைக்குள் நுழைந்த உடனே, புலம் பெயர்ந்து அமெரிக்காவில் நுழைந்தவர்கள் விடயத்திலும் அவர் கராராக நடந்து கொண்டார். அந்த நேரத்தில் ஜெர்மனிய பிரதமராக இருந்த எஞ்சலா மெர்க்கல் புலம் பெயர்ந்த மக்களுக்கு இனம்-மொழி-சமயம் பாராமல் அடைக்கலம் கொடுத்தார். அந்த நேரத்தில் உலக மக்களுக்கு கருணைமிக்க தாயைப் போல எஞ்சலா தென்பட்டார்.

இப்படி பதவிக்கு வந்த தொடக்கத்திலேயே மூர்க்கத்தனத்தை வெளிப்படுத்தியதாலோ என்னவோ டிரம்ப்பின்பால் மலேசியர்கள் அந்த அளவிற்கு ஈடுபாடு கொள்ளவில்லை. அதனால்தான், இந்த முறை நடைபெற்ற அதிபர் தேர்தல் பிரச்சார காலத்தில் ஜோ பைடனுக்கு, மலேசியர்கள் தங்களை அறியாமலே நேசக்கரம் நிட்டினர்.

அதேவேளை, மலேசியாவிற்கும் அமெரிக்காவிற்குமான அரச தந்திர உறவு வழக்கம்போல சீராகவே இருந்தது. குறிப்பாக, தென் சீனக் கடல் விவகாரத்தில் சீனாவின் நாட்டாண்மை மனப்பான்மையை மட்டுப்படுத்தியதுடன் இந்த விடயத்தில் மலேசியாவின் பக்கம் நிற்கிறது அமெரிக்கா.

இருந்தபோதும், அடுத்த அதிபராக ஜோ பைடன் தேர்ந்தெடுக்கப்பட்டால், தற்போதைய அரச தந்திர உறவு மேலும் நளினப்படலாம். அதைவிட, டிரம்பைப் போல சீனாவுடன் முறைத்துக் கொண்டு விரைப்பாக நிற்பதற்குப் பதிலாக ஜோ பைடன் சற்று கனிவான அணுகுமுறையைப் பிற்பற்றக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் மலேசியர்களிடம் உண்டு. அப்படிப்பட்ட நிலை எழுந்தால், இந்த மண்டலத்தில் நிலவும் அரசல் புரசலான வர்த்தகப் பதற்ற நிலையும் அகலலாம். மலேசியாவின் மூன்றாவது பெரிய வர்த்தகப் பங்காளி அமெரிக்கா என்பது குறிப்பிடத்தக்கது.

கோவிட்-19 பெருந்தாக்கத்தினால், அமெரிக்க சுகாதாரத் துறை மிகப் பெரிய அளவில் மருட்டலுக்கு ஆளாகி நிற்கிறது. அமெரிக்காவின் பொருளாதாரம் சற்று ஆட்டம் கண்டுள்ளது. வேலையில்லாப் பிரச்சினை அமெரிக்காவின் பெருந்தலைவலியாக உருவெடுத்துள்ளது. இவற்றுக்கிடையே இன முறுகல் நிலையும் அதனால் போராட்டமும் பதற்றமும்கூட எழுந்துள்ளது.

அப்படி இருந்தும் 2020-இல் முதல் எட்டு மாதங்களில் 35.44 பில்லியன் அளவுக்கு மலேசியா அமெரிக்காவுடன் வர்த்தகம் புரிந்துள்ளது. இது குறிப்பிடத்தக்க அடைவுநிலை.

அமெரிக்க மக்களைவிட உலகமே ஆவலுடன் எதிர்பார்க்கும் அதிபர் தேர்தல் முடிவு என்னவாக இருக்கும் என்று தெரியாத நிலையில், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன் வெற்றிக் கோட்டிற்கு அருகில் டிரம்பைவிட ஓர் அடி முந்தி இருப்பதாகத் தெரிகிறது.

பார்ப்போம்.

*நக்கீரன் - Nakkeeran 013-244 36 24*



# அன்பின் தொனி - 585

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**தேவனுடைய கிருபை எந்நாளுமுள்ளது**

பலவானே, பொல்லாப்பில் ஏன் பெருமைபாராட்டுகிறாய்? தேவனுடைய கிருபை எந்நாளுமுள்ளது. நீ கேடுகளைச்செய்ய எத்தனம் பண்ணுகிறாய், கபடுசெய்யும் உன் நாவு தீட்டப்பட்ட சவரகன் கத்தியைப்போல் இருக்கிறது. நன்மையைப் பார்க் கிலும் தீமையையும், யதார்த்தம் பேசுகிறதைப் பார்க்கிலும் பொய்யையும் விரும்புகிறாய். கபடமுள்ள நாவே, சங்கரிக்கும் சகல வார்த்தைகளையும் நீ விரும்புகிறாய் தேவன் உன்னை என்றென்றைக்கும் இராதபடி அழித்துப்போடுவார், அவர் உன்னைப் பிடித்து, உன் வாசஸ்தலத்திலிருந்து பிடுங்கி, நீ ஜீவனுள்ளோர் தேசத்தில் இராதபடிக்கு உன்னை நிர்மூல மாக்குவார். நீதிமான்கள் அதைக் கண்டு பயந்து, அவனைப்பார்த்து நகைத்து: இதோ, தேவனைத் தன் பெலனாக எண்ணாமல், தன் செல்வப்பெருக்கத்தை நம்பி, தன் தீவினையில் பலத்துக்கொண்ட மனுஷன் இவன்தான் என்பார்கள். நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப்போலிருக்கிறேன், தேவனுடைய கிருபையை என்றென் றைக்கும் நம்பியிருக்கிறேன். நீரே இதைச் செய்தீர் என்று உம்மை என்றென்றைக்கும் துதித்து, உமது நாமத்திற்குக் காத்திருப்பேன், உம்முடைய பரிசுத்தவான்களுக்கு முன்பாக அது நலமாயிருக்கிறது.
*- சங்கீதம் 52: 1-9*

**தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்**

தேவனே, எனக்கு இரங்கும், மனுஷன் என்னை விழுங்கப்பார்க்கிறான், நாள்தோறும் போர்செய்து, என்னை ஒடுக்குகிறான். என் சத்துருக்கள் நாள்தோறும் என்னை விழுங்கப்பார்க்கிறார்கள், உன்னதமானவரே, எனக்கு விரோதமாய் அகங்கரித்துப் போர் செய்கிறவர்கள் அநேகர். நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன். தேவனை முன்னிட்டு அவ ருடைய வார்த்தையைப் புகழுவேன், தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன், மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்? நித்தமும் என் வார்த்தைகளைப் புரட்டுகிறார்கள், எனக்குத் தீங்குசெய்வதே அவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது. அவர்கள் ஏகமாய்க் கூடி, பதிவிருக்கிறார்கள், என் பிராணனை வாங்க விரும்பி, என் காலடிகளைத் தொடர் ந்துவருகிறார்கள். அவர்கள் தங்கள் அக்கிரமத்தினால் தப்புவார்களோ? தேவனே, கோபங்கொண்டு ஜனங்களைக் கீழே தள்ளும். என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர், என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும், அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது? நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள், தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன். தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன், கர்த்தரை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன். தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான்? தேவனே, நான் உமக்குப் பண்ணின பொருத்தனைகள் என் மேல் இருக்கிறது, உமக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துவேன். நான் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி, நீர் என் ஆத்துமாவை மரணத்துக்கும் என் கால்களை இடறலுக்கும் தப்புவி யாதிருப்பீரோ?
*- சங்கீதம் 56: 1-13*

**தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது**

எனக்கு இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும், உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது, விக்கினங்கள் கடந்து போகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன். எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன். என்னை விழுங்கப்பார்க்கிறவன் என்னை நிந்திக்கையில், அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார், தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும் அனுப்புவார். என் ஆத்துமா சிங்கங்களின் நடுவிலிருக்கிறது, தீயை இறைக்கிற மனுபுத்திரருக்குள்ளே கிடக்கிறேன், அவர்கள் பற்கள் ஈட்டிகளும் அம்புகளும், அவர்கள் நாவு கருக்கான பட்டயமுமாயிருக்கிறது. தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும், உமது மகிமை பூமியனைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக. என் கால்களுக்குக் கண்ணியை வைத்திருக்கிறார்கள், என் ஆத்துமா தொய்ந்துபோயிற்று, எனக்கு முன்பாகக் குழியை வெட்டி, அதின் நடுவிலே விழுந் தார்கள். என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, நான் பாடிக்கீர்த்தனம் பண்ணுவேன். என் மகிமையே, விழி, வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள்: அதிகாலையில் விழித்துக்கொள்வேன். ஆண்டவரே, ஜனங்களுக்குள்ளே உம்மைத் துதிப்பேன், ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன். உமது கிருபை வானபரியந்தமும், உமது சத்தியம் மேகமண்டலங்கள்பரியந்தமும் எட்டுகிறது. தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும், உமது மகிமை பூமியனைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக. *- சங்கீதம் 57: 1-11*

**நியாயஞ்செய்கிற தேவன் உண்டென்றும் மனுக்ஷன் சொல்லுான்**

மவுனமாயிருக்கிறவர்களே, நீங்கள் மெய்யாய் நீதியைப் பேசுவீர்களோ? மனுபுத்திரரே, நியாயமாய்த் தீர்ப்புசெய்வீர்களோ? மனதார நியாயக்கேடு செய்கிறீர்கள், பூமியிலே உங்கள் கைகளின் கொடுமையை நிறுத்துக் கொடுக்கிறீர்கள். துன்மார்க்கர் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் பேதலிக்கிறார்கள், தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் பொய் சொல்லி வழிதப்பிப் போகிறார்கள். சர்ப்பத்தின் விஷத்திற்கு ஒப்பானவிஷம் அவர்களில் இருக்கிறது. பாம்பாட்டிகள் விநோதமாய் ஊதினாலும் அவர்கள் ஊதும் சத்தத்திற்குச் செவிகொடாதபடிக்குத் தன் காதை அடைக்கிற செவிட்டு விரியனைப்போல் இருக்கிறார்கள். தேவனே, அவர்கள் வாயிலுள்ள பற்களைத் தகர்த்துப்போடும், கர்த்தாவே, பாலசிங் கங்களின் கடைவாய்ப்பற்களை நொறுக்கிப்போடும். கடந்தோடுகிற தண்ணீரைப்போல் அவர்கள் கழிந்துபோகட்டும், அவன் தன் அம்புகளைத் தொடுக்கும்போது அவைகள் சின்னபின்னமாய்ப் போகக்கடவது. கரைந்துபோகிற நத்தையைப்போல் ஒழிந்துபோவார்களாக, ஸ்திரீயின் முதிராப் பிண்டத்தைப்போல் சூரியனைக் காணாதிருப்பார்களாக. முள் நெருப்பினால் உங்கள் பானைகளில் சூடேறுமுன்னே பச்சையானதையும் எரிந்துபோனதையும் அவர் சுழல்காற்றினால் அடித்துக் கொண்டுபோவார். பழிவாங்குதலை நீதிமான் காணும்போது மகிழுவான், அவன் தன் பாதங்களைத் துன்மார்க்கனுடைய இரத்தத்திலே கழுவுவான். அப்பொழுது, மெய்யாய் நீதிமானுக்குப்பலன் உண்டென்றும், மெய்யாய் பூமியிலே நியாயஞ் செய்கிற தேவன் உண்டென்றும் மனுஷன் சொல்லுவான்.- *சங்கீதம் 58: 1- 11*

*தொடரும்...*


## கேரளா மூலிகை மருத்துவம்

### வைத்திரயர் - சஞ்சீவ ராஜூ

பரம்பரை மூலிகை வைத்தியசாலை
பதினொரு பரம்பரையாக நாடி பார்த்து உங்களது உடம்பிலிருக்கும் நோய்களைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை தருகின்ற வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த சஞ்சீவ ராஜூ இந்தியா முதல் மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று மருத்துவம் செய்த பின் தற்போது கனடா வந்துள்ளார்.

பல இடங்களில் மருத்துவம் செய்து நம்பிக்கை இழந்து விட்டீர்களா? கவலைப் பட வேண்டாம். பக்க விளைவுகளற்ற தகுந்த மருந்துகளைப் பெற்று உங்கள் வருத்தங்கள் குணமாக ஒரு முறை நம்மிடம் வாருங்கள். நல்ல தீர்வு பெற்றுச் செல்லுங்கள். இலவச ஆலோசனை வழங்கப்படும்.





வேர், பச்சை இலைகள், பட்டைகள், கிழங்குகளில் இருந்து பெறப்பட்டு பொடியாக, கசாயமாக, குளிசைகளாக, லேகியமாக இந்த இயற்கை மருந்துகள் தரப்படும்.
எந்தவித பக்க விளைவுகளும் கிடையாது! நம்பி வாருங்கள்! நலமுடன் வாழுங்கள்!

ஆஸ்துமா, அலர்ஜி, மூச்சுத்திணறல், தும்மல், நெஞ்சுச்சளி, தோல் வியாதி சொறியாஸிஸ், முடக்குவாதம், மூட்டு வலி, வயிற்றுவலி, இடுப்பு வலி, முதுகு வலி, கை-கால் வலி, கழுத்துவலி, ஒற்றைத் தலைவலி, பக்க வாதம், நரம்புத் தளர்ச்சி, நீரழிவு (சர்க்கரை வியாதி), சிறுநீரகக்கற்கள், வாய்வுத் தொல்லைகள், குடற் புண், இரத்த பலம் அபிவிருத்தி, ஆண்களுக்கான பிரச்சனைகள், ஆண்மைக் குறைவு, உடல் பருமன்-குறைக்க, கூட்டுவதற்கு, முடி உதிர்தல், ஞாபக மறதி, உள்மூலம், வெளிமூலம், பகந்திரி மூலம், கால் வெடிப்பு, மஞ்சட்காமாலை, வெண்குஷ்டம், பெண்களுக்கான மாதவிடாய்ப் பிரச்சனை, நெஞ்செரிதல், மலச்சிக்கல், செக்ஸ் பிரச்சினை, மன அழுத்தம், காக்கா வலிப்பு, ஞாபக மறதி, சரவாங்கி போன்ற நோய்களை மூலிகை வைத்தியம் மூலம் குணப்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பப்பை கோளாறுகள், குழந்தையின்மைக்கான மருத்துவத்துடன், சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படும். அத்துடன் போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்துகளும் தரப்படும்.

2900 MARKHAM ROAD, MajesticCity UNIT L 13 ,
OPP. VASANTHAM SUPER MARKET, MARKHAM RD,
SCARBOROUGH, ON, M1X 1E6

647-294-3189

# மரண அறிவித்தல்



## திரு கந்தையா இராசையா

ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் இலங்கை
நீர்ப்பாசனத் திணைக்களம், Technical officer

யாழ். மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா இராசையா அவர்கள் 02-11-2020 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா தம்பதிகளின் அன்பு மகனும், திரு. திருமதி இராசா தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமலர் அவர்களின் அன்புக் கணவரும்,

சசிகலா (ஜேர்மனி), மோகனதாசன் (கனடா), உதயதாசன் (ஜேர்மனி), சதீஸ்வரி (ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), சந்திரவதனி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன், ஜெயரூபி (சாந்தி), தவச்செல்வி (அருந்தி), ஜெயபாலன் (ஜெயா), பன்னீர்செல்வம் (செல்வம்), சந்திரகுமார் (ராஜன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

சிவக்கொழுந்து, காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், செல்லத்துரை, நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கனகலிங்கம், பரமலிங்கம், குமார்லிங்கம், காலஞ்சென்ற மருதலிங்கம், இரத்தினசிங்கம், சரஸ்வதி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

பிரசாத், பிரசன்னா, பிரவீனா, சுபாங்கி, யதீசன், உஷாந், உஷானா, உஷாஜி, சிந்து, சினோயா, ஜெனுசன், சுஜீபன், சஜீபன், சயானி, சங்கீத், சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக 08-11-2020 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:00 மணி தொடக்கம் 9:00 மணிவரை Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1 Canada ல் வைகப்பட்டு, பின்னர் 09-11-2020 திங்கட்கிழமை அன்று காலை 8:00 மணி தொடக்கம் 11:30 மணிவரை Highland Hills Funeral Home and Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0 Canada ல் கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 15-11-1935 | 02-11-2020 |

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
தகவல்: குடும்பத்தினர்

**தொடர்புகளுக்கு**

**மோகன் - மகன்: +16478068435**
**உதயன் - மகன்: +4917622200279**
**கலா - மகள்: +49224173335**
**ஈஸ் - மகள்: +492285509778**
**சாந்தி - மகள்: +492283691957**
**வதனி - மகள்: +41443010226**

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LiFe Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் தனி வீச்சு வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree 416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1283 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 6, 2020

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாவதில் நிச்சயமற்ற தன்மை தென்படுவதால் நான் அதனை நன்கு அவதானித்து வருகிறேன்

## – கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவிப்பு



"தற்போது அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்புக்கள் நிறைவு பெற்று, வாக்குகள் எண்ணப்படுவதும், வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட தொகுதிகளின் அல்லது மாநிலங்களின் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருப்பையும் நாம் அறியக்கூடியதாக உள்ளது.

எனினும் அங்கு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாவதில் ஒரு நிச்சயமற்ற தன்மை தென்படுவதால் நான் அதனை நன்கு அவதானித்து வருகிறேன். இது தொடர்பாக நான் தேர்தலுக்கு முன்னரும் குறிப்பிட்டிருந்தேன். அங்கு எந்த வகையின பாதிப்புக்கள் இடம்பெறுகின்றனவோ அவற்றின் தாக்கம் எமது நாட்டையும் சில வேளை பாதிக்கலாம். எனவே நாம் அவதானமாக இருக்க வேண்டும் என்று அன்று குறிப்பிட்டிருந்தேன்.

இன்றும் நான் அதையே கூறுகின்றேன். அங்கு தேர்தல் நடந்து அதன் முடிவுகள் ஜனாநாயகத்தை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட தேர்தல் நடைமுறைகளுக்கு ஏற்ப முடிவுகள் வெளியாக வேண்டும் . அந்த தேர்தல் முடிவுகளை போட்டியிட்ட ஒவ்வொரு வேட்பாளரும் நீதியானது என எண்ணி நாட்டு மக்கள் மீதும் தேர்தலை நடத்திய அதிகாரிகள் மீதும் நம்பிக்கை வைத்து அந்த



முடிவுகளுக்கு கட்டுப்பட வேண்டும்"

இவ்வாறு நேற்று முன்தினம் புதன்கிழமை ஒட்டாவா மாநகரில் அமெரிக்க தேர்தல் முடிவுகள் தொடர்பாக பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்.

"இன்று புதன்கிழமை நான் எமது பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது, கூறினேன், அமெரிக்காவில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில், இருவருக்கும் கடும் போட்டி நிலவுகின்றது. எனினும் அந்த நாட்டின் சட்டங்களுக்கு அமைய தேர்தல் முடிவுகள் வெளியாக வேண்டும். ஆனால் முடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏற்படுவதால், நாம் அங்கு உள்ள நிலைமைகளை அவதானித்த வண்ணம் உள்ளோம். எமது நாட்டின் தூதகர அதிகாரிகளும் அங்கிருந்து எமக்கு நிலைமைகளை அறியத் தந்த வண்ணம் உள்ளார்கள். எனவே நாம் அனைத்தை அவதானித்த வண்ணம் உள்ளோம்." என்றார்

இந்த நேரத்தில் பிரதமர் அவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் ட்ரம்ப் அவர்கள் விடுத்துள்ள அறிக்கைகள் பற்றியோ அன்றி தேர்தல் முடிவுகள் தொடர்பாக தனக்கு நம்பிக்கை இல்லாமல் உள்ளதால் நீதி மன்றத்தை நாடவுள்ளதாகவோ எதையும் தெரிவிக்கைவில்லை.

# ஸ்காபுறோவில் சிறப்புற நடைபெற்ற தமிழ்நாடு 'இனிய நந்தவனம்' சஞ்சிகையின் 'கனடா சிறப்பிதழ்–3' இனது அறிமுக வைபவம்







கடந்த 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற தமிழ்நாடு "இனிய நந்தவனம்" சஞ்சிகையின் "கனடா சிறப்பிதழ்-3" இனது அறிமுக வைபவத்தில் பல்வேறு துறை சார்ந்த அழைக்கப்பட்டவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த. இந்த வைபவம் ஸ்காபுறோ நகரில் எக்ளிங்கடன்-மிட்லன்ட் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள சீரடி சாயிபாபா ஆலயத்தில் நடைபெற்றது. மேற்படி ஆலயத்தை நிர்வகித்து வருகின்றவர்களான திரு. நரேந்திரா- திருமதி சசிகலா நரேந்திரா தம்பதியின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'இனிய நந்தவனம்' சஞ்சிகையின் கனடா சிறப்பிதழ்கள் ஏற்கெனவே கனடாவில் இரண்டு இதழ்கள் வெளிவந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

# முல்லைமணிவண்ணன் ஆதரவு உறுப்பினர்களின் பதவிகளை பறிக்கிறது கஜேந்திரகுமார் முன்னணி



உள்ளூராட்சி சபைகளின் நான்கு உறுப்பினர்களை பதவியில் இருந்து நீக்குமாறு, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி யாழ். மாவட்ட உதவி தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அறிவித்துள்ளது.

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர்களான தர்சிபா, டென்சி ஆகியோரும், சாவகச்சேரி பிரதேச சபைஉறுப்பினர்களான நிதர்சன், சிவகுமார் கஜன் ஆகிய நால்வருமே, கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

எனவே இவர்களை சபைகளின் உறுப்பினர் பதவிகளில் இருந்து நீக்குமாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினால் யாழ். மாவட்ட உதவி தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த விடயத்தில் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் மிகவும் மோசமாக நடந்து கொள்வதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

